Regd. No. M. 2569

11 JUN 1937

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 8

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 3, 4

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1355 - 56, துல்ஹஜ்ஜு, முஹற்றம்மீ
1937ஆம் மார்ச், ஏப்ரல்மீ

ஹஜ்ஜு மலர்

நாங்கள் ஹிஸ் ஹோலினஸ் அல்லாமா ஹாபிஜ் காரீ அல்ஹாஜ் ஷாஹ் முகம்மது அப்துல் அலீம் சாஹிப் சித்தீகி, மீரட், அலீ ஜனாப் அல்ஹாஜ் ஜே. எம். முகம்மது இஸ்மாயீல் ராவுத்தர் இவர்கள் தலைமையில் ஹஜ்ஜுப் பிரயாணஞ் செய்து வந்த பூரண விபரங்களும் இதில் அடங்கியுள்ளன.

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

அட்டவணை

அல்குர்ஆன் 57
அல்ஹதீது 59
எங்கள் ஹஜ்ஜு யாத்திரை 60
முஸாபிர்கானு 61
ஹஜ்ஜு கமிட்டியாரின் அரிய சேவைகள் 62
கப்பல் பிரயாணம் 63
சாப்பாடு வசதிகள், வைத்திய வசதி 64
கப்பலில் ஹஜ்ஜு கமிட்டி, கராய்ச்சி துறை முகம், ஹைதராபாத் நிஜாமின் மார்க்கசேவை 65
டீ பார்ட்டி வைபவம், வஅஜ் மஜ்லிசு 66
இஹ்ரும் 68
ஜித்தா துறைமுகம், ஜித்தாவின் தோற்றம், மக்கா புறப்பாடு 69
ஹறம் எல்லை, மக்கா பிரவேசம், கஃபா ஷரீப் 70
உம்ரு நிறைவேற்றல், பாங்கு தொழுகை, ஸபா, மர்வா .... 76 ஜம்ஜம் கிணறு 78
ஹஜறுல் அஸ்வத் 80
கஃபாவின் போர்வை 81
மத்ரஸாக்கள் .... 83 மக்காவில் விடுதி 84
ஹஜ்ஜு, மினு, அறபா மைதானம் 85
பிரசங்க சுருக்கம் 86
முஜ்தலிபா .... 88 குர்பானீ 89
வேதக்காரர்களுக்கு ஒரு வார்த்தை 90
மஸ்ஜிதுல்கப்ஷ், "மஸ்ஜிதுல் பைஆ"வின் சிறப்பு மஸ்ஜிதுல் கைப், மஸ்ஜிதுல் கவ்தர், மத்ராஸி முதவ்விப் அஜாக்கிரதைக்கு தாக்கீது 92
அப்துல்லா ஷைபியின் தாவத்து, ஜுபைதா கால்வாய், ஹஜ்ஜின் கிரியைகளைப்பற்றிய சில விஷயங்கள் 93
மதீனுமுனவ்வரா பிரயாணம், மதீனுவின் தோற்றம் 95
"ரவ்லா ஷரீப்" தரிசனம், குலபாக்கள் ஜியாரத்து, மஸ்ஜிதுந்நபவீ 96
"ஜன்னத்துல் பகீஉ"க்கு விஜயம், "எத்தீம் கானு" மீட்டிங், "மஸ்ஜிதுல் குபா" விஜயம் "பீரகாத்தம்" கிணறு, உஹது மலைக்கு விஜயம், "மஸ்ஜிதெ கிப்லதைன்" விஜயம் 101
ரவ்லா ஷரீபைவிட்டு பிரியும்போது ஹாஜிகட்கு ஏற்படும் துக்கம், ஜித்தாவிலிருந்து பிரயாணம், ஹிஜாஸில் போக்கு வரத்து 102
ஹஜ்ஜு பிரயாணத்தின் செலவு விவரங்கள் 103

218942
11 JUN 1937
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 8	ஹிஜ்ரி 1355 துல்ஹஜ்ஜு, முஹற்றம் மீ 1937ஹு மார்ச், எப்ரல் மீ	இதழ் 3 & 4

அல் குர்ஆன்

பெருங்கருணையாளனும் பேரருளாளனுமான அல்லாஹ்வின் திருநாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.)

ஜனங்களுக்கு புனிதமாகவும், அகிலத்தாருக்கு நேர்வழி காட்டியாகவும் நிர்மாணிக்கப்பட்ட முதல் வீடானது நிச்சயமாக மக்காவிலிருப்பதாக இருக்கிறது. அதிலே (அநேகம்) தெளிவான அத்தாட்சிகளிருக்கின்றன. (இன்னும்) இப்ராஹீம் நின்றவிடம் (அவைகளிலொன்று). மேலும், எவர் அதில் பிரவேசிக்கிறாரோ அச்சமற்றவராகி விடுகிறார். இன்னும், அல்லாஹ்வுக்காக அவ்வீட்டை ஹஜ்ஜுச் செய்தல் ஜனங்கள்மீது (அதாவது) அதன்பால் செல்லச் சக்தியுள்ளவர்மீது கடமையாகும். இன்னும், எவர் (இக்கடமையை) நிராகரிக்கிறாரோ (அவர் அதற்குரிய தண்டனையை அனுபவிப்பார். (ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரின்பால் தேவையற்றவன்.

(திரு குர்ஆன்.)

சோதரீர்! சத்திய சன்மார்க்க திருமறையாம் புருக்கானுல் ஹமீதென்னும் குர்ஆன் ஷரீபில் சொல்லப்பட்டுள்ள மேற்கண்ட திருவசனமானது ஈராருத்தத்திற்கு இடமில்லாதவாறு தெளிவாக இருக்கிறது. இவ்வசனத்தில் ஹஜ்ஜுச் செய்வது மானிடர்மீது கடமை என்பதும், திருமக்காவிலுள்ள கஃபா என்ற தேவாலயம்தான் உலகில் முதலாவதாக வணக்கத்திற்கென ஏற்பட்டதென்பதும், கஃபா என்ற அத்தேவாலயத்தின் சிறப்பும் தெளிவுபடக் கூறப்பட்டிருக்கின்றன. ஆயினும், சன்மார்க்க பக்தர்களான நமது முஸ்லிம் சகோதரர்களிற் பலர் ஹஜ்ஜுச்செய்ய வேண்டிய பொறுப்பை நன்குணர்ந்திருந்தும் அதனை நிறைவேற்றுவதைத் தாமதப் படுத்திக்கொண்டே வருகின்றனர். இதற்குக் காரணம் திருகுர்ஆன் கட்டளையை மீறவேண்டுமென்பதோ, அல்லது அதனை அலக்ஷியம் செய்யவேண்டுமென்பதோவல்ல. ஆனால், "அங்குச் செல்லச் சக்தியுள்ளவருக்கு" என்பதாக இவ்வேத

வசனத்திற் கூறப்பட்டுள்ள நிபந்தனையின் கருத்து நன்கு விளங்காமையே யாகும். ஆகவே, இச்சிறிய வியாசத்தில் அதனைக் குறித்த விபரங்களைச் சுருக்கமாகக் கூறுவாம். இஸ்லாத்தில் விதிக்கப்பட்டுள்ள ஐந்து கடமைகளும் எல்லோராலும் எல்லாக் காலத்திலும் நிறைவேற்றத் தக்கனவாயில்லை. அல்லாஹு தஆலாவைத்தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறு யாருமில்லை என்று சாக்ஷியங் கூறுவதும், தொழுகையை நிறைவேற்றுவதும் ஏழை, பணக்காரர், நோயாளி, தேகசுகமுள்ளவர் என்ற பாகுபாடின்றி எல்லோரும் செய்யக்கூடிய கடமையாக இருக்கின்றது. ஜக்காத் என்னும் வரியானது பணக்காரர்களுக்கு மட்டிலும் விதிக்கப்பட்டிருக்கிறது. றமலான் மாதத்தில் நோன்பு நோற்பதானது தேக சுகமுள்ளவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஹஜ்ஜு கடமையானது திருமக்கா செல்ல சக்தியுள்ளவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஐந்தாவது கடமையை நிறைவேற்றுவது கொண்டுதான் மானிடர்களது சன்மார்க்கம் பூர்த்தி யடைகின்றது. நாம் எடுத்துக்கொண்ட இவ்வியாசம் ஹஜ்ஜைப் பற்றியதாக இருப்பதால் தொழுகை முதலிய கடமைகளிலுள்ள இதர விபரங்களை நிறுத்திக்கொண்டு ஹஜ்ஜு கடமையிலுள்ள சில விஷயங்களை மட்டிலும் சிறிது விபரமாக எழுதுவாம்.

ஹஜ்ஜு கடமையாகுவதற்குரிய பல ஷரத்துகளில் ஹஜ்ஜுக்குச் செல்லச் சக்தி பெற்றிருக்கவேண்டும் என்பதும் ஒன்று. அதாவது ஹஜ்ஜுக்குச் செல்ல வாகனம் அல்லது அதற்குரிய செலவு தொகையும், வழியில் உணவுக்கு வேண்டிய சாமக்கிரியைகளும் இருக்க வேண்டும். அதாவது ஹஜ்ஜுக்குச் சென்று திரும்ப வரும் வரையில் தனது குடும்பத்தாருக்கும், வீட்டின் மாராமத்து முதலிய செலவுகளுக்கும் கொடுத்தது போக அதிகமாகவுள்ள பணத்தில் வழிச்செலவுக்கும் வாகனத்திற்கும் வசதி இருக்கவேண்டும் என்பதே.

எனவே, ஒருவருக்குக் குடியிருக்க வீடும், ஊழியக்காரரும், உடுத்த உடையும், அவசியமான இதர சாமான்கள் மட்டிலுமிருந்தால் அவர்மீது ஹஜ்ஜு கடமையல்ல. ஒருவருக்கு வீடுமில்லை, இதர சாமான்களுமில்லை, ஆனால் அவரிடம் பணமிருக்கிறது. அப்பணத்தினால் அவர் ஹஜ்ஜுச் செய்யவும், குடியிருக்க வீட்டையும், வேலைக்காரர்களையும், முக்கிய செலவுகளுக்குரிய ஏற்பாடுகளையும் உண்டுபண்ணிக் கொள்ள முடியுமாயின் அவர்மீது ஹஜ்ஜு கடமையாகும். அவர் ஹஜ்ஜுக்குச் செல்லாமல் வேறுவகையில் அப்பணத்தைச் செலவுசெய்து விடுவாராயின் அவர் குற்றவாளியாவார்.

தன்னுடைய குடியிருப்புக்கு அவசியமில்லாத வீடுகளைக் கிரயம்செய்து ஹஜ்ஜுக்குச் செல்லவேண்டும். ஆனால், தான் குடியிருக்கிற வீட்டைக் கிரயஞ்செய்துவிட்டு ஹஜ்ஜுக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை. ஒருவரிடம் விசாலமான வீடு இருந்து, தனது குடியிருப்புக்கு மட்டிலும் அதில் ஒருபகுதியைப் பிரித்து வைத்துக்கொண்டு பாக்கியை விற்பனைசெய்து ஹஜ்ஜுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. தவிரவும், தன்னிடமுள்ள பெரிய வீட்டை விற்பனை செய்து, தனக்கு ஒரு சிறிய வீட்டைக் கிரயம் வாங்கிக்கொண்டு எஞ்சிய பணத்தைக்கொண்டு ஹஜ்ஜுக்குச் செல்ல வேண்டிய அவசியமுமில்லை.

ஒருவர் வியாபாரம் செய்வதையே தனது ஜீவனத்திற்குரிய முக்கிய தொழிலாக வைத்திருக்கிறார். இவ்வித நிலைமையில் ஹஜ்ஜுக்குப் போகவர ஏற்படும் செலவு, அக்காலத்திலேற்படும் குடும்பச் செலவுகள் ஆகியவைகளுக்கு அவ்வியாபாரத்திலிருந்து எடுத்துக்கொண்ட பின்னரும் வியாபாரத்தை ஒழுங்காகச் செய்துவரப் பணமிருக்குமாயின் அவர் ஹஜ்ஜுக்குச் செல்லவேண்டும். அவ்வாறில்லையேல், வியாபார சாமான்களைவிற்று ஹஜ்ஜுச் செய்து விட்டுப் பின்னர் தொழில் இல்லாமல் கஷ்டப்பட வேண்டியதில்லை.

தன்னிடமுள்ள நஞ்சை புஞ்சை முதலிய விவசாய பூமியில் ஒரு பாகத்தை விற்பனை செய்து ஹஜ்ஜுக்குச் செல்லவும், ஹஜ்ஜிலிருந்து திரும்பவந்தபின் எஞ்சியுள்ள நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து குடும்பச் செலவைச் செய்து கொள்ளவும் முடியுமாயின் அப்படி நிலத்தை விற்றுவிட்டு ஹஜ்ஜுக்குச் செல்வது கடமையாகும்.

தனக்கு குடியிருப்புக்குத் தேவையில்லா பல அதிகப்படியாக இருக்கிற வீடுகளையும், தனது குடும்பச் செலவுக்குப் போதிய வருவாயைத் தருகிற நிலத்திற்குமேல் அதிகமா இருக்கிற நிலங்களையும் விற்பனைசெய்து ஹஜ்ஜுக்குச் செல்லவேண்டும் என்றும், வியாபாரத்தொழிலிலேயே காலக்ஷேபம் செய்யும் கனவான்கள்

தங்களது வியாபாரத்தைப் பாதிக்காத முறையில் தங்கள் வியாபார சாமான்களை விற்றேனும் ஹஜ்ஜுச் செய்யவேண்டும் என்றும் இஸ்லாமியச் சட்டங்கள் கூறுவதை மார்க்கபத்தி நிறைந்த சகோதரர்கள் இனியேனும் உணர்ந்து தங்களது இப்புநித கடமையை நிறைவேற்றுவார்களாக. தவிரவும் தங்களிடம், ஹஜ்ஜுக் கடமை யாகுவதற்கு வேண்டிய பொருள்கள் வந்தவுடன் தங்களுக்குக் கிடைக்கிற முதல் சந்தர்ப்பத்தை ஹஜ்ஜுச் செய்வதற்கு உபயோகித்துக் கொள்வார்களாக. ஏனெனில், ஹஜ்ஜுக் கடமையான பின்னர் அதனை நிறைவேற்றாமலிருந்து அப்புறம் செல்வத்தையிழந்து வறுமைக்காளாகி விட்டால் முன்னர் கடமையாக ஏற்பட்ட ஹஜ்ஜானது அவரை விட்டு நீங்கி விடுவதில்லை. ஒருவர்மீது ஹஜ்ஜு கடமை ஏற்பட்டு அதனை நிறைவேற்றாமல் பிற்படுத்திக் கொண்டே இருப்பாராயின் அவர் பாஸிக்காகி விடுவார் என்றும் இஸ்லாமியச் சட்டங்கள் கூறுகின்றன. ஆகவே, நம்மிலுள்ள தனவந்தர்களும் நிலசுவான்தார்களும் தங்களுடைய இக்கடமையை நிறைவேற்றுவதில் தாமதஞ் செய்யாதிருப்பார்களாக. நம் தென்னாட்டைப் பொருத்த மட்டில் அநேக நண்பர்கள் தங்கள்மீது ஹஜ்ஜுகடமையாக விருந்தும் அன்னோர் பற்பலவாறான சாக்குப் போக்குகளைச் சொல்லிக்கொண்டு அதனை நிறைவேற்றாதிருந்து வருகின்றனர். அன்னோர் அதி சீக்கிரம் தங்கள் கடமையை நிறைவேற்ற முற்படுவார்களாக.

அல்ஹதீது

“இஸ்லாம் லாஇலாஹ இல்லல்லாஹுவ அன்ன முஹம்மதன் அப்துஹுவறஸூலுஹு என்று சாக்ஷியங் கூறுதல், தொழுகையை நிறைவேற்றுதல், ஜக்காத்தைக் கொடுத்தல், ஹஜ்ஜுச் செய்தல், றமலான் மாதம் நோன்பு வைத்தல் ஆகிய ஐந்து காரியங்களின்மீது ஏற்பட்டிருக்கிறது” என்பதாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய்மலர்ந்தருளியதாக ஹஜ்றத் அப்துல்லாஹிப்னு உமர் (றலி.) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

இந்த ஹதீது ஸஹீஹு புகாரீ, ஸஹீஹு முஸ்லிம் ஆகிய கிரந்தங்களில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஹஜ்ஜுச் செய்வதானது இஸ்லாம் மதத்தின் முக்கியாம்சங்களில் ஒன்று என்பதும், சக்தியுள்ள ஒருவர் இந்த ஹஜ்ஜை நிறைவேற்ற வில்லையாயின் அவர் இஸ்லாம் மதத்தின் முக்கியாம்ச அடிப்படைகளைப் பூர்த்தி செய்யவில்லை யென்பதும் இந்த ஹதீதிலிருந்து தெரியவருகிறது.

“பைத்துல்லாஹ் வரையில் செல்வதற்கான வாகனத்தையும் வழிச்செலவையும் உள்ளவர் ஹஜ்ஜுச் செய்யவில்லையானால் அவர் எஹூதியாகி மரிப்பது அல்லது கிறிஸ்துவராகி மரிப்பதைப்பற்றி எவ்விதக் கவலையுமில்லை” என்பதாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக ஹஜ்றத் அலீகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருப்பதாக ஜாமிஉ திர்மதீ என்ற நூலில் கூறப்பட்டிருக்கிறது.

“ஒருவரைப்புறத்தேவைகளில் எதுவும் தடை செய்யாமலும், அல்லது அநியாய அரசன் அல்லது தடை செய்யும்படியான நோய் தடை செய்யாமலுமிருக்கையில் அவர் ஹஜ்ஜுச் செய்யாமலிருந்து மரணமடைந்து விடுவாராயின் அல்லாஹ் நாடினால் அவர் எஹூதியாகியோ அல்லது கிறிஸ்துவனாகியோ மரிப்பார்” என்பதாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஹஜ்றத் அபூஉமாமா (றலி.) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். இந்த ஹதீது “முஸ்னதே தாரமீ” என்ற நூலில் கூறப்பட்டிருக்கிறது.

ஹஜ்ஜு தன்மீது கடமையாக ஏற்பட்ட பிறகு, அதனைத் தக்க காரணமின்றி நிறைவேற்றாமல் தாமதப் படுத்திக்கொண்டே இருந்து இறுதியாக ஹஜ்ஜை நிறைவேற்றாமலே மரித்து விடுபவர்களைக் குறித்துச் சொல்லப்பட்ட பயங்கரமான இவ்வெச்சரிக்கையை நண்பர்கள் கவனிப்பார்களாக. ஹஜ்றத் இப்ராஹீம்

(அலை.) அவர்களுக்கு முன்னிருந்து நபிமார்களால் நிறைவேற்றப்பட்டு வந்த இந்த ஹஜ்ஜை திருமக்காவிற்கு வந்து நிவைவேற்றுமல் தங்கள் இஷ்டப்படி நினைத்தவிடத்தில் நிறைவேற்றத் துணிந்தவர்கள் யூதர்களே யாவர். ஷாம்தேசத்திலுள்ள 'பைத்துல் முகத்தஸ்' என்ற பள்ளிவாயலை ஹஜ்றத்தாவூத் (அலை.) அவர்களும், அவர்களுக்குப் பிறகு ஹஜ்றத் சுலைமான் (அலை.) அவர்களும் கட்டி நாயனை வணங்க ஏற்பாடு செய்ததையும், அந்தமஸ்ஜிதின் புனிதத்தன்மையையும் முஸ்லிம்கள் மறுக்கவில்லை யென்றாலும் எஹூதிகள் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதற்கும் குர்பானி முதலியவைகளைச் செய்வதற்கும் அம்மஸ்ஜிதிலேயே ஏற்பாடு செய்துகொண்டனர். அல்லாமலும் அவர்களிலுள்ள ஒரு பிரிவார் பைத்துல் முகத்தஸ் பள்ளியில் ஏற்படுத்தப்பட்ட பலிபீடத்திற்குப் போட்டியாகவே வேறொரு பலிபீடத்தை ஏற்படுத்திக்கொண்டு அவ்விடத்திலேயே தங்கள் குர்பானிகளை நிறைவேற்றி வந்தனர். அல்லாமலும், திருமக்காவிலுள்ள பாரான்வனம்,பீரே ஸபஉ போன்ற பல இடங்களும் ஷாம் தேசத்திலிருப்பதாகக் கூறிக்கொண்டு தங்களது வேதத்தில் பல திரித்தல்களைச் செய்துவிட்டனர். கிறிஸ்துவர்களும் இவர்களைப் பின்பற்றி தங்கள் வேதத்தில் அநேகம் செய்திகளைத் திரித்துக்கூறி இறைவனது சட்டளையை மீறிவிட்டனர். ஆகவே, திருகுர்ஆனின் பல இடங்களிலும் சந்தேகத்திற்கிடமில்லாதவாறு கட்டளையிடப்பட்ட அஸ்திவாரமான இக்கிரியையை நிறைவேற்றுமலிருப்பதானது யூத கிறிஸ்துவர்களது மனப்பான்மையை அனுசரித்ததாகவே இருப்பதால், சகல வசதிகளுமிருக்க ஹஜ்ஜை நிறைவேற்றுமலிருந்து மரணமடைந்து விடுபவர்களைக் குறித்து ஹதீது ஷரீபில் பயங்கரன எச்சரிக்கைகள் கூறப்பட்டிருக்கின்றன.

எனவே, மார்க்க பக்தியிற் சிறந்தவர்களான நஞ்சகோதரர்கள் அஜாக்கிரதையினாலோ அல்லது நியாயமில்லாத வேறு காரணத்தினாலோ புனித ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றும் விஷயத்தில் அனுவசியமாகத் தாமதஞ் செய்து அல்லாஹுத ஆலாவினுடையவும் அவனது திருதூதர் (ஸல்.) அவர்களுடையவும் அதிருப்திக்காளாகா திருக்குமாறு வேண்டுகின்றனம்.

எங்கள் ஹஜ்ஜு யாத்திரை

ஆசிரியர் மௌலவீ அல்ஹாஜ் A. R. அப்துற்றஹீம் சாஹிப் (பாக்கவி) வரைவது.

காபிலா அங்கத்தினர்கள்

ஹிஸ்ஹோலினஸ் மௌலானு மௌலவீ அல்லாமா அல்ஹாஜ் ஷாஹ் முகம்மது அப்துல் அலீம் சாஹிப் சித்தீகி அவர்கள். —(ஷேய்குல் காபிலா)

அல்ஹாஜ் சௌகார் ஜே. எம். முகம்மது இஸ்மாயீல் ரூவுத்தர். —(காபிலா தலைவர்)

அல்ஹாஜ் A. M. முகம்மது இஸ்மாயீல் ரூவுத்தர். —(வஜீர காபிலா)

மௌலவீ அல்ஹாஜ் S. A. முகம்மது அலீ சாஹிப் பாக்கவீ
ஆசிரியர் மௌலவீ அல்ஹாஜ் A. R. அப்துற்றஹீம் சாஹிப் பாக்கவி.
மௌலவீ அல்ஹாஜ். தே. மு. முகம்மது சுல்த்தான் சாஹிப்
மௌலவீ அல்ஹாஜ் க. நெ. முகம்மது அப்துல்லா சாஹிப்.
மௌலவீ அல்ஹாஜ் செய்யித் அல்துல் காதிர் பாதுஷா சாஹிப் காதிரி.
—(காபிலா உலமாக்கள்

ஹாஜிகதீப் சா. மு. முகம்மது இப்ருஹீம் சாஹிப்.
ஹாஜி. கா. ரு. காதிர் பாக்ஷா ரூவுத்தர்.
ஹாஜி. அ. ப. முகம்மது முஹையித்தீன் ரூவுத்தர்.
ஹாஜி. அ. பி. முகம்மது அப்துல்ஹை ரூவுத்தர்.
ஹாஜி மா. அ. முகம்மது அப்துல்லா ரூவுத்தர்.
ஹாஜி கா. மு. ரூவுத்தர்சா ரூவுத்தர்.
ஹாஜி டி. முகம்மது இப்ருஹீம் சாஹிப் (மன்னார்குடி)
ஹாஜி. கோ. அ. பகீர் முகம்மது சாஹிப் (பண்டாரவாடை)
ஹாஜி. மு. முகம்மது காஸிம் சாஹிப் (வடகரை)
ஹாஜி. ஒ. முகம்மது ஷரீப் சாஹிப் (கிளியனூர்)
ஹாஜி. த. கு. முகம்மது சுல்த்தான் சாஹிப் (பாண்டுசேரி)
ஹாஜி முகம்பது ஹுஸைன் சாஹிப் ஆகியவர்கள்.

நாங்கள் 24-1-37 ஞாயிற்றுக்கிழமை காலை 8-30-க்கு மதராஸ் சென்டிரல் ஸ்டேஷனில் புறப்படும் பம்பாய் எக்ஸ்பிரஸில் பிரயாண மானோம். முதல்நாளே தக்க ஏற்பாடு செய்து எங்களுக்காக ரயிலில் பிரத்தியேக இடவசதி செய்து வைக்கப்பட்டிருந்ததால் அதில் நாங்கள் சௌகரியமாய் அமர்ந்துகொண்டோம். "அல்லாஹ் அக்பர்" என்னும் தக்பீர் முழக்கத்துடன் பல நூற்றுக் கணக்கான மக்களிடையே புகை ரதம் பிரயாணமாயிற்று. ரயிலில் வெகு உல்லாசமாகவே பிரயாணஞ் செய்தோம். இரவு 8-மணிக்கு எங்கள் புகை ரதம் 'ராய்ச்சூர்' ஸ்டேஷன் வந்து சேர்ந்தபோது ஜனுப்களான படேல் அப்துல்லதீப் சாஹிப், K. S. அப்துஸ்ஸலாம் சாஹிப் இவர்களது முன் அறிவிப்பின் மீது மெஸ்ஸர்ஸ் ரோஷன் கம்பெனியாரால் ராஜோபசார முறையில் தயாரிக்கப்பட்டுள்ள அருஞ்சுவையோடுகூடிய பற்பலவகை பதார்த்தங்கள் அமைந்த சாப்பாடுகள் பிளாட்பாரத்தில் பரத்திவைக்கப்பட்டிருந்தது. மெஸ்ஸர்ஸ் ரோஷன் கம்பெனியார் புகை ரதம் வருவதற்கு வெகு நேரத்திற்கு முன்பே அங்கு காத்திருந்து எங்களை அன்போடு வரவேற்று அந்த இடத்திற்கு அழைத்துச்சென்று இராஜ உபசாரம் நடத்தி வைத்தார்கள்.

பின்னர் திங்கட்கிழமை காலை 10-15மணிக்கு பம்பாய் ஸ்டேஷனை நாங்கள் அடைந்தபோது ஜனுப்களான மௌலானு ஸித்தீகி, மௌலானு குஜந்தி, சேட் ஜகரிய்யா மனியார், மௌலவீ ஹாஜி H. A. முகம்மது அப்துல் காதிர் சாஹிப், இன்னும் பம்பாயிலுள்ள வியாபாரிகளிற் சிலர் ஆகியோர் எங்களை அன்புடன் வரவேற்று மோட்டாரில் முஸாபிர் காணுவுக்கு அழைத்துச் சென்றார்கள். ஹஜ்ஜுக்குச் செல்லும் யாத்திரீகர்களில் முன் அறிவிப்பின்றி அங்கு வரும் கனவான்களை வரவேற்று முஸாபிர்காணுவிற்கு அழைத்துச் செல்லவும் அவர்களுக்கு தேவையான இதர உபகாரங்களைச் செய்யவும் ஹஜ்ஜுக்கமிட்டி வாலண்டியர்கள் ரயில்வேஸ்டேஷனில் காத்திருந்து பிரயாணிகளுக்கு வேண்டிய சௌகரியஞ்செய்து உதவி புரிந்து வருகின்றார்கள்.

முஸாபிர் காணு

ஹஜ்ஜுக்குச்செல்லும் யாத்திரர்கள்போகும் போதும், வரும்பொழுதும் தங்கிச் செல்வதற்காக வென்றே பம்பாய் நகரில் மூன்று "முஸாபிர் காணு"கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் கிராம்போன் மார்க்கட்டிற்குச் சமீபத்திலுள்ள "சாபூஸித்தீகி" முஸாபிர்காணு வெகு விசாலமானதாகும். இஃது ரயில்வே ஸ்டேஷனுக்கும் துறைமுகத்திற்கும் மத்திபமான இடத்தில் அமைந்திருக்கிறது. இதில் நான்கு அடுக்கு மெத்தைகள்யுளன. ஒவ்வொரு தட்டிலும் சமையல் செய்யுமிடங்களும் ஸ்நான அறைகளும் கக்கூஸ்களும் நல்லமுறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. 10 பேர்கள் சௌகிரியமாக யிருப்பதற்கு தகுதியான பல அறைகள் ஒவ்வொரு தட்டிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. சற்றேறக்குறைய ஒரே காலத்தில் 1000 பேர்கள்வரை சௌகிரியமாய் இதில் வாசஞ் செய்யலாம். இதற்குள்ளால் அழகிய மஸ்ஜிதொன்று அமைக்கப்பட்டு ஐந்து நேரமும் ஜமா அத்துடன் தொழுகை நடைபெறுகிறது. இந்த முஸாபிர்காணு மார்க்கட்டிற்குச் சமீபமாய் அமைந்திருப்பதால் யாத்தி

ரார்கள் தங்களுக்குத் தேவையான மீன் இறச்சி கோழி காய்கறி முதலிய வஸ்த்துக்களை இலகுவில் வாங்கிக்கொள்ள சௌகரியமாக யிருக்கிறது. தண்ணீரில் ஸ்நானஞ்செய்ய நாடுவோர் அங்குள்ள குழாய் தண்ணீரில் நீராடலாம், வெந்நீரில் ஸ்நானஞ் செய்ய விரும்புவோர் அந்த முஸாபிர் கானவுக்கு எதிரிலுள்ள கடைகளில் இரண்டணு செலவில் நல்ல விதமாய் குளித்துக் கொள்ளலாம். ஹாஜிகளின் சௌகரியத்திற்காகவென்றே இந்த முஸாபிர்கானவுக்குச் சமீபத்தில் ஒரு தபால் தந்தி ஆபீஸும் அமைக்கப்பட்டுளது.

ஹஜ்ஜுக் கமிட்டியாரின் அரிய சேவைகள்

புனித ஹஜ்ஜைக் கோரிச் செல்லும் யாத்திரீகர்களின் சௌகரியத்தை யுன்னி பம்பாயிலுள்ள ஹஜ்ஜுக் கமிட்டியார் ஆற்றிவரும் அரிய சேவைகள் போற்றத் தக்கனவாகும். இதற்கு முன்னெல்லாம் ஹஜ்ஜுக்குச் செல்வோருக்கு பம்பாய் துறைமுகத்திலும் இதர இடங்களிலும் அநேக அசௌகரியங்கள் நிகழ்ந்துவந்துள்ளன வென்பது யாவருமறிந்ததே. ஹஜ்ஜுக் கமிட்டியாரின் அரிய முயற்சியால் இது பொழுது அக்கஷ்டங்களெல்லாம் நீங்கி அநேக சௌகரியங்க ளேற்பட்டிருப்பது கண்கூடு. ஏற்கனவே, அம்மை குத்தி இனகுலேஷன் செய்து கொள்ளும் ஹெல்த் டிபார்ட்மெண்ட் முஸாபிர் கானவிற்கு தூரத்திலுள்ள ஓர் இடத்திலும், கப்பலுக்கு டிக்கட் கொடுக்கப்படும் டர்னர் மாரிஸன் கம்பெனி ஆபீஸ் அதற்கு தூரமான வேறொரு இடத்திலுமாக யிருந்து வந்தது. இதனல் இந்த பம்பாய் பட்டணத்தில் ஹாஜிகளுக்கு அளவுகடந்த கஷ்டங்களேற்பட்டுக் கொண்டிருந்தன. இந்தக் கஷ்டங்களை நிவர்த்தியாக்கி வைப்பதற்காக ஹஜ்ஜுக் கமிட்டியார் இதுபொழுது இந்த ஸித்தீக் முஸாபிர் கானவிலேயே டிக்கட் கொடுக்கும் ஆபீஸ், வைத்தியபரீக்ஷை செய்யப்படும் ஆபீஸ் இவைகளை ஏற்படுத்துமாறு செய்திருக்கின்றனர். இதனல் பாஸ்போர்ட் வாங்கும் வேலை, டிக்கட்பெறும் காரியம் இவைகள் வெகுசுளுவில் சிரமமின்றி இருந்த இடத்திலிருந்தே முடித்து கொள்ள ஹேதுவாக விருக்கின்றன.

ஆனல் அம்மைவைத்து இனகுலேஷன் செய்து கொள்ளும் காரியாதிகளை ஆங்காங்கு ஹாஜிகள் சுயபதியிலேயே முனிஸிபல், கார்ப்ரேஷன் ஹெல்த் ஆபீஸர் மூலம் செய்து கொண்டு சர்ட்டிபிகேட் (அத்தாக்ஷி பத்திரம்) பெற்று வருபவர்களின் அத்தாக்ஷிகளை ஒப்புக்கொண்டு அனுமதித்து விடுகின்றனர். என்றலும் அம்மை குத்தப்பட்ட அடையாளத்தை கவனித்து தளும்பு நல்ல விதமாகத் தெரியாதவர்களுக்கு மறுமுறையும் இங்கு அம்மை குத்திய பிறகே பாஸ்போர்ட் கொடுக்கின்றனர். இவ்வாறு அம்மை குத்தப்பட்டவர்களுக்கு கப்பலில் ஜுரம்போன்ற தொந்திரவுகளு மேற்படுகின்றன. ஆகவே ஹாஜிகள் பிரயாணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே தங்கள் ஊர்களுக்குச் சமீபத்திலுள்ள முனிஸிபல் ஹெல்த் ஆபீஸர், அல்லது ஸிவில் ஸர்ஜன் இவர்கள் மூலம் அம்மை குத்தி இனகுலேஷன் செய்து கொண்டு சரியான அத்தாக்ஷி சீட்டு வாங்கிக் கொண்டு அம்மை குத்தப்பட்ட இடத்தை மருந்து முதலியவைகளைக்கொண்டு அழித்து விடாது புண் ஏற்பட்டு தழும்பு உண்டாகும்படி செய்து போகவேண்டும். கவர்ன்மெண்டார், இவ்விஷயங்கள் முக்கியமானவைகளென சட்டமியற்றி யிருப்பதால் இதில் எவ்விதமாறுதலும் மாறுபாடும் செய்ய முடியாதிருக்கிறது. மேலும், இதற்குமுன் அம்மைகுத்தி இனகுலேஷன் செய்யுமிடங்களிலும், பாஸ்போர்ட் பதிவு செய்யுமிடத்திலும், துறைமுகத்திலும் போலீஸார் ஹாஜிகளிடம் நடந்து கொண்டுள்ள முறைகள் ஹாஜிகளுக்கு சிற்சில அசௌகரியங்களைக் கொடுத்துவந்துளது. எனவே அவைகளை நிவர்த்திப்பான் வேண்டி ஹஜ்ஜுக்கமிட்டியார் கவர்ன்மெண்டாரது அனுமதி பெற்று முஸ்லிம் வாலண்டியர் கோர் ஏற்பாடு செய்திருக்கின்றனர். அவர்களுக்கு பிரத்தியேக அழகிய உடைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் முஸாபிர் கானவிலுள்ள பல ஆபீஸ்கள், துறைமுகம், கப்பல் இவைகளில் ஹாஜிகளுக்கு பற்பல சௌகரியங்கள் செய்துகொடுக்கின்றனர். எனவே, பம்பாய் ஹஜ்ஜுக்கமிட்டியார் செய்துவரும் சேவைகள் பெரிதும் போற்றத்தக்க தென்பதிற் சந்தேகமில்லை. அன்னேரின் இவ்வபார முயற்சிக்கு அல்லாஹ் தனது அருட்கொடையின் அபார நற்கூலி அளிப்பானக.

இதற்குமுன்னெல்லாம் ஹாஜிகளை பம்பாய் துறைமுக பாலத்திற்கு தூரத்திலுள்ள ஒரு தகர கொட்டையில் கொண்டு சேர்த்து நீண்ட தாமதத்திற்குப்பின் டாக்டர் சோதனை நடைபெற்று ஹார்பருக்குச்செல்ல அனுமதி அளிக்

கப்படும். இதனல் ஹாஜிகளுக்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. இதுபொழுது அப்படியில்லாது துறைமுகத்திற்கு வெகு சமீபமாயுள்ள ஒரு விசாலமான கொட்டகையில் ஹாஜிகள் விடப்பட்டு சுறுசுறுப்பாக வைத்திய சோதனை நடைபெற்றவுடனே கப்பலுக்குச் செல்ல அனுமதியளிக்கப்படுகின்றனர். இதுவும் ஹஜ்ஜுக் கமிட்டியாரின் அரிய சேவையாகும். இவ்வாறு ஹஜ்ஜுக்கமிட்டியாரும் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் வாலண்டியர்களும் ஹாஜிகளுக்கு அரிய சேவை புரிந்து வருகின்றார்கள்.

கப்பல் புறப்படுவதற்கு ஒருநாள் முன்பே ஹாஜிகளில் மூன்றும் வகுப்பு பாஸஞ்ஜர்கட்கு கப்பலில் இடம் அளந்து கொடுத்து பெரிய சாமான்களை அங்கு கொண்டு வைக்கப்படும் வழக்கம்போல் 27உ மாலை 3-மணிக்கு எங்கள் காபிலாவிலுள்ள சிலரது சாமான்களும் பெரிய சாமான்களும் கப்பலில் கொண்டுவைக்கப்பட்டு பந்தோபஸ்த்து செய்யப்பட்டது.

28-1-37 வியாழக்கிழமை பகல் 2-மணியிலிருந்தே ஹாஜிகளும் அவர்களை வழியனுப்ப பம்பாய் வந்திருக்கும் நண்பர்களும் கார்களிலும் விக்டோரியாவிலும் விக்டோரியா துறைமுகத்திற்கு சமீபம் வந்து சேர்ந்தனர். நாங்களும் அவ்வாறே 3½ மணிக்கு (பப்பாரா)ஹாஜிகளை டாக்டர் சோதனை செய்யுமிடம் போய்ச் சேர்ந்தோம். அதற்கு வெளியில் ஏராளமான ஜனங்கள் கூடி ஹாஜிகளிடம் முஆனக்கா, முஸாபஹா செய்யும் காக்ஷியும், ஒவ்வொரு ஹாஜியின் கரத்திலும் கழுத்திலும் புஷ்ப ஹாரம், புஷ்பச் செண்டு இலங்கும் வினோதத் தோற்றமும் கண்களைக் கவரக்கூடியதாக விருந்தது. எங்கள் காபிலா ஷெய்கு அல்லாமா ஸித்தீகி அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் ஆங்கு வந்தகால் ஏராளமான மக்கள் கூடி புஷ்பஹாரங்கள் சூட்டினர். கடைசியாக எங்கள் காபிலாவிலுள்ள யாவருக்கும் காதிமுல் ஹுஜ்ஜாஜ் (ஹஜ்ஜு யாத்திரீகர்களுக்குத் தொண்டுபுரிவதையே பூஷணமாகக் கொண்டுள்ள) மௌலவீ அல்ஹாஜ் H. A. முகம்மது அப்துல்காதிர் ஸாஹிப் அவர்களால் புஷ்ப ஹாரம் சூட்டப்பட்டு, எங்கள் காபிலாவினரை உபசரித்து குதூகலமாய் வழியனுப்பி ஆசீர்வாதம் பெறுவான்வேண்டி அங்கு சமூகமளித்திருந்த தென்னாட்டு வடநாட்டு சகலகனவான்களிடமும் நாங்கள் முஸாபஹாக்கள் செய்து அளவளாவிக்கொண்டு ஆனந்த விடைபெற்று பரிசோதனை ஹாலுக்குள் சென்றோம். அங்கு பஸ்ட்கிளாஸ் பாஸஞ்சர்களுக்கு வெகுசீக்கிரமாகவும், டெக் பாஸஞ்ஜர்களுக்கு சற்று தாமதத்திலும் வைத்திய பரீக்ஷை நடைபெற்று 4-மணிக்கு கப்பலினுள் பிரவேசிக்க அனுமதிக்கப் பெற்றோம்.

ஹாஜிகளை வழியனுப்ப ஏராளமான ஜனங்கள் கூடுவதால் யாரும் கப்பலினுள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆனல் பஸ்ட்கிளாஸ் பாஸஞ்ஜர்களின் நண்பர்களில் ஒரு சிலர் மட்டும் ஹஜ்ஜுக் கமிட்டியாரின் அனுமதிபெற்று மூன்று ரூபாய்க்கு பாஸ் வாங்கிக்கொண்டு கப்பலினுள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுகின்றனர். அவ்வாறு அனுமதிபெற்று அல்ஹாஜ் மௌலவீ H. A. முகம்மது அப்துல்காதிர் ஸாஹிப், மௌலானா குஜந்திஸாஹிப், சேட்ஜகரிய்யா மனியார் இவர்கள் கப்பலுக்குச் சென்று இரவு 8-மணி வரையிலிருந்து எங்களுக்கு சகல சௌகரியங்களையும் செய்துகொடுத்தனர். கப்பலில் 'கிப்லா'வை அறிவிக்கும் கருவி ஒவ்வொரு தட்டிலும் அமைக்கப்பட்டிருப்பதால் சரியான திசையை நோக்கி ஜமாஅத்துடன் முறையே அஸர், மக்ரிப், இஷா தொழுகைகளை நிறைவேற்றிக்கொண்டு இரா போஜனமருந்தினோம். கப்பல் சுமார் 80 பஸ்ட்கிளாஸ் பாஸஞ்ஜர்களையும் 1170 டெக் பாஸஞ்ஜர்களையும் ஏற்றிக்கொண்டு இரவு 10 மணிக்கு 'அல்லாஹ் அக்பர்' என்னும் தக்பீர் முழக்கத்திற்கிடையே பிரயாணமாயிற்று. யாங்கள், 'கிருபா நிதியாகிய இறைவா! புனித பரிசுத்த வீடாய உனது கஃபாவையும், உனது உத்தம தூதர் நபிகள் கோன் (ஸல்) அவர்களது திரு ரௌலாஷரீபையும் நாடிச் செல்லும் எங்கள் காபிலாவினருடையவும், இதர ஹாஜிகளினுடையவும் நாட்டங்களை நிறைவேற்றி எல்லோருடைய ஹஜ்ஜுக்கடமை ஜியாரத் மகத்துவம் இவைகளை நிறைவேற்றி சம்பூரணமாக்கி சர்வ சுகத்தோடுங் கூடி சாந்தமும் சமாதானமும், பேரானந்தமும் புனிதமும் பெற்று இனிதே தாயகம் மீள கிருபை பாலிப்பாயாக'வென பிரார்த்தனை புரிந்தவர்களாய் துயில்புரிய முற்பட்டோம்.

கப்பல் பிரயாணம்

பம்பாய், கல்கத்தா, கராய்ச்சி இத்துறைமுகங்களிலிருந்து ஹாஜிகளை ஏற்றிச் செல்லும் பொறுப்பை "டர்னர் மாரிஸன்" கம்பனியார்

ஏற்று, S. S. அலவி, அக்பர், றஹ்மானி, இஸ்லாமி இந்த கப்பல்கள் மூலம் ஹாஜிகளை ஏற்றிச் செல்கின்றனர். இவைகளில் சில பம்பாயிலிருந்து நேராகவும், சில கராச்சிவழியாகவும் ஜித்தா துறைமுகம் செல்கின்றன. இக்கம்பெனியார் ஹாஜிகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களில் "S. S. இஸ்லாமி" முதன்மை ஸ்தானம் வகித்து ஹாஜிகளுக்கு சௌகரியமானதாகவே யிருக்கிறது. இதில் சகின்ட் கிளாஸ் (இரண்டாம் வகுப்பு) இல்லாதிருப்பதை ஓர் குறையாகச் சொல்லலாம் என்ருலும் இதர லைன்களில் செல்லும் உயர்தரக் கப்பல்களைப்போல் இதில் முதல் வகுப்பு வெகுசௌகரியமாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. எங்கள் காபிலாவில் பலமுறை ஹஜ்ஜுக்குச் சென்று வந்தவர்கள் இருப்பதால் இந்த லைனில் இதுவரை இம்மாதிரியான கப்பல் சென்றதில்லையென்றே கூறுகின்றனர். அது சமயம் கடலும் அமைதியாக யிருந்ததால் கப்பல் யாதொரு ஆட்டமுமின்றி சென்றது. எல்லா ஹாஜிகளும் யாதொரு கஷ்டமின்றி ஸலாமத்தாக பிரயாணஞ் செய்தனர்.

சாப்பாடு வசதிகள்

ஏற்கனவே ஹாஜிகள் தனித்தனியே கப்பலில் சாப்பாடு சமைத்துச் சாப்பிடுவது வழக்கமாக யிருந்தது. இதுபொழுது கப்பல் கம்பனியாரிடமிருந்து சாப்பாடு தயார்செய்து கொடுக்கும் பொறுப்பை "இந்தியா அறபியன் டிரேடிங்" கம்பனியார் கண்ட்ராக்டாக ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் ஹாஜிகளின் சௌகரியங்களை கவனித்து தக்கமுறையில் உணவளித்து வருகின்றனர். இதில் ஏதேனும் குறை தோன்றி மானேஜருக்குத் தெரிவித்தால் உடனே அவர் ஆவனசெய்ய முற்படுகிருர். சுருங்கக் கூறுமிடத்து, சாப்பாடு வசதிகளெல்லாம் சௌகரியமாகவே யிருக்கிறதென்று கூறுவது மிகையாகாது. ரெங்கூன், சிங்கப்பூர், சைகோன், ஜப்பான் முதலிய கீழ்நாடு செல்லும் கப்பல்களிலும், மேனுடு செல்லும் கப்பல்களிலும் பிரயாணஞ் செய்பவர்கள் எங்களுடன் இருந்ததால் இந்த கப்பலில் சாப்பாடு வசதியிருப்பதுபோல் வேறு எந்தக் கப்பலிலுமில்லை என்று அவர்கள் சொல்கின்றனர். ஆனல் இதர கப்பல்களில் ஆடுகோழி இவைகளுக்குப் பிரத்தியேக இடம் ஒதுக்கப்பட்டு தினம் தேவையானவைகளை அறுத்துக் கொள்வதுபோல் இக்கப்பலிலும் அறுத்து உபயோகப் படுத்த வசதிசெய்து வைக்காது ஐஸ்ரூம் தயாரித்திருக்கின்றனர். பம்பாயிலும் கராய்ச்சியிலும் ஆடுகோழிகள் அறுக்கப்பட்டு அந்த ஐஸ்ரூமில் வைக்கப்படுகிறது. அதில் தினம் தேவையானவைகளை எடுத்து உபயோகித்துக் கொள்கின்றனர். இந்த மாமிசம் இரண்டு மூன்று தினங்களுக்குப்பின் ருசியற்றதாகி விடுவதால் அநேகருக்குப் பிடிக்கவில்லை. இது விஷயமாய் நாங்கள் அந்த ஹோட்டல் அதிகாரியையும் இதரர்களையும் கலந்து பேசியதில் இவ்வாறு மாமிசங்களை ஐஸ்ரூமில் வைப்பதுகொண்டு அவைகளிலுள்ள கெடுதிகள் நீங்கி சுத்தமாய் விடுவதாக டாக்டர்கள் கூறுவதாக அறிவித்தார்கள். இதுவிஷயத்தை ஹஜ்ஜுக் கமிட்டிக்கு தெரிவிப்பதென முடிவு செய்து கொண்டோம். பஸ்ட் கிளாஸ் (முதல் வகுப்பு) பாஸஞ்ஜர்களுக்கு அதிகாலையில் இரண்டு பிஸ்கட்டுகளும் தேயிலை பானமும், 8-மணிக்கு ரொட்டி கைமா வெண்ணெய், ஜாம் முட்டை டீயும், 12-மணிக்கு பிரியானி அல்லது புலவு, கோதுமை ரொட்டி, குர்மா, சால்னு, மரக்கறி, பொறியல் பழங்களும், மாலை 4-மணிக்கு கேக்குடன் டீயும், இரவு 7-மணிக்கு கோழி அல்லது இறைச்சி பிரியானி, கோதுமை ரொட்டி குர்மா, பொறியல், மரக்கறி, கோழி பொறியல், முட்டைவட்லப்பம் அல்லது கடல்பாசி, பாதம் வகேராவும் கொடுக்கப்படுகின்றன.

டெக் பிரயாணிகளுக்கு காலை 7-மணிக்கு டீயுடன் பிஸ்கட்டும், 11-மணிக்கு கிச்சடியுடன் ரொட்டி சால்னு, மரக்கறி அச்சாரும், மாலை 4-மணிக்கு டீயும், இரவு 7-மணிக்கு புலவு அல்லது கிச்சடி, ரொட்டியும் பருப்பு அச்சாரும் கொடுக்கப்படுகிறது. இதுவன்றி அந்த கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஹோட்டலில் தேவையானவைகளை கிரயத்திற்கு வாங்கிக்கொள்ளலாம்.

வைத்திய வசதி

ஆங்கில முறையில் தேர்ச்சி பெற்ற இரண்டு டாக்டர்கள் கப்பலில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர். கப்பலின் பின்புறத்தில் வைத்தியசாலையும் நோயாளிகளை வைப்பதற்கு தக்க படுக்கை வசதிகளும் அமைக்கப்பட்டு வெகு சௌகரியமாகவே யிருக்கிறது. நோயாளிகள் அந்த வைத்தியசாலைக்குச் சென்று மருந்து வாங்கிவருகின்

றனர். கடுமையான வியாதி யேற்பட்டிருப்பவர்கள் வைத்தியசாலையிலுள்ள விடுதியிலேயே தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றனர். டாக்டர்கள் ஒவ்வொரு நோயாளியையும் நல்ல முறையில் கவனித்து மருந்து கொடுக்கின்றனர்.

கப்பலில் ஹஜ்ஜுக் கமிட்டி

கப்பலில் ஒவ்வொரு தேசத்தவர்களின் சௌகரியங்களையும் கவனிப்பதற்காக பூனாவாசியும், புரோபசருமான கான்பஹாதுர் ஷேக் அப்துல் காதிர்சாஹிப் M. A. அவர்கள் தலைமையில் 9-பேர்களைக் கொண்ட கமிட்டியொன்று நியமிக்கப்பட்டது. (1) அவைத் தலைவர் (2) மௌலானா முகம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீகி (3) ஹைதராபாத் காபிலா தலைவர் சையித் காதிர் முகையித்தீன் சாஹிப் (4) ஈரானி ஜமாஅத் தலைவர் ஆகாமுகம்மது ஹுசைன் (5) போரா ஜமாஅத்தலைவர் முல்லா அப்துல் காதிர் (6) சென்னை காபிலா தலைவர் அல்ஹாஜ் ஜ. மு. முகம்மது இஸ்மாயீல் ரூவுத்தர் (7) மேமன் ஜமாஅத் தலைவர் வலீ முகம்மது கனி (8) மௌலவீ ரபீஉத்தீன் சாஹிப் (மாஜி எம். எல். ஏ.) (9) ஜித்தா பிரபல வர்த்தகரும்,கப்பல் ஏஜண்டுமான இப்ரூஹீம் ஜைன் அலீரிஜா. இவர்கள் இரண்டு தினத்திற்கொரு முறைகூடி ஹாஜிகளின் சௌகரியா சௌகரியங்களை கவனித்து அது விஷயமாய் ஆலோசனை புரிந்து வேண்டுவனவற்றைச் செய்துவந்தார்கள். கோஷா ஸ்திரீகள் தொழுகையை நிறைவேற்றுவதற்கும், உல்லாசக் காற்று வாங்குவதற்கும் பிரத்தியேக இடம் ஒதுக்கப்பட்டு இருபுறமும் திரைகட்டப்பட்டிருந்தது. அதனுள் எந்த ஆண் பிள்ளையும் செல்லாமல் தடையும் செய்யப்பட்டிருந்தது.

இந்த அங்கத்தினர்களிற் சிலர், ஒவ்வொரு நாளும் கெப்பித்தான், ஸீப் ஆபீஸர், டாக்டர், ஹோட்டல் மானேஜர் இவர்களுடன் கப்பல் முழுதையும் சுற்றிப்பார்த்து ஹாஜிகளின் சௌகரியங்களை கவனித்து வருவார்கள். 31-1-37 ஞாயிற்றுக்கிழமை இரவு $12\frac{1}{2}$-மணிக்கு இஸ்லாமி கப்பல் கராச்சி துறைமுகத்தை அடைந்தது.

கராச்சி துறைமுகம்

31-1-37 ஞாயிற்றுக்கிழமை பகல் 12-மணிக்கு எஸ். எஸ். இஸ்லாமி கராச்சியிலிருந்து புறப்பட்டு விடுமென அறிவிக்கப்பட்டது. பஸ்ட் கிளாஸ் பாசஞ்சர்களுக்கு துறைமுகத்தில் இறங்குவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தும் நேரம் கம்மியாக யிருந்ததால் அநேகர் இறங்கவில்லை. எங்கள் காபிலா தலைவர் ஜனுப் அல்ஹாஜ் ஜே. எம். முஹம்மது இஸ்மாயீல் ரூவுத்தர் அவர்கள் மட்டில் சில முக்கிய காரியமாக சகாக்களுடன் கீழே இறங்கி காரில் சென்று வந்தார்கள். அறிவிக்கப்பட்டிருந்தபடி பகல் 12-மணிக்கு கப்பல் பிரயாணமாயிற்று. கராச்சியில் ஓர் அளவு குளிர் இருந்தது. பிறகு ஒருநாள் வரை குளிர் இருந்து, அதன் பின் நீங்கிவிட்டது. கடல் அமைதியாகவே இருந்து வந்தது. எல்லா ஹாஜிகளும் சௌகரியமாகவே பிரயாணஞ் செய்தோம்.

ஹைதராபாத் நிஜாமின் மார்க்க சேவை

ஒவ்வொரு ஆண்டிலும் பல நூற்றுக் கணக்கானோரை ஹைதராபாத்திலிருந்து ஹஜ்ஜுக்கு அனுப்பிவைக்கும் வழக்கம் வெகு நாளாகவே நடைபெற்று வருகிறது. இதற்காக ஒரு ஸ்பெஷல் புகைவண்டி ஹஜ்ஜுக்குச் செல்பவர்களை ஏற்றிக்கொண்டு ஹைதராபாத்திலிருந்து பம்பாய் வருவது வழக்கம். இந்நிலைமையில் பற்பல ஊர்களிலுமிருந்து ஏராளமான ஜனங்கள் சென்று தங்களையும் ஹஜ்ஜுக்கு அழைத்துச் செல்லவேண்டுமென வற்புறுத்தி தொந்திரவு செய்வதால் ரூ. 400-ரொக்கமாக கொண்டுவந்து கொடுப்பவர்களை ஏற்று அவர்களுக் கேற்படும் சகல செலவுகளையும் தாங்கள் செய்வதாக இவ்வாண்டு ஹைதராபாத் அறிக்கை வெளியிட்டுவிட்டபடியால் அவ்வாறு ரூ. 400-கொண்டுவந்து கொடுத்தவர்களில் சுமார் 350-நபர்கள் வரை சாலார் மௌலவீ அல்ஹாஜ் காதிர் முகையித்தீன் சாஹிப் அவர்கள் தலைமையில் நாங்கள் சென்ற இஸ்லாமிக் கப்பலில் பிரயாணஞ் செய்தார்கள். இவர்களுக்காக ஜித்தா, மக்கா, மினா, மதீனா முதலிய இடங்களில் தக்க விடுதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் சாப்பாடு முதலிய சகல சௌகரியங்களும் செய்து கொடுக்கப்படுகின்றன.

ஹைதராபாத் ஸாலாரின் தலைமையின் கீழ் வந்திருக்கும் சுமார் 350 ஹாஜிகளுக்கும், அந்த கப்பலில் பிரத்தியேகமாக இடம்கொடுக்கப்பட்டிருந்தது. அதில் அவர்கள் தொழுகை நிறைவேற்றுவதற்காக ஒரு இடத்தை ஒதுக்கி வைத்திருந்தனர். ஐந்து நேரமும் பெரும் திரளான ஜமாஅத்துடன்தொழுகை நிறைவேற்றப்பட்டதோடு அநேக சமயங்களில் நபிகள்கோமான்

(ஸல்.) அவர்கள்மீது புகழ்பாக்கள் பாடப்பட்டன. அச்சபைகள் வெகு உல்லாசமாக நடைபெற்றன. மற்ற பாகங்களிலும் அநேக ஜமாஅத்துகள் நடைபெற்று வந்தது. எங்கள் காபிலாவின் ஷேக் ஹிஸ் ஹோலினஸ் மீரட் மௌலானா ஸித்தீகி அவர்கள் தலைமையில் பஸ்ட்கிளாஸ் டக்கில் ஒரு பெரும் ஜமாஅத்து நடைபெற்றது. எல்லா முக்கியஸ்தர்களும் அந்த ஜமாஅத்தில் வந்து கலந்து கொண்டனர். எங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பஸ்ட்கிளாஸ் ஒரே யிடத்தில் அமைந்திருந்ததால் காபிலா தலைவர் அல்ஹாஜ் ஜே. யெம். முகம்மது இஸ்மாயீல்ருவுத்தர் அவர்கள் ஒவ்வொருநேரத்திலும் கேபினிலுள்ளவர்களையும் டெக்கிலுள்ளவர்களையும் விசாரித்து ஆவனவற்றை கவனித்துவந்ததுடன், சாப்பாட்டு விஷயத்திலும் தேவையானவற்றை பிரத்தியேகமாக செய்து கொடுப்பதற்கு ஏற்பாடும்செய்து வந்தார்கள்.

டீ பார்ட்டி வைபவம்

3-2-37 புதன்கிழமை மாலை 4 மணிக்கு கேபினிலுள்ள டைனிங் ஹாலில் ஹைதராபாத் காபிலா சார்பாக ஒவ்வொரு காபிலாவின் முக்கியஸ்தர்களுக்கும் டீ பார்ட்டி நடைபெற்றது. சிற்றுண்டிக்குப்பின் ஹைதராபாத் காபிலா ஸாலார் (தலைவர்) அவர்கள் பேசியதாவது :—

"ஹஜ்ஜில் அளவு கடந்த நன்மைகள் உண்டென்பது யாவருக்கும் தெரிந்ததே. பற்பல தேச முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து பரஸ்பரம் கலந்துறவாடுவது அதன் முக்கியாம்சங்களிலொன்ருகும். இந்த கப்பலிலும் பல தேசத்தினரும் பிரயாணித்து வருகிறோம். அப்பரஸ்பரத்தன்மையை கப்பலில் காட்டிவைப்பான் வேண்டியே இச்சிற்றுண்டி சபையை கூட்டி யிருக்கிறேன். என்னுடைய கூப்பிடுதலுக்கிணங்கி இங்கு விஜயந் தந்ததற்காக எங்களுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்."

இதற்கு எல்லா காபிலா தலைவர்களும் தக்க பதில் அளித்து வந்தனங் கூறினர்கள்.

மௌலானா அல்லாமா அல்ஹாஜ் முஹம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீகி அவர்கள் பேசுகையில், ஹைதராபாத் சமஸ்தான மன்னரவர்கள் ஹஜ்ஜுடைய மகிமையை அறிந்து ஒவ்வொரு வருஷமும் காபிலா அனுப்பி வரும் சிறப்பை போற்றிப் பேசி நவாப் சாஹிப் அவர்களை ஹைதராபாத் மன்னரென்று மட்டும் கூருமல் எல்லா முஸ்லிம்களுக்கும் மன்னரென்றே கருத வேண்டுமெனக் கூறி அவர்களுக்கு துஆ செய்தார்கள்.

வஅஜ்மஜ்லிசு

எங்கள் காபிலா ஷெய்கு மௌலானா ஸித்தீகி அவர்கள் ஒவ்வொரு நாளும் இஷா தொழுகைக்குப்பின் பஸ்ட் கிளாஸ் டெக்கில் உபன்னியாசம் புரிந்துவந்தார்கள். வஅஜ் நடைபெறுமென எல்லாத் தட்டுகளிலும் அறிவிக்கப்படுவதால் ஏராளமானோர் வந்துகூடிவிடுவர். ஒரு நாள் வஅஜ் மஜ்லிக்குமுன் மௌலிது மஜ்லிசு நடைபெற்றது. பலரும் அறபியிலும் உர்தூவிலும் கவிகள் பாடினர். மதீனவாசியான மௌலானா ஒருவர் அழகிய இனியகுரலில் குர்ஆன் ஷரீப் ஓதியபின் மௌலிது பர்ஜன்ஜியும் ஓதினர்கள். அதனை அமைதியுடன் யாவரும் செவியுற்று பரவசமடைந்தனர். இதனல் சத்தியத்தூதர் நபிகள் திலகம்(ஸல்)அவர்களது ஞாபகம் சபையினருக்கு மூட்டப்பட்டு எல்லோரும் பரவசக் கண்ணீர் வடித்து அல்லாஹ்வின் ரஸூல் ஹயாத்துந்நபீ அவர்களது திருச்சந்திப்பு கிடைக்க வேண்டுமென பிரார்த்தனை புரிந்தவர்களாகவே யிருந்தார்கள். மௌலானா ஸித்தீகி அவர்கள் ஒவ்வொரு இரவுகளிலும் புரிந்துவந்த அரும் பிரசங்கங்களானது ஹாஜிகளின் மனங்களைக் கவர்ந்து அன்னேரின் உதிரங்களில் அல்லாஹ்வினுடையவும் அவனது ரஸூலினுடையவும் முஹப்பத்தென்னும் பிரீதியின்கொதிப்பை ஏற்படுத்திக்கொண்டே வந்தது. இதனல் நாங்கள் முஹப்பத்தென்னும் மின்சார ஊசியினல் இஞ்சக்ஷன் செய்யப்பட்ட ஆஷிகரஸூல்களாய் விட்டோமெனக் கூறுவது மிகையாகாது.

மௌலானா அவர்கள் தங்கள் பிரசங்கங்களில் முதலாவதாக எல்லா அமல்களையும் அல்லாஹ்வுக்காக வென்றே கலப்பற்ற முறையில் செய்ய வேண்டு மெனவும், அத்தன்மைபோல் எல்லோரும் கோரிச்செல்லும் ஹஜ்ஜுடைய காரியங்களை அல்லாஹ்வுக்காக ஆற்ற வேண்டுமென வற்புறுத்திக் கூறியும், ஆரம்பமாக கஃபத்துல்லா ஷரீப் ஏற்பட்ட வரலாறு, அதனை ஹஸ்ரத் இப்ராஹீம், இஸ்மாயீல் (அலை.) இவர்கள் கட்டிய விருத்தாந்தம், மக்கமாநகர் ஏற்பட்ட ஆதிகாரணம், ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களை நம்ரூத் தொந்திரவு கொடுக்க முற்பட்டது, ஹஸ்ரத் அவர்கள் தங்கள் குமாரர் இஸ்மாயீல் (அலை.) அவர்களை குர்பானீ கொடுக்க ஆயுத்தமான விபரம், இன்னும் மானிட சிரே

ஷ்டர் ரஸூல் (ஸல்) அவர்கள்மீது மக்கட்கு பிரீதி ஏற்படும் அநேக விஷயங்கள் யாவற்றை யும் சாங்கோபாங்கமாய் தக்க மேற்கோள்களு டன் விவரித்துக் கூறிக்கொண்டே வந்தார்கள். ஒவ்வொரு இரவிலும் ஏராளமானோர்கூடி அரும் உபன்னியாசத்தைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டே யிருப்பார்கள். சுருங்கக் கூறுமிடத்து, எல்லோருடைய ஹிருதயங்களி லும் அல்லாஹ்வினுடையவும் அவனது ரஸூ லினுடையவும் பிரீதி குடிகொண்டு எல்லோரை யும் ஆஷிக்க ரஸூல்களாக ஆக்கிவிட்டதெனக் கூறலாம்.

ஹைதராபாத் காபிலாவின் சாலார் வெளலவீ காதிர் முகையித்தீன் சாஹிப் பலமுறை அவ் விடத்திய காபிலாவை ஹஜ்ஜுக்கு அழைத்துச் சென்றவராதலால் அவரது நடவடிக்கைகள் எழுதுவதற் கரியதாகவே யிருக்கிறது. கப்பலில் ஒவ்வொரு நேரமும் ஜமாஅத்து நடக்கும் போது கப்பலின் பற்பல பாகங்களிலும் "முகப்பிரீன்"கள் தக்பீர் முழக்குவார்கள். அதனைப் பார்ப்பது கொண்டு ஹரம் ஷரீபின் தோற்றம் கப்பலிலேயே தென்பட்டுக் கொண் டிருந்தது. இதுவன்றி ஹைதராபாத் காபிலா அநேக நேரங்களில் நபிகள் பெருமான் (ஸல்.) அவர்கள் மீது ஞாபகத்தையும் பிரீதியையும் யூட்டக்கூடிய மௌலிது, புர்தா சபைகளை நடத்திக் கொண்டுவந்தது. இதனால் அல்லாஹ், ரஸூலுடைய முஹப்பத்தில் கப்பலே ஆழ்ந்து கிடந்ததெனக் கூறுவது மிகையாகாது.

மேலும் ஹைதராபாத் காபிலா ஓர் அரிய சேவை புரிந்துவந்தது. "காபிலயெ ஹுஜ்ஜாஜ தக்கன்" என்னும் பெயரால் பிரதிதினமும் ஓர் பிரசுரம் உர்தூவில் வெளியிட்டு கப்பலி லுள்ள முக்கியஸ்தர்கட்கு அப்பிரசுரம் வினி யோகிக்கப்பட்டு வந்தது. அதில் ஹஜ்ஜுடைய இரகசியங்களும் நடவடிக்கைகளும் காபிலாவுக் குத் தேவையான இதர விஷயங்களும் குறிப் பிடப்பட்டிருந்தன.

6-2-37-இன்றிரவு பஸ்ட் கிளாஸ் டெக்கில் எங்கள் காபிலா ஸாலார் அல்ஹாஜ் ஜே யெம். முகம்மது இஸ்மாயீல் ருவுத்தர் அவர்களால் மௌலிதுசபை நடத்தி வைக்கப்பட்டது. அச் சபைக்கு கப்பலிலுள்ள அரபிகளும் முக்கியஸ் தர்களும் சுமார் 300 பேர்கள் வரை விஜயஞ் செய்திருந்தனர். மதீனா ஷெய்கு அவர்களால் மௌலிது ஷரீப் ஆரம்பிக்கப்பட்டு புர்தா, உர்தூ கஸீதாக்கள் ஓதப்பட்டு முடிவில் எல்லோ ருக்கும் ஐஸ்கிரீம் வழங்கப்பட்டது. அதன்பின் மௌலானா ஸித்தீகி அவர்கள் அரிய உபன் னியாசம் புரிந்தார்கள்.

பம்பாயிலிருந்து பிரயாணமானதுமுதல் அம ர்க்கையாக யிருந்தகடல் அன்று சற்று கொந்த ளிப்பாக யிருந்தது.

7-2-37 யன்று காலை 10 மணிக்கு கப்பல் "கமரான்" துறைமுகம் வந்து அடைந்தது. கப்பலில் பிரயாணிகளுக்கு ஏதாகிலும்தொத்து வியாதி ஏற்பட்டு அவ்வியாதி பரவிவருமாயின் அதுபொழுது 5 தினங்கள் வரை பிரயாணிகள் கமரானில் கொரண்டின் வைக்கப்படுகிறார்கள். கப்பலில் யாருக்காகிலும் தொத்து வியாதி ஏற் பட்டு அவ்வியாதி மற்றவர்களுக்குப் பரவா திருக்குமாயின் பிரயாணிகள் கரையில் இறக் கப்பட்டு பரிசோதனைக்குப்பின் கப்பலில் ஏற் றப்படுகிறார்கள். கப்பலில் யாருக்குமே தொத்து வியாதி ஏற்படாதிருக்குமாயின் ஸ்டீம்லான்ஞ்சி மூலம் டாக்டர் முதலிய முக்கியஸ்தர்கள் கப்ப லில் பிரவேசித்து கப்பலிலுள்ள டாக்டர்களைக் கலந்துகொண்டு 2 மணி தாமதத்திற்குபின் கப் பல்பிரயாணிக்க அனுமதித்து விடுகின்றனர். கப்பலின் இருபுறங்களிலும் படகுகளில் ஆடு கோழி மீன் முதலிய தேவையான சாமான்களை வைத்து விற்பனை செய்வதால், ஹாஜிகள் தங்களுக்குத் தேவையானவைகளை வாங்கிக் கொள்கிறார்கள். அன்று பகல் 12 மணிக்கு கப்பல் பிரயாணமாயிற்று. பாஸஞ்ஜர்கள் யாவ ருக்கும் போரா ஜமாஅத்தார் சார்பாகத் தஅ வத்து அளிக்கப்பட்டது. 3 வது வகுப்பு பாஸஞ்ஜர்களுக்கு அவர்களின் இருப்பிடங்களி லும் முதல் வகுப்பு பாஸஞ்ஜர்களுக்கு "டை னிங் ஹாலி"லும் அறுஞ்சுவை பொருந்திய பல பதார்த்தங்கள் அமைந்த உணவுகளளிக் கப்பட்டன.

8-2-37 யன்று கப்பல் அதிகாரிகளாலும் ஹைதராபாத் காபிலா பிரசுரத்தாலும் இன்று மாலை 6 மணிக்கு கப்பல் 'எலம்லம்' எல்லையை அடையுமென அறிவிக்கப்பட்டது. 'எலம்லம்' என்பது இந்தியாவிலிருந்து ஹஜ்ஜுக்குச் செல் வோர் இஹ்ராம் கட்டவேண்டிய எல்லையாகும். இந்த இடம் கப்பல் செல்லும் வழியில் இல்லா விட்டாலும் அதற்கு நேரே கப்பல் செல்லும் நேரத்தை கப்பலோட்டிகள் தெரிந்து அதனை ஹாஜிகளுக்கு அறிவிக்கின்றனர். அதற்கிணங்க எல்லோரும் நீராடி காலையிலிருந்தே இஹ்ராம் கட்ட ஆரம்பித்து விடுகின்றனர். 'அஸர்'

தொழுகைக்குள் எல்லோரும் இஹ்ராம் கட்டிக் கொண்டு 'தல்பியா' முழக்க ஆரம்பித்தனர்.

இஹ்ராம்

இஹ்ராம், ஹஜ்ஜு உம்ராவுக்கு முதலாவதான பர்லாகும். ஆகவே ஹஜ்ஜை நிறைவேற்றவோ, அல்லது உம்ரா செய்யவோ, அல்லது வேறு எந்தக் காரியமாகவோ மக்கமா நகர் செல்ல நாடுவோர் 'இஹ்ராம்' அன்றி அங்கு செல்லலாகாது. மீகாத்திலேயே இஹ்ராம் கட்டிக் கொள்ளவேண்டும். மக்கமா நகரைச் சுற்றிலுமுள்ள பலபாகங்களிலும் ஹரமின் எல்லை குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த எல்லையைக் கடப்போர் இஹ்ராமுடனேயே இருக்க வேண்டும். இஹ்ராமின்றி கடந்து செல்வாராயின் அவர் ஓர் ஆடு கொடுக்கவேண்டும்.

நீராடி அல்லது ஒளுச்செய்து இடுப்பில் தையலில்லாத ஒரு வேஷ்டியையோ, அல்லது துவாலையையோ உடுத்தி, ஒரு வேஷ்டியையோ அல்லது துவாலையையோ மேலேபோர்த்திக் கொண்டு தலையைமூடிக்கொண்டு இரண்டு ரக்கஅத் நபில் தொழவேண்டும். தொழுத அந்த இடத்திலேயே உட்கார்ந்து தலையைத் திறந்து, உம்ராவுக்காக மட்டுமோ, அல்லது உம்ரா ஹஜ்ஜு இரண்டுக்கும் சேர்த்தோ இஹ்ராம் கட்டுவதாய் நிய்யத்துச்செய்து, உம்ராவுக்கு மட்டிலுமானால் "அல்லாஹும்ம இன்னீ உரீதுல் உம்றத்த பயஸ்ஸிர்ஹா லீ பத்தகப்பல் ஹாமின்னி" ஆண்டவனே! யான் உம்ருவை நிறைவேற்ற நாடுகின்றேன், அதனை எனக்கு இலேசாக ஆக்கிவைத்து அதனை என்னில் நின்றும் ஏற்றுக்கொள்வாயாக, வென்றும், உம்ரா, ஹஜ்ஜு இவ்விரண்டிற்கும் இஹ்ராம் கட்டுவதாயின் "அல்லா ஹும்ம இன்னீ உரீதுல் ஹஜ்ஜ வல் உம்றத்த பயஸ்ஸிர்ஹுமா லீ பத்த கப்பல் ஹுமா மின்னி." யாஅல்லாஹ்! யான் ஹஜ்ஜையும் உம்ராவையும் நிறைவேற்ற இஹ்ராம் கட்டிக் கொள்கிறேன். அவை இரண்டையும் இலேசாக்கி வைத்து என்னில் நின்றும் ஒப்புக்கொள்வாயாக, என பிரார்த்தனை புரிந்து "லப்பைக் கல்லாஹும்ம லப்பைக், லப்பைக் லாஷரீக்க லக்க லப்பைக், இன்னல் ஹம்த வன்னிஅமத்த லக், வல்முல்க்க லாஷரீக் லக்" என்னும் தல்பியாவை ஓதி இதனை ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னும் மற்ற நேரங்களிலும் சொல்லிக் கொண்டிருக்கவேண்டும். உம்ராவுக்கு மட்டும் இஹ்ராம் கட்டியவர்கள் இந்த தல்பியாவை, கஅபத்துல்லாவை தவாப் செய்ய ஆரம்பிக்கும்போதும், ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டியவர்கள் துல்ஹஜ்ஜு 10-ம் நாள் ஜம்ரத்துல் உக்பாவில் ஆரம்பமாக கல் எறியும் போதும் விட்டுவிடவேண்டும்.

மற்ற நேரங்களில் தஸ்பீஹ், தஹ்மீத், தஹ்லீல், தக்பீருடைய கலிமாக்களாகிய "ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்" என்பதையும், நபிகள் கோமான் (ஸல்.) அவர்கள் மீது சலவாத்தையும் ஓதி வரவேண்டும்.

ஆண் பிள்ளைகள் இஹ்ராமுடைய நேரத்தில் துவைத்து துப்பரவு செய்த துணிகளையோ, அல்லது புதிதானவைகளையோ அணிய வேண்டும். வெள்ளையாக யிருக்கவேண்டியது உத்தமம். ரூபாய்களை பத்திரப்படுத்திவைக்கும் வாரையும் இடுப்பில் கட்டிக் கொள்ளலாம். ஆனால் அதில் ரூபாய் காசு வைத்திருப்பது ஷர்த்து. காலில் பாதத்தின்மேற் புறத்திலுள்ள முட்டு மறையாமல் செருப்போ, பூட்ஸோ அணிந்து கொள்ளலாம்.

பெண்கள் தையலை உடைய புடவைகளை அணிந்து தலையை மூடிக்கொண்டு முகத்தில் துணிபடாது காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

இஹ்ராமையுடையோர் பெண்டிர்களுடன் சுகபோகம் செய்யாமலும், துர்வார்த்தை யாடாமலும், யாருடனும் சண்டை சச்சரவு செய்து கொள்ளாமலும், உயிர்ப்பிராணிகளை வேட்டையாடாமலும், கால் சட்டை தலைப்பாகை, சட்டை மேஜோடு அணிந்து கொள்ளாமலும், குங்குமா, குசும்பா முதலிய சாயம் துவைக்கப்பட்ட வஸ்திரங்களை அணியாமலும் இருக்க வேண்டும். உரோமங்களை சிறைக்கவோ, கத்தரிக்கவோ கூடாது. ஒரு உரோமத்தையாகிலும் பிடுங்கி விடுவானுகில் கப்பாரா வாஜிபாகும். நகத்தை கத்தரிக்கக்கூடாது. வாசனை திரவியங்களை பூசிக்கொள்ளவோ முகரவோ, தலை முகம் இவைகளில் எண்ணெய் பூசிக்கொள்ளவோ கூடாது. எச்சந்தர்ப்பங்களிலும், முகம் தலை இவைகளை மறைக்கக்கூடாது. இஃதென்ன இவைகளில் துணி படவும் செய்யலாகாது. ஆனால் துயில்புரியுங்கால் தலையணையின்மீது தலையையோ கன்னத்தையோ வைத்துக் கொள்ளலாம். ஆனால் அதன்மீது முகத்தையோ, நெற்றியையோ வைக்கக்கூடாது. வேட்டையாடுவதும், எறும்பு, ஈ, பூச்சி, மூட்டை, பேன் முதலியவைகளை கொல்வதும் கூடாது. ஆனால் தண்ணீரில் சாதாரணமாக குளிக்கலாம். அதுபொழுது துப்

பறவு உடைய எண்ணத்தோடு திரேகத்தைத் தேய்த்து அழுக்கு எடுக்காமல் சாதாரணமாக திரேகத்தில் தண்ணீர் ஊற்றவேண்டும். இஹ்ராமுடைய நேரத்தில் வஸ்த்திரங்களை மாற்றியும் கொள்ளலாம். எனவே இஹ்ராமுடைய பிரதான நோக்கமே 'இஷ்கு' கொண்டவன் போலாய் விடுவதாகும். வெளிக்கோலத்தினால் குணத்திலும் மாறுதலேற்பட்டு விடுகிறது. உதாரணமாக,

ஒருவன் ஒரு வஸ்துவின்மீது பிரீதிகொண்டு சதா அதன்மீது நோட்டங்கொண்டிருப்பானாகில் அவன் தன்னை மறந்து தனது அழகு, சிங்காரிப்பு முதலியவைகளை விட்டு, தான் பிரீதி கொண்ட வஸ்துவையே பிரதானமாகக் கோரியிருப்பான். அத்தன்மைபோல் அல்லாஹ்வின் திருகஃபாவை சந்திக்க மோகங்கொண்டு அதனையே சிந்தைலிறுத்திச் செல்பவன் தனது அழகையும் சுகத்தையும் விட்டொழித்து ஏகாந்திபோல் செல்லவேண்டு மென்பதே இந்த இஹ்ராமின் கருத்தாகும். மேலும் அல்லாஹ் ஜல்லஷானஹுவத ஆலாவின் சன்னிதானத்தில் சீமானும் ஏழையும் ஒரே நிலைமையிலுள்ளவர்களாதலின் அவனது வீட்டைச் சந்திக்க வருபவர் யாவரும் ஒரே விதமாக ஒரே உடையில் செல்ல வேண்டுமென்பதே இந்த இஹ்ராமின் பிரதான நோக்கமாகும்.

முதன் முதல் மதீனா சென்று அங்கிருந்து மக்காமுஅல்லமா வரவிரும்புவோர் கப்பலில் இஹ்ராம் கட்டவேண்டியதில்லை. மதீனமா நகரை விட்டு புறப்பட்டு வரும்போது, இஹ்ராம் கட்டிக்கொள்ளலாம். இவ்வாறு இஹ்ராம் கட்டியோரில் 'முத்தமத்திஉ' அதாவது உம்ரா, ஹஜ்ஜை இவ்விரண்டையும் தனித்தனியே செய்ய நாடுவோர் ஹறம் ஷரீப் சென்று உம்ராவை நிறைவேற்றியவுடன் ஹலாலாய் விடுகின்றனர். இன்னோர் ஹஜ்ஜுக்காக மக்காவிலிருந்து துல்ஹஜ்ஜு 7, 8-வது நாளில் இஹ்ராம் கட்டிக்கொண்டு ஹஜ்ஜுடைய கிரியைகளைப் பூர்த்தி செய்கின்றனர்.

ஜித்தா துறைமுகம்

9-2-37 யன்று காலை 8-மணி முதல் இருபுறங்களிலும் மலைகள் தென்பட ஆரம்பித்தன. 12-மணிக்கெல்லாம் ஜித்தாவின் கட்டிடங்கள் தென்பட்டன. பகல் 1-மணிக்கு கப்பல் ஜித்தா துறைமுகம்வந்து சேர்ந்து நங்கூரம் போடப்பெற்றது. டாக்டர் முதலிய அதிகாரிகள்வந்து பார்வையிட்டபின் 2-மணி முதல் பாசஞ்ஜர்கள் ஸ்டீம் லான்ஜிகளிலும் போட்டுகளிலும் இறங்க ஆரம்பித்தனர். நாங்கள் 4-மணிக்கு இறங்க ஆரத்து 5-மணி சுமாருக்கு கரைவந்து சேர்ந்தோம். சாமான்களும் சீக்கிரமாகவே போட்டில் கரைவந்து சேர்ந்துவிட்டன. மத்ராஸ் முதவ்விப் செய்யித் ஹாஷிம் ஷில்லியும் அவருடைய ஜித்தா வக்கீல் (ஏஜண்டு) சாலிஸு பஸுனியும் வேலையாட்களும் துறைமுகத்தில் எங்களை வரவேற்று பாஸ் போர்ட்களையெல்லாம் வாங்கிக்கொண்டு மக்ரிப் தொழுகைக்குப்பின் ஜித்தாவிலுள்ள அவர்களுடைய இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். சட்டப்படி சாமான்களையெல்லாம் ஜித்தா ஏஜெண்டிடம் ஒப்புவித்து வந்து விட்டோம். அவர்கள் தக்க பந்தோபஸ்துடன் அவைகளை வீடுகொண்டுவந்து சேர்த்தார்கள்.

ஜித்தாவில் பிரயாணிகள் போட்டுகளில் கரைவந்துசேர கப்பல் கம்பெனியாரே பம்பாயில் டிக்கட்டுடன் கூலியும் சேர்த்து வாங்கிக் கொண்டாலும், ஸ்டீம்லான்ஜிகளில் வருபவர்கள் நபர் 1-க்கு ரூபாய் ஒன்று வீதமும், சாமான் ஏற்றிவரும் படகுக்கு பக்ஷிஸ் நன்கொடை நபருக்கு 8-அணு வீதமும் கொடுக்க வேண்டியதேற்படுகிறது. தீர்வைச் சாவடியில் சாமான்கள் இலேசாகப் பார்க்கப்பட்டு முக்கிய சாமான்கட்கு மட்டும் தீர்வை போடப்படுகிறது.

ஜித்தாவின் தோற்றம்

கரைக்குச் சுமார் இரண்டு மைலுக்கு அப்பால் கப்பல் நிற்கின்றது. இதற்கிடையே கடலில் மேடுகளிருப்பதால் படகுகள் வெகுதுலையில் சுற்றி வரவேண்டியதாகவிருக்கிறது. கரையில்தீர்வைச்சாவடி முதலிய சில கட்டிடங்கள் சமீபத்தில் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றது. அநேகமாய் ஊரின் கட்டிடங்களெல்லாம் புராதன மானவைகளாகவே யிருக்கின்றன. கடலுக்குச் சமீபத்தில் பற்பலதேச கௌன்ஸில் ஆபீஸ்களும் மிஸ்ர் கப்பல் கம்பெனியும், ஹோட்டலும் புதியவனவாகவே யிருக்கிறன. நீளமான கடைவீதிகளும் காய்கறி மார்க்கட்டும், புராதன பலமஸ்ஜிதுகளு மிருக்கிறது. பிரிட்டிஷ் கௌன்ஸில் ஆபீஸில் தக்க மருந்துசாலையும் தேர்ச்சி பெற்ற டாக்டரு மிருக்கிறார்.

மக்கா புறப்பாடு

பாஸ்போர்ட்டு முதலியவைகளை பதிவு செய்துகொண்டு கவர்ன்மெண்டுக்கு செலுத்த

வேண்டிய வரி ரூ. 62-4-0 யும் செலுத்திவிட்டு 10-ம் தேதி காலை 8-மணிக்கு மும்தாஜ் பஸ்ஸில் திருமக்கா ஷரீபை நோக்கிப் பிரயாணமானோம். சுமார் 10-மணிக்கு "ஷுமைஸீ" என்னும் மன்ஜிலில் இறங்கி ஒளுச்செய்து கொண்டு 'தல்பியா, தக்பீர்' முழக்கத்துடன் ஆனந்தக் கண்ணீர் ததும்பியவர்களாய் ஹறம் ஷரீப் எல்லைக்குள் பிரவேசித்தோம்.

ஹறம் எல்லை

மக்கமா நகரையும் அதற்குச் சூழாவுள்ள சில இடங்களையும் 'ஹரம் ஷரீப்' எனக் கூறப்படும். அங்கு கஃபா ஷரீப் இருப்பதால் அல்லாஹ்தஆலா அப்பூமியை சங்கைபடுத்தி யிருக்கிறான். அங்கு நாம் செல்லும்போது ஒரு மிஸ்கீனாகிய மனிதன் ஒரு பாதுஷாவின் தர்பாருக்குச் செல்லும்போது எவ்வாறு தாழ்மையோடு செல்வானோ அவ்வாறு செல்ல வேண்டும்.

ஹஸ்ரத் ஆதம் (அலை.) அவர்கள் இப்பூ உலகின்கண் இறங்கியபோது ஷைத்தானுக்கு பயந்தார்கள். அதுபொழுது ஹஸ்ரத் அவர்களை காப்பாற்றிக் கொள்வதற்கு அல்லாஹ்தஆலா மலக்குகளை அனுப்பி வைத்தான். அந்த மலக்குகள் மக்காவின் நானுபாகங்களையும் சூழ்ந்து காவல்புரிந்தார்கள். எந்த பூமி இந்த கார்மானத்தினுள்ளிருந்ததோ அது ஹறம் பூமியாகும். அல்லாஹ்தஆலா அந்த பூமிக்கு சங்கை அளித்து "அதில் எவர் பிரவேசிக்கின்றாரோ அவர் அச்சந்தீர்ந்தவராய் விடுகின்றார்" எனக்கூறி யிருக்கிறான். இந்த ஹறமின் எல்லை மதீனா ஷரீபின் பக்கல் மக்காவிற்கு மூன்று மைல் தூரத்திலுள்ள தன்யீமும், எமன், தாயிப், ஜஃரானா, ஜித்தாவின் பக்கல் ஏழுமைலும் இருக்கிறது. இந்த ஹறமின் எல்லையைக் கடந்து செல்லும்போது இஸ்திக்பார், தல்பியா இவைகளை மிகுதமாய் ஓத வேண்டும். ஹறம் எல்லையில் பிரவேசிக்கும்போது "அல்லாஹும்ம, ஹாதா, ஹறமுக, வஇன்னக, குல்த்த, மன்தகலஹு, கான ஆமினா, பஹற்றிம் லஹ்மீ, வதமீ, வபஷரீ, வஅல்மீ, அலன்னார், வகினி, அதாபக, யவ்மல்ஹிசாப்" இந்த துஆவை ஓத வேண்டும்.

இதன் பொருள் "யா அல்லாஹ்! இது உன்னுடைய ஹறமாகும். இதில் பிரவேசிப்பவர் அச்சந் தீர்ந்தவராய் விடுகின்றார், என நீ கூறியிருக்கின்றாய். ஆதலின் என்னுடைய மாமிசம் உதிரம் திரேகம் எலும்பு இவைகளை நரகம் தீண்டாது, ஹாராமாக்கி விடுவாயாக. கணக்கு கேள்வியுடைய தினத்தில் உன்னுடைய வேதனையை விட்டு என்னைக் காப்பாற்றிக் கொள்வாயாக என்பதே.

மக்கா பிரவேசம்

சுமார் 11-மணிக்கு மக்காவிலுள்ள போலிஸ் ஸ்டேஷனில் கோஸான் பதிந்துகொண்டு நகரினுட் பிரவேசித்து நேராக மத்ராஸ் முதவ்விப் சையித் ஹாஷிம் அவர்களது வீடு வந்தடைந்தோம். அங்கு சற்று களைப்பாறிக்கொண்டு மஸ்ஜிதுல் ஹறுமை நோக்கி புறப்பட்டு 'தல்பியா' சொன்னவர்களாய், அல்லாஹ்வின் கிருபையால் எல்லோரும் அவனுடைய பரிசுத்த ஸ்தலமாகிய திருகஃபாவை தெரிசிக்க கிடைத்த பாக்கியத்தை நினைத்து நினைத்து கண்ணீர் வடித்தவர்களாய் 'பாபுஸ்ஸலாம்' வழியாய் பிரார்த்தனை புரிந்தவர்களாய் மஸ்ஜிதுல் ஹாராமில் நுழைந்தோம். அதுபொழுது, "பிஸ்மில்லாஹி, அல்ஹம்துலில்லாஹி, வஸ்ஸலாத்து, அலாரஸுலில்லாஹி, றப்பி அத்கில்னீ, முத்கலஸித்கின், வஅக்ரிஜ்னீ, முக்ரஜஸித்கின், வஜ்அல்னீ, மின்லதுன்க, சுல்தானன்னஸீரா" அதாவது அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு இதில் நான் பிரவேசிக்கின்றேன். சகல புகழும் அல்லாஹ்வுக்குச் சொந்தமானதாகும். யாஅல்லாஹ்! உண்மையான பிரவேசமாக இதில் என்னை பிரவேசிக்கச் செய்வாயாக. இன்னும் உண்மையான பிரத்திப்படுதலாக என்னை புறப்படச் செய்வாயாக. இன்னும் உன்னிடத்திலிருந்து பெரும் உதவியை எனக்கு சன்மான மளிப்பாயாக என்பதே. ஹறம்ஷரீபினுட் பிரவேசித்து கஃபத்துல்லாஹ்வின்மீது பார்மை ஏற்படும்போது "லாயிலாஹ, இல்லல்லாஹு, வல்லாஹு அக்பர், வலில்லாஹில் ஹம்து" எனக் கூறிவிட்டு தனக்கு தேவையானவற்றை அல்லாஹ்தஆலாவிடம் கேட்க வேண்டும். இது துஆக்களை ஒப்புக்கொள்ளப்படும் நேரமென கூறப்பட்டிருக்கிறது.

கஃபாஷரீப்

ஹஜ்றத் ஆதம் (அலை.) அவர்கள் உலகிற்கு அனுப்பப் பட்டபோது வானுலகிலுள்ள "பைத்துல் மஃமூரைச்சுற்றி மலக்குகள் தவாபு செய்வதுபோல் பூமியில் எனக்காக ஒரு ஆலயத்தைக் கட்டி அதனைச் சுற்றி தவாபு செய்யும்" என்பதாக ஹஜ்றத் ஆதம் (அலை.

அவர்களுக்கு அல்லாஹுத ஆலா கட்டளையிட்டான். ஹஜ்றத் ஆதம் (அலை.) அவர்களது உடலத்தைச் சிருஷ்டிப்பதற்காக் எந்த இடத்திலிருந்து மண்ணெடுக்கப் பட்டதோ அந்த இடத்தை ஹஜ்றத் ஆதம் (ஸல்.) அவர்களுக்கு ஹஜ்றத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் காண்பித்துக் கொடுத்தார்கள். எனவே, மலக்குகளின் உதவியுடன் ஹஜ்றத் ஆதம் (அலை.) அவர்கள் அந்த இடத்தில் "கஃபா" என்ற தேவாலயத்தின் அஸ்திவாரத்தை ஏற்படுத்தி கட்டிடம் கட்டினார்கள். தவிரவும் அல்லாஹ்தஆலா இவ்வுலகில் பூமியை சிருஷ்டிப்பதற்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் ஜலத்தை சிருஷ்டித்தான். இப்பொழுது கஃபத்துல்லா இருக்கிற இடம் அதுபொழுது ஜலத்தில்மேல் நுரையாக மிதந்துகொண்டிருந்தது. பின்னர் அல்லாஹ்தஆலா சகல பூமிகளையும் அந்த நுரையிலிருந்தே சிருஷ்டித்தான். ஆகவே சகல பூமிக்கும், இதுபொழுது கஃபத்துல்லா இருக்கும் இடம்தான் மூலஸ்தானமாகவும் சத்தாகவுமிருக்கிறது. இந்த இடம் பூமிக்கு அசலாவும் மனிதருக்கு ஆதி பிதாவான ஹஸ்ரத் ஆதம் (அலை.) அவர்களுடைய உடலத்தை சிருஷ்டிப்பதற்கு மண் எடுக்கப்பட்டதாகவும் இருப்பதால் அந்த இடம் உலகத்திற்கு மத்திபமும் பிரதானமுமான இடமாக அமைந்தது.

பின்னர் ஹஜ்றத் நூஹு (அலை.) அவர்களது காலத்திலேற்பட்ட பெருவெள்ளத்தின் போழ்து கஃபாவின் கட்டிடம் அழிந்து அதிருந்த இடம் சிவப்பு நிறமுள்ள ஒரு திட்டுபோலிருந்தது. அக்காலத்திலுள்ளவர்கள் அச்சிவப்பு மேட்டை கௌரவித்துப் புனிதமாகப் பாராட்டிக் கொண்டாடி வந்தார்கள். பிரார்த்தனைகள், வேண்டுதல்கள், காணிக்கைகள் முதலியவைகளெல்லாம் அந்தஇடத்தில் செய்யப்பட்டுவந்தன. இவ்விதமாக ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் காலம்வரை இருந்து வந்தது.

பிறகு, ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்கள் நம்றூத் அரசனையும் அவன் சமூகத்தாரையும் சன்மார்க்கத்தி லழைத்தபோது அவர்கள் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களை அங்கீகரிக்க மறுத்தது மட்டுமில்லாமல் அக்கினிக் குன்னத்திலும் போட்டு, அதிலிருந்து ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் க்ஷேமமாக வெளிவந்த பின், இறைவன் கட்டளைப்படி அத்தேசத்தை ஹிஜ்றத்துச் செய்து வெளியேறியபோது அவர்களது மனைவியான பீபீஸாரா (றலி) அவர்களும் தமது கணவருடன் ஹிஜ்றத்துச் செய்து வந்து, முதலில் எகிப்திலும் அப்புறம் பாலஸ்தீனத்திலும் குடியிருந்தார்கள். பீபிஸாரா (றலி.) அவர்கள் இதுவரை மக்கட் பேற்றையடையும் பாக்கியத்தைப் பெறுததால் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் பீபிஹாஜரா (றலி.) அவர்களையும் விவாகம் செய்து கொண்டார்கள். இவரது வயிற்றில் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள், ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களுக்கு முதற் குமாரராகப் பிறந்தார்கள். கொஞ்சகாலத்திற்குப்பின் இறைவன் கட்டளைப்படி ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் தங்கள் புதல்வரான ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களையும், அவரைப் பெற்றெடுத்த மாதாவாகிய தமது இரண்டாவது மனைவி பீபிஹாஜரா (றலி.) அவர்களையும் இப்பொழுது கஃபா இருந்து வருகிற இடத்தில் கொண்டுவந்து இருவரையும் விட்டுச் சென்றார்கள். அக்காலத்தில் இந்த இடம் சிவப்பு மேடாகவும் இதனைச் சுற்றியுள்ள பிரதேசம் நீர்வள மில்லாமல் வறண்ட பூமியாகவு மிருந்தது. ஆனல், ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் தமது குடும்பத்திலுள்ள இருவரையும் விட்டுப்பிரியும்போது இந்த இடத்தை ஒரு நகரமாக்கும்படியாகவும், சகலவிதமான கனிகளும் கிடைக்ககூடிய இடமாக ஆக்கும்படியும் இன்னும் சில பிரார்த்தனைகளையும் செய்தார்கள்.

ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் தங்கள் மனைவியையும் மைந்தரையும் விட்டுப் பிரியும்போது அவ்விருவருக்கும் கொடுத்துவிட்டுச் சென்ற உணவுப் பதார்த்தமும் ஜலமும் செலவான பின்னர் குழந்தையாயிருந்த ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் தாகவிடாயினல் பூமியில் கிடந்து துடித்துக்கொண்டிருந்தார்கள். அவரது அன்னையான பீபிஹாஜரா (றலி.) அவர்கள் தமதுபுதல்வருக்காக ஜலம்தேடி பக்கத்திலிருந்த ஸபா, மர்வா என்ற குன்றுகளில் அங்கு மிங்கும் ஓடி நீருற்றிருக்கிறதா என்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் துடித்ததால் அவர்களது காலால் உறையப்பட்ட இடத்திலிருந்து ஊற்று உண்டாகி ஜலம் பெருகி வடிய வாரம்பித்தது. இதனைப் பார்த்த பீபிஹாஜரா (றலி.) அவர்கள் ஓடிவந்து அதனை

வடிந்துபோக விடாமற்றடுத்து வைத்துக் கொண்டார்கள். அவ்வூற்றுதான் இன்றளவும் "ஜம்ஜம்" கிணறு என்னும் பெயரால் விளங்கி வருகிறது. ஜர்ஹம் என்ற கோத்திரத்தார் சிலகாலத்திற்குப் பிறகு யமன் தேசத்திலிருந்து வந்து பீபீஹாஜரா (றலி.) அவர்களது அனுமதியின்பேரில் அங்கு குடியேறினர். பின்னர் நாளடைவில் அந்த ஸ்தலம் ஒரு ஊராக மாறிற்று. அந்த ஊர்தான் தற்போது "மக்கா" என்ற பெயரால் உலகப் பிரசித்தி பெற்று விளங்குகிறது.

ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் வெகுகாலமாகப் புத்திர பாக்கியத்தை அடையாமலிருந்து, அனேகம் பிரார்த்தனைகளுக்குப் பிறகு அடைந்த புதல்வரான ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.)அவர்களையும், அவரது மாதாவாகிய தமது அருமை வாழ்க்கைத் துணைவி பீபீஹாஜரா (றலி.) அவர்களையும் இறைவன் கட்டளைப்படி இந்த இடத்தில் விட்டுச் சென்றுவிட்டாலும் தமது புதல்வரைப்பற்றிய சிந்தையில்லாமலிருந்து விடவில்லை. தமது மைந்தரைப் பார்க்கவேண்டுமென்ற நோக்கத்தால் இருமுறை திருமக்காவிற்கு வந்தார்கள். ஆயினும், மைந்தரைக்காணும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. பிறகு மூன்றாவது முறையாக திருமக்காவில் தமது மைந்தருடன் தங்கி இருக்க வேண்டு மென்ற நோக்கத்துடன் வந்தார்கள். அதாவது ஹஜ்றத் ஆதம் (அலை.) அவர்கள் காலத்தில் இறைவனை வணங்குவதற்காகக் கட்டப்பட்டு, ஹஜ்றத் நூஹ் (அலை.) அவர்களது காலத்திலேற்பட்ட பிரளயத்தால் அழிந்து சிவப்பு மண்மேடாக இருந்த கஃபாவை மறுபடியும் புதுப்பித்துக் கட்டுமாறு அல்லாஹ்தஆலா கட்டளைபிட்டான். இந்த இடத்தில் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் குடியேற்றப்பட்டிருந்ததால் ஹஜ்ரத்இப்றாஹீம் (அலை.) அங்குவந்து தங்கி இருந்து தேவாலயத்தைக் கட்டும் பணியிலீடுபட்டார்கள். ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் கட்டிடத்தை கட்டுபவர்களாகவும், ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களுக்கு உதவி புரிபவர்களாகவு மிருந்தார்கள். இவ்வாறு தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டது. அதுபோழ்து அவ்வாலயம் சதுரமாக இருந்ததால் அதற்கு அறபியில் "கஃபா" நற்சதுரமானது என்ற பெயர் வந்தது.

ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) ஆகிய இருவராலும் அக்காலத்தில் கட்டப்பட்ட "கஃபா" என்ற அத்தேவாலயம் 32 முழம் நீளம், 22 முழம் அகலம், 9 முழம்உயரமுள்ளதாக இருந்தது. அக்காலத்தில் இதற்கு நான்கு புறமும் சுவர்கள் மட்டிலுமே இருந்தன. முகடு போடப்படவில்லை. உள்ளே செல்வதற்காக கிழக்குப் பக்கத்துச் சுவரில் ஒருவழி மட்டிலுமிருந்தது. அவ்வழியில் நிலை, கதவுகள் வைக்கப்படவில்லை.

ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள், திருமக்காவில் குடியேறி இருந்த ஜர்ஹம் கோத்திரத்திலுள்ள பிரபலஸ்தரான "மலால்" என்பவரின் புதல்வியை மணம் செய்திருந்தார்கள். இவர்களுக்கு 12 புதல்வர்கள் பிறந்தனர். ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களது வபாத்திற்குப் பிறகு அவர்களது மூத்த புதல்வரான நாபித் என்பவர் கஃபாஷரீபுக்கு முத்தவல்லியானார். இவர் இறந்தபின்னர் இவரது கொள்வழிப்பாட்டனாரான மலால் என்பவர் கஃபாவுக்கு முத்தவல்லியானார். இவ்விதமாக கஃபாஷரீபை மேல்பார்க்கும்பேறு ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களது சந்ததியினரிடமிருந்து மாறி ஜர்ஹம் கபீலாவினிடம் வந்தது. பின்னர், இந்தக் கபிலாவிலிருந்த இப்பதவியை அங்கு குடியேறி இருந்த மற்றொரு கபீலாவான 'கஜாஆ' என்ற கூட்டத்தினர் கைப்பற்றிக் கொண்டனர். அதுசமயம் ஆங்கிருந்த பனூ இஸ்மாயீல்கள் அதாவது ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களது சந்ததியினர் கஃபாவை மேற்பார்வை செய்யும்பேறு தங்களுக்குத்தான் வேண்டுமென்று தாவாச் செய்யவில்லை. பின்னர், பனூ இஸ்மாயீல்களில் குஸ்ஸிய்யுப்னுகிலாப்' என்பவர் மிகவும் பிரக்யாதி பெற்றார். அக்காலத்தில், ஹுலைல் என்பவர் கஃபாவுக்கு முத்தவல்லியாக இருந்தார். இவர் மேற்சொன்ன கஜாஆ கபீலாவைச் சேர்ந்தவர். இவரது புதல்வியை குஸ்ஸிய்யுப்னுகிலாப் என்பவர் மணம் புரிந்தார். இதன் காரணமாக ஹுலைல் மரணமடையும் தருவாயில் தமது மருகரான குஸ்ஸிய்யுப்னுகிலாபுக்கு கஃபாவை மேற்பார்வை பார்க்கும் பதவியை அளித்தார். இவ்விதத்தில் கஃபாவிற்கு முத்தவல்லியாக இருக்கும் பேறு ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களது சந்ததிகளிடம் மறுபடியும் வந்தது. இவர் முத்தவல்லி பதவிக்கு வந்தபின்னர் ஹாஜிகளுக்கு அநேக

விதமான வசதிகளைச் செய்தார். இவர் அங்கு ஒரு கட்டிடத்தைக் கட்டி அதற்கு 'தாருன்னத்வா' என்று பெயருமிட்டார். குறைஷியர்கள் யுத்தத்திற்குச் செல்லவோ அல்லது வியாபார சம்பந்தமாக வெளியிற் செல்லவோ, விவாகங்கள் நிகழ்த்தவோ, அல்லது வேறு பொதுக் காரியங்களைச் செய்யவோ வேண்டுமாயின் இக் கட்டிடத்தில் தான் ஒன்று கூடிக் கலந்தாலோசனை செய்வர். ஆயிரக்கணக்கான மைல்கள் பிரயாணஞ் செய்து அங்கு வரும் பல்லாயிரக் கணக்கான ஹாஜிகளுக்கு உபசாரம் செய்தல், ஜலவசதி யளித்தல் முதலிய வசதிகளுக்கெல்லாம் தனித்தனி இவர் ஆட்களை நியமித்துப் பொதுஜன ஊழியம் புரிந்தார். ஹஜ்ஜுடைய காலத்தில் அறபாவிற் செல்பவருக்கு வெளிச்சம் முதலானவைகள் இருக்கவேண்டும் என்பதற்காக "மஷ்அருல்ஹறும்" என்னும் ஸ்தலத்தை ஏற்பாடுசெய்து அங்கு விளக்குகள் போடுவதற்கு தோது செய்தார்.

நீண்டகால மாகிவிட்டதால் கஃபா என்ற இத்தேவாலயம் இடையிடையே மராமத்துச் செய்யப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும் வந்தது. இறுதியாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் நுபுவ்வத்துக்கிடைப்பதற்குமுன்னர் குறைஷியர்கள் "பைத்துல்லா"வை மறுபடியும் புதுப்பித்துக் கட்டினர். அதுபோழ்து ஹஜ்றுல் அஸ்வதை கஃபாவில் வைக்கும் பேறு தங்களுக்குத்தான் கிடைக்கவேண்டுமென்று குறைஷிக் கோத்திரங்கள் தகராறு செய்தன. இறுதியாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது ஆலோசனையின்படி ஹஜ்றுல் அஸ்வதை ஒரு துப்பட்டியின்மீது தூக்கிவைத்து குறைஷிக் கோத்திரத்துத் தலைவர்களெல்லோரும் சேர்ந்து அதனை உயர்த்தினர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அது இருக்கவேண்டிய இடத்தில் அதனை அமைத்தார்கள்.

இச்சமயத்திற்முன் அறபியர்கள் கஃபாவிற்கு முகடு போட்டனர். தரைமட்டத்திற்கு மேல் ஒரு மனிதனுடைய உயரத்திற்கு அப்பால் கஃபாவின் கிழக்குச்சுவரில் நிலை கதவுகளை ஏற்படுத்தினர். அதுபோழ்து மக்காவின் பழைய துறைமுகப்பட்டினமான "ஷுஐபா" வில்உரோமதேசத்து பழைய மரக்கலம் ஒன்று வந்தது. அம்மரக்கலத்தைக் குறைஷியர் விலைக்கு வாங்கி அதிலிருந்த மரச் சாமான்களை கஃபாவின் முகடு முதலிய வேலைகளுக்கு உபயோகித்தனர். இம் மரங்கள் கஃபாவுக்குப் போதியளவு நீளமாக இல்லாதிருந்ததால் நீளத்தில் வடக்குப் புறத்தில் 6 அல்லது 7 முழத்தைக் குறைத்து வடக்குச் சுவரைப் புதிய அஸ்திவாரத்தில் எழுப்பினர். ஆனால், அசல் கட்டிடத்திலிருந்து இப் புதிய கட்டிடத்துடன் சேராமல் விலகிப்போன பாதி முட்டை வடிவமுள்ள காலி இடத்தைச் சுற்றிலும் சுவர் எழுப்பினர். இந்தக் காலி இடத்திற்கு 'ஹத்தீம்' என்று பெயர்.

எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ 8-வது ஆண்டில் திருமக்காவை ஜெயித்த பின்னர் ஆதியில் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் கஃபாவைக் கட்டிய அளவிற்கு மறுபடியும் அதனைப் புதுப்பித்துக் கட்டுவது நலமென்றும் அதன் வடக்குச் சுவர் பழைய அஸ்திவாரத்தின்மீதே ஏற்படுத்தப்படவேண்டும் என்றும், ஹத்தீம் என்ற காலி இடத்தைக் கட்டிடத்திற்குள் சேர்த்து விடவேண்டும் என்றும், ஒரு தலைவாசலுக்குப் பதிலாக கிழக்கிலும் மேற்கிலும் ஒன்றுக்கொன்று எதிராக இரண்டு தலைவாசல்கள் ஏற்படுத்தினால் ஹாஜிகள் கஃபாவிற்குள் ஒரு தலைவாசல் வழியாகப் பிரவேசித்து மற்றொரு தலைவாசல் வழியாக வெளியில் வருவதற்கு வசதியாக இருக்கும் என்றும் நினைத்திருந்தார்கள். என்றாலும், சமீபகாலத்தில்தான் அதனைப் புதுப்பித்துக் கட்டியதால் தங்களது நோக்கத்தை அமலில் கொண்டுவர அவசரப்படவில்லை. பின்னர், ஹிஜ்ரீ 64-வது வருஷத்தில் மக்கா, மதீனா ஆகிய இரு க்ஷேத்திரங்களிலுமுள்ளவர்களது ஏகோபித்த அபிப்பிராயத்தால் கலீபாவாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஹஜ்றத் அப்துல்லாஹிப்னுஜுபைர் (றலி.) அவர்கள் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் விரும்பிய விதமாக கஃபா ஷரீபைப் புதுப்பித்துக் கட்டி ஆதியிலிருந்தஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களது அஸ்திவாரத்தின்மீது வைத்தார்கள். பின்னர் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பத்தில் அமீறுல் மூமினீன் ஹஜ்றத் அப்துல்லாஹிப்னுஜுபைர் (றலி.) அவர்கள் ஷஹீதாகிவிடவே ஹஜ்ஜாஜுப்னு யூஸுப் என்பவர் மக்காவின் கவர்னராக கலீபாவினால் நியமிக்கப்பட்டார். அவர் கஃபா ஷரீபை மறுபடியும் இடித்து குறைஷியர் கட்டியிருந்தது போலத் திரும்பவும் கட்டி ஒரு ஆள் உயரத்திற்கு மேலில் ஒரு தலைவாசலை மட்டும் வைத்து ஹத்தீமையும் பிரத்தியேகமாக ஏற்படுத்தினர்.

பின்னர், பதினொன்றாவது நூற்றாண்டில் ஏற்பட்ட வெள்ளத்தால் இக்கட்டிடம் மிகவும் பழுதாகி விடவே அப்பொழுதிருந்த கலீபாவான சுல்தான் முராதுகான் (றஹ்.) அவர்கள் ஹிஜ்ரீ 1040-வருஷத்தில் மிகவும் நேர்த்தியாகக் கட்டிடத்தைப் புதுப்பித்துக் கட்டினர். அவருடைய கட்டிடம்தான் இன்றளவும் இருந்துவருகிறது. இதுவும் குறைஷியர் கட்டிய நமூனாவிலேயே இருக்கிறது. ஆதியில் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் போட்ட நமூனாவிலில்லை. ஆனாலும், இப்பொழுதுள்ள ஹத்தீமுக்குட் செல்லவும் வெளியில் வரவும் கிழக்கிலும் மேற்கிலும் ஒன்றுக்கொன்று எதிராக இரண்டு பாதைகளிருக்கின்றன. ஹத்தீமைச் சுற்றிலும் சங்கமர்மரினால் நெஞ்சளவு, சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது.

கஃபா என்ற இவ்வாலயத்தின் கௌரவத்தை அதிகப்படுத்துவதற்கு அது இவ்வுலகிலேயே முதல் முதலாவதாக ஏகநாயனை வணங்குவதற்காக மலக்குகளின் உதவியைக்கொண்டு ஹஜ்றத் ஆதம் (அலை.) அவர்களால் கட்டப்பட்டது என்பது ஒன்றே போதுமானது. என்றாலும், எல்லாம்வல்ல ஆண்டகையின்பால் பக்தியும் விசுவாசமும் கொண்ட புண்ணியவான்கள் தங்களாலானதைச் செய்யாதிருப்பரோ? ஹஜ்றத் அப்துல்லா ஹிப்னுஜுபைர் (றலி) அவர்கள் கலீபாவாக இருந்தபோது கட்டிய கட்டிடத்தின் தூண்களில் தங்கக்கற்களைப் பதித்தார். அப்புறம் அப்துல் மலிக்கிப்னு மர்வான் என்பவர் கலீபாவாக இருந்தபோது இக்காரியத்திற்கென 36 ஆயிரம் அஷ்ரபிகளென்னும் தங்க நாணயங்களை அளித்தார். அப்பால் அமீனுர் ரஷீத்து என்பவர் கலீபாவாக வந்தபோது 18 ஆயிரம் அஷ்ரபிகளைச் செலவு செய்து கஃபாவின் வாசற்படி நிலை முதலியவைகளில் தங்கவேலைகளைச் செய்வித்தார்.

சில குறிப்பிட்ட நேரங்களில் கஃபாவினுட் பிரவேசிப்பதற்காக ஏணிவைக்கப்பட்டு ஹாஜிகள் அந்த ஏணிவழியே உட் செல்கின்றனர். உட்புறமும் கட்டிடம் நன்கு அழகாயிருக்கிறது. ஒரு ஆள்மட்டிற்கு "சங்கமர்மர்" கற்களைக்கொண்டு வேலைப்பாடு செய்யப்பட்டு அதற்குமேல் சிவப்புநிறமுடைய போர்வையும் போடப்பட்டிருக்கிறது. நடுவில் வலதுபுறமாக விலையுயர்ந்த சந்தனக்கட்டையால் செய்யப்பட்ட மூன்று தூண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது. வாசற்படிக்குநேரே மேற்கு சுவருக்குச் சமீபத்தில் ஓர் அடையாள மிடப்பட்டிருக்கிறது. நபிகள் கோமான் சத்தியத்தூதர் (ஸல்) அவர்கள் மக்காவை ஜெயித்த அன்றைய தினம் கஃபாவினுள் பிரவேசித்து அந்த இடத்தில் நின்று தான் ஷுக்ரிய்யாவாக இரண்டு ரக்கஅத் தொழுகையை நிறைவேற்றினர்கள். இது பொழுதும் அங்கு செல்வோர் அந்த இடத்தில் நபில் தொழுகையை நிறைவேற்றுகின்றனர். அதன் வடகிழக்கு மூலையில் ஒருபடி வைக்கப்பட்டு இது 'பாபுத்தவ்பா' என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. அங்கும் ஹாஜிகள் துஆ கேட்கின்றனர்.

கஃபாவின் திறவுகோல் நபிகள் திலகம்(ஸல்.) அவர்களது காலத்திற்குமுன் ஹஸ்ரத் உதுமானிப்னுதல்ஹா அவர்களிடமிருந்தது. மக்கா மாநகர் பிடிபட்டபோதும் அந்த திறவுகோல் அவர்கள்வசமே கொடுக்கப்பட்டது. இதுபொழுதும் அவர்களது சந்ததியினர் வசமே யிருந்து வருகிறது.

பைத்துல்லாஹ் ஷரீபுக்கு நான்கு மூலைகளிருக்கின்றன. 'ஹதீம்' பக்கமுள்ள வடகிழக்கு வடமேற்கு மூலைகளுக்கு முறையே 'ருக்ன இராக்கி, 'ருக்னஷாமி' என்றும், தென் மேற்கு மூலைக்கு 'ருக்ன யமானீ' என்றும் சொல்கின்றனர். தென்கிழக்கு மூலையில் பூமியிலிருந்து சுமார் ஐந்தடி உயரத்தில் ஹஜ்ருல் அஸ்வத்" வைத்து கட்டப்பட்டிருக்கிறது. இந்த ஹஜ்ருல் அஸ்வத்துக்கும் கஃபாவின் வாசற்படிக்கு மிடையிலுள்ள சுவற்றின் பாகத்திற்கு 'முல்தஜம்' என்று பெயர். அந்த வாசற்படிக்கு சற்று வடக்கே சுவற்றிற்குகீழே மர்மர்கல்லினால் கட்டப்பட்ட ஒரு பள்ள மிருக்கிறது. அதற்கு 'மஅஜன்' என்று கூறுகின்றனர். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) கஃபத்துல்லாவை கட்டும்போது அந்த இடத்தில் மண் குழைத்ததாக கூறப்படுகின்றது. கஃபத்துல்லாவின் முகட்டின் வடபுறத்தில் கீழ்புறமாக ஒரு பீலி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு "மீஜாபெரஹ்மத்' என்று பெயர். இதன் வழியே மழைத்தண்ணீர் ஹதீமில் விழுகின்றது. அந்த தண்ணீர் விழும் இடத்தில் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களது கப்ர் ஷரீப் இருப்பதாக கூறப்பட்டு அதற்கு பிரத்தியேக அடையாளமு மிடப்பட்டிருக்கிறது.

ஹதீமையும் சேர்த்து கஃபா ஷரீபைச்சுற்றிலும் அகலமாக ஒரு பாதை அமைக்கப்பட்டு ஹாம்ஷரீபின் இதர முத்தவெளிக்கு சற்று

பள்ளமானதாயும் சுற்றிலும் அழகிய அருகு கள் கட்டப்பட்டதாயும் வெள்ளை மார்மர்கற்கள் புதைக்கப்பட்டதாயுமிருக்கிறது. அவ்வருகுக ளைச் சுற்றிலும் அழகிய அமைப்புகளை யுடைய தூண்கள் நிறுத்தப்பட்டு அதில் மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இந்த வட்டத்தில்தான் ஹாஜிகள் பைத்துல்லாஹ் ஷரீபை 'தவாப்' சுற்றி வருகின்றார்கள். இந்த சுற்று வட்டத்திற்குத்தான் 'மதாப்' என்று பெயர். அந்த மதாபுக்குச் சமீபமாய் கீழ்புறத் தில் ஒரு வளைவு போடப்பட்டிருக்கிறது. அத ற்கு "மிஹ்ரா புன்னபி" என்று பெயர். நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் அநேகமாய் அந்த வழியே வந்துகொண்டிருந்தார்கள். அதற்குச் சமீபத்தில் வடபுறமாக ஓர் அழகிய உயரமான மிம்பர் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் இது பொழுது குத்பா ஓதப்படுகிறது. அதற்குப்பக் கத்தில் ஓர் அழகிய கட்டிடமிருக்கிறது. அதற் குள்ளால் "மக்காம இப்ருஹீம்" என்னும் கல்வைத்து பூட்டப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னுள்ள சிறிய மண்டபத்தினுள் ஹாஜி கள் நபில் தொழுகை நிறைவேற்றுகின்றனர். இதற்குச் சற்று தூரத்தில் 'ஜம்ஜம்' கிணறு இருக்கிறது. அக்கிணறு ஓர் கட்டிடத்திற்குள் அமைந்திருக்கிறது. அதில் சதாவும் ஜனக் கூட்டமிருந்து கொண்டிருக்கிறது.

'மதாபு'க்கு வெளியிலுள்ள கருங் கற்கள் பறத்தப்பட்ட இடங்களில் நான்கு புறமும் நான்கு இமாம்களது (முஸல்லா) தொழுகை நடத்துமிடங்களிருக்கின்றன. கீழ்புறமாக 'ஜம் ஜம்' கிணற்றினருகே ஷாபிஈ முஸல்லாவும், மேற்குபுறத்தில் மாலிக்கி முஸல்லாவும், தென் புறமாக ஹம்பலீ முஸல்லாவும், ஹதீமுக்கு எதிரே வடபுறத்தில் ஹனபீ முஸல்லாவும் நான்கு தூண்கள் நிறுத்தி சிறிய மேல்மண் டபம் போடப்பட்டதாக விருக்கிறது.

கஃபத்துல்லாஹ் ஷரீப் நடுவே அமைந்து அதற்குச் சூழால் 'தவாப்' செய்யுமிடம் ஏற் பட்டிருக்கிறது. அதைச் சுற்றிலும் நானுபாகங் களிலும் விஸ்தாரமான திறந்த மைதானமிருக் கிறது. அதில் மிகச் சிறிய கருங்கல் துண் கள் பறத்தப்பட்டிருக்கின்றன. அதில் ஏற் படும் வெயிலின் உஷ்ணம் அதிசீக்கிரம் ஒழிந்து போவதற்காகவே அந்த பொடி கற்கள் பறத்தப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அந்த மைதானத்திற்குச் சூழால் மேல்மண்டபம் வளைக்கப்பட்ட அழகிய தூண்களையுடைய கட்டி டம் அமைக்கப்பட்டு கீழே கருங்கல் பறத்தப் பட்டிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக நெடுகி லும் அறைகள் அமைக்கப்பட்டு ஹறம் ஷரீபின் பக்கல் அதன் வாயல் வைக்கப்பட்டிருக்கிறது. அதில் வேலைக்காரர் வாசஞ்செய்வதோடு ஹாஜி களின் சௌகரியத்திற்காக தண்ணீரும் வைக் கப்படுகிறது. அதிலிருந்து ஜம்ஜமிகள் தண் ணீர் கொண்டுவந்து ஹாஜிகளுக்கு கொடுக்கின் றனர். தொழுகைக்காக விறிக்கப்படும் ஜம்காளம் முதலியவைகளும் அதில் வைத்து பத்திரப் படுத்தப்பட்டு வருகிறது. அந்த அறைகளுக்கு சமீபமாய் ஹறம்ஷரீபிலிருந்து வெளியிற் செல் லுவதற்கு சுற்றிலும் சுமார் 20 வாசற்படி களிருக்கின்றன. அதிற் சில பாபு இப்ருஹீம், பாபுஸ் ஸலாம், பாபுஸ்ஸபா போலொற்ற பிரக் யாதி பெற்ற வாசற்படிகளாகும். ஹறம்ஷரீபுக் குச் சுற்றிலுமுள்ள எந்த இடத்திலிருந்தாகி லும் உட்பிரவேசிக்க நாடினால் சமீபத்திலுள்ள ஏதாகிலுமொரு வாசற்படியின்மூலம் பிரவே சித்துவிடலாம். பெரிய வாசற்படிகளிலிருந்து 'மதாப்' வரை 7,8 பாதை நடைகள் கருங் கற்க ளால் கட்டப்பட்டிருக்கின்றன. அப் பாதை வழியே யாராகிலும் ஹறமினின்று வெளியாவா ராயின் கஃபத்துல்லா அவருடைய முதுகுப் புறம் நேரே ஏற்படாதவாறு அப் பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பாதைகள் 5 அடி அகலமுடையதாக விருக்கின்றன. தவாப் செய்யுமிடத்தில்பறத்தப்பட்டிருக்கும் வெள்ளை கற்கள் உஷ்ண நேரத்திலும் வெயிலின் சூடு தங்காது குளிர்ச்சியாகவே யிருக்கின்றன. ஹறம்ஷரீபுக்குச் சுற்றிலும் நான்கு மூலையில் நான்கு மினாராக்களும் மத்தியில் 3 மினாராக் களும் ஆக ஏழு மினாராக்களிருக்கின்றன.

ஹறம்ஷரீபின் உட்பாகம் சுற்றிலுமுள்ள தெருக்களைப் பார்க்கினும் 9, 10 அடி பள் ளத்திலிருக்கிறது. ஒவ்வொரு வாசற்படியிலும் கீழே இறங்குவதற்கு உட்புறத்தில் படிகள் கட் டப்பட்டிருக்கின்றன. அதன் வழியே தான் ஹறம்ஷரீபினுள் பிரவேசிக்கின்றனர். இது வன்றி மழைபெய்து ரோட்டில் ஓடும் தண் ணீர் ஹறம்ஷரீபினுள் வந்து பிரவேசித்து விடாதவாறு ஒவ்வொரு வாசற்படிக்குமுன்னும் கருங்கற்களினால் தடைகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. ஹறம்ஷரீபில் பெய்யும் மழைத் தண்ணீர் மதாபில் வந்து சேர்ந்து அங்கிருந்து குழாய் வழியாய் வெளியாகி தொலையில்போய் வடிகிறது.

உம்ரா நிறைவேற்றல்.

மக்கள் வயதில் ஒருமுறை உம்ராவை நிறைவேற்றல் வாஜிபு. அதற்கு ஒருகாலம் குறிப்பில்லே. எனவே, நாங்கள் உமராவுக்கு இஹ்ராம் கட்டியிருந்ததால் கஃபா ஷரீபுக்குச் சமீபம் சென்றவுடன் மேலேபோட்டிருந்த வேஷ்டியை வலது கம்கட்டுக்கு கீழே எடுத்து அந்த புஜம் திறந்திருக்கும்படி செய்து இடது புஜத்தின்மீது அந்த வேஷ்டியைப் போர்த்து கொண்டு ஹஜ்ருல் அஸ்வத்துக்குச் சமீபம் சென்று அதனை முத்தியிட்டு, 'அல்லாஹும்ம, இன்னீ, உரீது, தவாப, பைத்திகல்ஹறாம், ஸப் அத்த அஷ்வாத்தின், பயஸ்ஸிர்ஹுலீ, வத்தகப் பல்ஹுமின்னி" யாஅல்லாஹ்! யான் சங்கை பொருந்திய உன்னுடைய இந்த வீட்டை ஏழு முறை சுற்ற நாடுகின்றேன், அதனை எனக்கு இலேசாக்கிவைத்து, என்னில் நின்றும் அதனை அங்கீகரித்துக் கொள்வாயாக, என நிய்யத்துச் செய்து ஹஜ்ருல்அஸ்வது இருக்குமிடத்திலிருந்து வடக்குநோக்கி இடதுபுறம் கஃபத்துல்லாஹ் ஷரீபின் கிழக்குசுவர் வரும்படி நடக்கவேண்டும். முல்தஜிம், பைத்துல்லாவின் வாசற்படி வழியே ஹதீமையும் சுற்றிக்கொண்டு ருக்னஎமானீ பக்கலாக "ஹஜ்ருல் அஸ்வத்" இருக்குமிடம் வந்து சேர்ந்துவிட வேண்டும். இதற்கு ஒரு சுற்று என்று பெயர். இவ்வாறு ஏழு சுற்று சேர்ந்தது ஒரு தவாபாகும். தவாப் செய்யும்போது கூடுமானல் ஒவ்வொரு சுற்றிலும் ஹஜ்ருல் அஸ்வதை முத்தியிட வேண்டும். நெருக்கடி ஏற்பட்டு முத்தியிட முடியாதுபோமாயின் தனது வலதுகையினல் ஹஜ்ருல் அஸ்வதைத் தொட்டு முத்தியிட்டுக்கொள்ள வேண்டும். இவ்வாறும் செய்ய முடியவில்லேயாயின் தூரத்திலிருந்து இரு உள்ளங் கைகளேயும் ஹஜருல் அஸ்வத்தின் பக்கல் திருப்பி இரு தோள்புஜம் வரை இரு கைகளேயும் தூக்கவேண்டும். அதாவது அதன் மீது கைவைப்பதுபோல் செய்ய வேண்டும். ருக்ன எமானியையும் கையால் தொடவேண்டும். அதனை முத்தியிடலாகாது.

நாங்கள் உம்ராவுக்காக தவாப் செய்ததால் முந்திய மூன்று சுற்றுக்களிலும் 'ரமல்' அதாவது தோள் புஜத்தை அசைத்துக்கொண்டு மெள்ள மெள்ள ஓடினேம். பிந்திய நான்கு சுற்றுக்களிலும் சாதாரணமாகவே நடந்துசென்ரேம். பின்னர் "மக்காம இப்ருஹீம்" அதாவது ஹஸ்ரத் இப்ருஹீம் (அலே.) ஏறி நின்று கஃபத்துல்லாவை கட்டிய கல்லுக்குச் சமீபம் வந்து இரண்டு ரக்அத் நபில் தொழுகையை நிறைவேற்றினேம். இந்த இரண்டு ரக்அத் தொழுவது வாஜிபு. பின்னர் 'ஜம்ஜம்' கிணற்றினருகே சென்று தண்ணீர் அருந்தினேம். உடனே கஃபத்துல்லாஹ்வின் வாசற்படியண்டை வந்து துஆ செய்தோம். ஹஜ்ருல்அஸ்வத்துக்கும் கஃபத்துல்லாஹ் ஷரீபின் வாசற்படிக்குமிடையிலுள்ள இடமாகிய முல்தஜிமின் சுவற்றில் நெஞ்சை வைத்து கஃபாவின் திரையைப் பிடித்துக்கொண்டு அழுதவனுய் பிரார்த்தனை புரியவேண்டும்.

இதற்கிடையே லுஹர் தொழுகைக்கு பாங்கு சொல்லப்பட்டுவிட்டதால் நாங்கள் தொழுகையிலீடுபட்டு விட்டோம்.

பாங்கு தொழுகை.

ஏற்கனவே நான்கு முஸல்லாக்களிலும் நான்கு இமாமைக்கொண்டு தனித்தனியே நான்கு ஜமாஅத்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதுபொழுது ஒரே ஜமாஅத்து நடைபெறுகிறது. ஹனபீமுஸல்லாவிலிருந்து ஷெய்குல்முஅத்தீன் பாங்கு சொல்ல ஆரம்பித்தவுடன் ஏழு மினாக்களிலுமுள்ள முஅத்தின்கள் பாங்குசொல்ல ஆரம்பிக்கின்றனர். பின்னர் சுன்னத்து தொழும் நேரத்திற்குப் பின் இகாமத்துச் சொல்லப்படுகிறது. கஃபா ஷரீபின் கீழ்புறமாய் வாசற்படிக்கு வடக்கே மதாபில் முஸல்லா போடப்பட்டு இமாம் அங்கு வந்து நின்று தொழுகையை ஆரம்பிக்கிறர். மக்கள் அவருக்குப் பின்னும் கஃபாவுக்குச் சுற்றிலும் நானு பாகங்களிலும் நின்று தொழுகையை நிறைவேற்றுகின்றனர். பற்பல இடங்களிலும் முகப்பீரின்கள் நின்று தக்பீர் சொல்கின்றனர்.

ஸபா மர்வா.

நாங்கள் லுஹர் தொழுகைக்குப்பின் 'பாபுஸ்ஸபா' வழியாய் வெளியாகி ஸபா, மர்வாவில் 'சயீ' செய்வதற்காக 'ஸபா'வின் பக்கல் வந்தோம். சபா, மர்வா என்ற இருமலேகளும் உடைபட்டு அதற்குமேல் கட்டிடங்கள் கட்டப்பட்டு இரண்டிலும் இரு அடையாளங்கள் மட்டிலுமிருக்கிறது. முதலாவதாக 'ஸபா'வின்மீதேறி 'தவாப்' செய்வதாய் நிய்யத்துச் செய்து அங்கிருந்து 'மர்வா'வின் பக்கல் சென்ரேம். கொஞ்சம் சென்றவுடன் இரு பச்சைத் தூண்கள் அடையாளத்திற்காக நிறுத்தப்பட்டிருக்கி

றது. அதற்கு "மீலைனீ அக்லரைனீ'' என்று சொல்லப்படுகிறது. அதற்கிடையே செல்லும் போது சற்று வேகமாக சிறிய ஓட்டமாய்ச் செல்லவேண்டும். அங்கிருந்து 'மர்வா'வுக்குச் செல்லவேண்டும். இவ்விரண்டிற் கிடையே சுமார் இரண்டு பர்லாங் தூரமிருக்கும். இவைகளின் இருபுறங்களிலும் பெரிய கடைத் தெருவு இருக்கிறது. பற்பல வியாபாரங்கள் நடைபெறுகின்றன. ஹஜ்ஜூடைய காலங்களில் இராப்பகல் ஒரே வெளிச்சமாகவும் கூட்டமாகவுமிருக்கிறது. ஸபாவிலிருந்து மர்வா வரை சென்ருல் ஒரு சுற்று ஏற்படுகிறது. இவ்வாறு 'மர்வா'விலிருந்து 'ஸபா' வரை வந்தால் இரண்டாவது சுற்று ஏற்படுகிறது. இவ்வாறு ஏழாவது சற்று மர்வாவில் வந்துமுடிகிறது. இந்த ஏழு சுற்றுகளிலும் ஸபாவுக்குச் சமீபமாயுள்ள "மீலைனீ அக்லரைனீ'' என்னும் பச்சை அடையாளமிடப்பட்டிருக்குமிடத்திற் கிடையே மெதுவாய் ஓடவேண்டும். ஸபா மர்வாவுக்கிடையே செல்லுங்கால் பற்பலவாருன துஆக்களை ஓதிச்செல்கின்றனர். வியாதியஸ்தர்களை தொட்டிகளில் ஏற்றி உட்காரவைத்து இருவர் தூக்கிச் செல்கின்றனர். அதிலிருந்து அவர்கள் ஸபா மர்வா செல்கின்றனர்.

நாங்கள் இக்காரியத்தை முடித்துக்கொண்டு தலைக்ஷவரம் செய்து இஹ்ராமின் காரியங்களை முடித்துவிட்டு முதவ்விபின் வீடடைந்து ஸ்நானஞ் செய்து பகல்போஜனமருந்தி சற்று களைப்பாறிவிட்டு அஸர் தொழுகைக்காக மஸ்ஜிதுல் ஹறமுக்குச் சென்று தொழுகையை முடித்துக்கொண்டு யாங்கள் மக்காவில் தங்கியிருப்பதற்காகப் பற்பல இடங்களிலும் வீடுகள் பார்த்து கடைசியாக சைபித்ஹாஷிம் ஷில்லியின் உதவியாளரான ஷாதலியின் 'மஹல்லயே ஜியாத்'திலுள்ள வீட்டின் நான்கு பெரிய அறைகளை 13 பவுன் வாடகைக்குப் பேசி முடித்து இரவு படுக்கைக்கு அந்த வீட்டுக்கு வந்துவிட்டோம். மக்காவிலுள்ள அநேக வீடுகள் சுண்ணும்பு பூசப்படாததாயும் கீழ் தளவரிசை சிமண்டு போடப்படாததாயுமிருந்த போதிலும் இந்த வீடு அழகிய முறையில் நான்குஅடுக்குமெத்தையுள்ளதாயும் ஒவ்வொரு அடுக்கிலும் 4 ரூம்கள் அமைக்கப்பட்டதாயும் அழகான முறையில் சுண்ணும்பு பூசப்பட்டு தளவரிசை நல்லவிதமாய் போடப்பட்டு சிமின்டு பூசப்பட்டதாயும் வெளிச்சம் காற்ருேட்டம் முதலிய வசதிகள் தக்கமுறையில் அமைந்ததாயும் நம்தேய ஹாஜிகள் தங்குவதற்கு வசதியானதாயு மிருக்கிறது.

மக்கமாநகரில் தங்கியிருக்குங்கால் இயன்றமட்டில் கஃபத்துல்லா ஷரீபை தவாப் செய்ய வேண்டும். ஹறம் ஷரீபிலிருந்து குறைந்தது ஒரு குர்ஆன் ஷரீபாகிலும் ஓதிமுடிக்க வேண்டும். தன்னுல் இயன்றமட்டில் நன்மையானகாரியங்களைப் புரியவேண்டும். அங்கு புரியப்படும் ஒரு நன்மைக்கு இலக்ஷம் பிரதிப்பலன்கள் கிடைக்கின்றன. சௌகரியமேற்பட்ட நேரங்களில் ஹஜருல் அஸ்வதை முத்தியிடவேண்டும். கஃபா ஷரீபைப் பார்த்துக் கொண்டிருப்பதும் வணக்கமாதலின் சதாவும் அதனைப் பார்த்துக் கொண்டேயிருக்க முயற்சிக்க வேண்டும். கஃபா ஷரீபின் சமீபம் நாலுபாகங்களிலும், மக்காமெ இப்ருஹீம், ஹதீமில் மீஜாப ரஹ்மத்திற்கு கீழும் இயன்றமட்டில் நபில் தொழுகை நடத்தவேண்டும். ஹறம்ஷரீபில் நுழையுந்தோறெல்லாம் இஃதிகாபின் நிய்யத்துச் செய்து செல்வது மேலாகும். பிரார்த்தனைகள் ஒப்புக் கொள்ளப் படுவதற்குச் சில குறிப்பிடப்பட்டுள்ள இடம், காலமிருப்பதால் இதனை கவனித்து பிரார்த்தனை புரியவேண்டும். (1) ஆரம்பமாக ஹறம் ஷரீபில் நுழையுங்கால் முதலாவதாக கஃபாவின்மீது பார்வை விழும்போது (2) ஹஜருல் அஸ்வதுக்கு சமீபம் (3) தவாப் செய்யும்போது (4) முல்தஜமில் சொந்தமாய் நடு இரவில் (5) மக்காம இப்ருஹீம் (6) மீஜாபுற்றஹ்மத்துக்குக்கீழ் (7) ஜம்ஜம் கிணற்றண்டை (8) ஸபா மர்வா ஓடும்போது (9)அறபா மைதானத்தில் குறிப்பாய் பொழுது அடையும் நேரம் (10) முஜ்தலிபாவில் பொழுதுகிளம்பும் நேரம் (11) மினுவில் கல்லெறியும்நேரம் (12) கஃபாஷரீபினுள். இந்த நேரங்களை, இடங்களைகவனித்து பிரார்த்தனை புரியவேண்டும்.

ஹறம் ஷரீபுக்கு ஒருமைல் தூரத்தில் மினு செல்லும் பாதையில் 'ஜன்னத்துல் முஅல்லா' என்னும் மக்பரா இருக்கிறது. இது மலைஅடிவாரத்தி லிருக்கின்றது. இவ்விடத்தில் தான் ஹஸ்ரத் கதீஜத்துல் குப்ரா (ரலி) அவர்களது கபரும் மற்றும் சஹாபிகளிற் சிலருடைய கபர்களு மிருக்கின்றன. ஹாஜிகள் இந்த இடத்திற்குச் சென்று ஜியாரத்துச் செய்து வருகின்றனர்.

அபூகுபைஸ்:—ஹரமுக்கு சமீபமாய் உயர்ந்த மலையாக யிருக்கிறது. இதற்குச் சென்று வருவதற்கு வழிநடைப்பாதையு மேற்பட்டிருக்

கிறது. இம்மலைமீது ஏறினால் ஊர்முழுதும் நல்லவிதமாகத் தெரியும். அதில் ஒரு மஸ்ஜிது மிருக்கிறது. அதற்கு 'மஸ்ஜித பிலால்' என்று பெயர். மக்காநகரை ஜெயித்ததுமுதல் ஹஜ்ரத் பிலால் (ரலி) அவர்கள் அந்த மலையின் மீது ஏறியே பாங்கு சொல்லிவந்ததாக அறிவிக்கப் படுகிறது.

ஹிராமலை:—மக்காவிலிருந்து மினா போகும் வழியிலிருக்கிறது. அந்தமலையின் சிகரம் குப்பாவைப் போலிருக்கின்றது. பெரும் உயரமாக யிருக்கிறது. அம்மலையிலுள்ள குன்றில் தான் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் நபிப்பட்டம் வருவதற்குமுன் தன்னந்தனியே சென்று வணக்கம் புரிந்து கொண்டிருப்பார்கள். அந்த இடத்தில் தான் ஆரம்பமாக 'வஹீ' வந்தது.

தவ்ர் மலை:—மக்காவுக்கு சமீபமாக எமன் செல்லும் பாதையில் 'தவ்ர்' மலையிருக்கிறது. அதிலுள்ள ஒரு பொதும்பில்தான் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்துச் செல்லும் போது தோழர் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களுடன் மூன்று நாள் தங்கியிருந்து அங்கிருந்து மதீனா புறப்பட்டார்கள். இதுவன்றி நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் பிறந்த இடம், ஹஜ்ரத் பாத்திமா நாயகி பிறந்த இடம், நபிகள் கோன் (ஸல்.) கதீஜா நாயகி அவர்களுடன் வாழ்க்கை புரிந்த இடம், ஹஸ்ரத் பாரூக் அஃலம் உமரிப்னுகத்தாப் (ரலி.) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய அர்க்கம மகுஜூமி (ரலி.) அவர்கள் வீடு, மற்றும் சில சஹாபிகள் கலீபாக்களின் வீடுகள் இவைகளெல்லாம் ஸுஊதிகளால் இடிக்கப்பட்டு தரையாக்கப்பட்டுப் போயிருக்கிறது.

ஜம் ஜம் கிணறு

இஃது ஹறம் ஷரீபில் கஃபாவுக்கு கீழ்புறமாய் அமைந்திருக்கிறது. இக்கிணற்றைச் சுற்றியிலும் ஒருஆள் மட்டத்திற்கு கைபிடி சுவர் எழுப்பப்பட்டு அங்கு நின்று தண்ணீர் இறைப்பதற்காக வசதிகள் 7, 8 இடத்தில் செய்யப்பட்டு அதற்குமேல் சுற்றிலும் நெருக்கமாக இரும்பு கம்பிகள் நடப்பட்டிருக்கின்றது. சுற்றிலும் நின்றுகொண்டு 7, 8-பேர் தண்ணீர் இறைக்கின்றர். அதற்காக உருளைகளும் போடப்பட்டிருக்கின்றன. அந்த கிணற்றைச் சுற்றிலும் 4, 5 அடி பாதைபோட்டு ஜாலர் சுவர் எழுப்பப்பட்டு மேலே முகடு போடப்பட்டிருக்கிறது. உள்ளால் நுழைவதற்கு ஒரு வாசற்படியும் வைக்கப்பட்டிருக்கிறது. ஹாஜிகள் அதற்குள்ளால் நுழைந்து தண்ணீர் இறைப்பவர்களிட மிருந்து தோல் பையை யுடனே வாங்கி அபரிமிதமாய்க் குடிக்கின்றார்கள்; பறக்கத்தை நாடி தலை திரேகத்திலும் தடவிக்கொள்கிறார்கள். ஒரு பை சுமார் 1½-மரைக்கால் தண்ணீர் பிடிப்பதாக யிருக்கிறது. அதனை குடிக்க ஆரம்பிப்பவர் அநேகமாய் முக்கால்வாசித் தண்ணீரைக்குடித்துவிடுகின்றார். அந்தக் கிணற்றடியிலே நின்று குடித்தால் அதன் ருசி ஒருவிதமாக யிருக்கிறது. வெளியில் எடுத்துவந்து குடித்தால் அந்த ருசியில் சற்று மாற்ற மேற்படுகிறது. பனிக்காலத்தில் காலை நேரத்திலும் அத்தண்ணீரை வாயில் வைத்தால் அதிகமாகவே குடிப்பதற்கு மனம் நாடுகிறது. பகல் சாப்பாட்டு நேரங்களில் அந்த தண்ணீரை அபரிமிதமாய் குடிப்பதுகொண்டு பின்னால் சாப்பிடுவதற்கு யாதொரு இடைஞ்சலுமேற்படாதிருக்கிறது.

அந்த கிணற்றின் மேல்மண்டபத்தில் "மாஉஜம்ஜம லிமா ஷுரிப லஹு" அதாவது ஜம்ஜம் தண்ணீர் எந்த நாட்டத்தைக்கொண்டு குடிக்கப்படுகின்றதோ அந்தநாட்டம் நிறைவேறிவிடுகிறது, என்னும்ஹதீது அழகிய எழுத்துக்களில் வரையப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு நோயாளி தன் நோய் தீர்ந்து விடவேண்டும் என்னும் எண்ணத்துடன் அத்தண்ணீரை அருந்துவாராயின் அவர் நோய் குணப்படுகிறது. பசிதீர வேண்டுமென்னும் எண்ணத்திலோ, அல்லது தாகம் தீரவேண்டு மென்னும் நோக்கத்திலோ அத்தண்ணீரை அருந்துவார்களின் அந்த நாட்டங்கள் நிறைவேறிவிடுகின்றன, என்பது இதன் கருத்தாகும். இவ்வாறான விசேஷம் பொருந்திய ஜலத்தை ஹாஜிகள் நாளொன்றுக்கு 4, 5-முறை விசேஷமாய் அங்கு அருந்துவதுடன் அவர்கள் வரும் போது டின்களில் அடைத்து வந்து தங்கள் பந்து மித்திரர்களுக்கும் கொடுக்கின்றனர். இதனை அன்னோர் பக்தியுடன் பெற்று கிப்லாவுக்கு நேராக தலை திறந்தவர்களாய் நின்று குடிக்கின்றனர்.

அந்த கிணற்றடியில் சதாவும் ஜன நெருக்கமிருந்து கொண்டேயிருக்கும். இறைத்துக் கொடுப்பதிலும் சிரமமேற்படுகிறது. ஆதலால் ஸுல்த்தான் இப்னுஸுஊது 4, 5-வருஷங்க

ளுக்குமுன் ஒரு மிஷின் வாங்கிவந்து அந்த கிணற்றில்போட்டு தண்ணீர் இறைக்கப் பிரயத்தனப்பட்டார். அதிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வெளியாகவில்லை. மிஷன்வேலையில் கைதேர்ந்த பலருடைய உதவியைக் கொண்டு பன்முறை முயற்சித்தும் காரியம் சித்தியாகவில்லை. அந்த மிஷனை எடுத்து வேறு கிணற்றில் போட்டு தண்ணீர் இறைக்க ஆரம்பித்தபோது அந்த கிணற்றுத் தண்ணீரையே வெளியில் கொண்டுவந்தது. மறுபடியும் அந்த மிஷனை ஜம்ஜம் கிணற்றில் போட்டு இறைத்தபோது கொஞ்சம்கூட தண்ணீர் வெளியாகவில்லை. உடனே அந்த மிஷனை அதைவிட்டு வெளியாக்கி விட்டனர். முஸ்லிம் உலகில் இந்த ஜலத்திற்கு பெருமை மேலே சொல்லப்பட்ட விசேஷங்களுக்காகவல்ல. இந்த ஜலம் உண்டானதற்குரிய அசல் காரணமே இதற்கு இத்துணை மகத்துவத்தையும் கௌரவத்தையும் அளித்திருக்கிறது. அதன் விபரமாவது :—

முற்காலத்தில் அதாவது ஏறக்குறைய இற்றைக்கு ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் அந்த கிணறு இருக்கும் இடம் வரண்ட பள்ளத்தாக்காக இருந்தது. விவசாயம் செய்யவோ, பயிர் பச்சைகளையுண்டாக்கவோ, மரஞ்செடிகளை வளர்க்கவோ இந்த இடத்தில் ஜல வசதி இருக்கவில்லை. ஆகவே, இது மனித சஞ்சாரமற்ற இடமாக இருந்தது. ஆனால், எல்லாம்வல்ல இறைவன் நமது ஸெய்யிதுனா இப்ராஹீம் (அலை.) அவர்களுக்கு, அவரது மைந்தரான ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களையும் அவரது அன்னை ஹஜ்றத் ஹாஜரா (றலி.) அவர்களையும் இந்த இடத்தில் விட்டு விடும்படியாகக் கட்டளை யிட்டான். இறைவன் கட்டளைக்கு இம்மியும்வழுவாது நடக்கும் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் தங்கள் அன்பிற்குரிய மனைவியான ஹாஜரா (றலி.) அவர்களையும், ஏகபுத்திரராக அப்பொழுதிருந்த கைக்குழந்தை ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களையும் இவ்வரண்ட கானகத்திற்கு அழைத்துவந்து விட்டுச் சென்றார்கள். தம்மை அன்புடன் காப்பாற்றிவந்த தமது பர்த்தா இறைவன் கட்டளைப்படி இக் கானகத்தில் தம்மை விடுவதால் இதில் ஏதோ விசேஷமுண்டு என்ற எண்ணத்தாலும், இறைவன் தம்மைக் கைவிடான் என்ற உறுதியாலும் வரண்ட வனாந்தரத்தில் தமது கைக்குழந்தையுடன் தன்னந்தனியே வசிக்க திரிகரண சுத்தியாக இசைந்தார்கள் பீபிஹாஜரா. ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் தங்கள் இல்லாளையும், தங்கள் ஜீவியத்திற்கு அறிகுறியான புதல்வரையும் இங்கு விட்டுச்செல்லும் போது, "நாயனே! எனது சந்ததியில் நின்றும் (இவர்களை) விவசாயத்திற்குத் தகுதியற்ற இப் பள்ளத்தாக்கில் குடியேற்றி இருக்கிறேன். இதனை ஒரு பட்டணமாக்குவாயாக. இங்குள்ளவர்களுக்கு கனிவர்க்கங்களை அளிப்பாயாக" என்பன போன்ற பிரார்த்தனைகளைப் புரிந்து அவன்பால் ஒப்புக் கொடுத்துவிட்டு தாங்கள் கொண்டுவந்த சொற்ப உணவுப் பதார்த்தத்தையும் ஜலத்தையும் அவர்களிடம் கொடுத்து விட்டுச் சென்றார்கள். அவ்வுணவும் ஜலமும் செலவாகி விட்டபின் பசியும் தாகமும் இவ்விருவருக்கும் தோன்றிற்று. ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் கைக்குழந்தையாக இருந்ததால் அதிக நேரம் பசி தாகத்தைச் சகிக்க முடியவில்லை. மயக்கத்தால் கீழே கிடந்து துடித்துக்கொண்டிருந்தார்கள். அவரைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த மாதாவாகிய ஹஜ்றத் ஹாஜரா (றலி.) அவர்கள் தம்முடைய ஒரே புதல்வர் இவ்வாறு வருந்தித் துடிப்பதைப் பார்த்துகொண்டு பக்கத்திலிருக்க முடியுமா? ஆகவே, அவர் தமதருமைப் பாலகரைக் காப்பாற்றும் பொருட்டுப் பக்கத்திலுள்ள குன்றுகளுக்கும் மற்ற இடங்களுக்கும் ஓடி ஓடி ஜலம் கிடைக்குமா என்று தேடிக்கொண்டிருந்தார். மாதாவினுடையவும் குழந்தையினுடையவும் பரிதாப நிலைமையைக் கண்டு அவர்கள்பால் இறையருள் பொங்கிற்று. ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களது பிரார்த்தனையின் பயன் வெளியாகும் சமயம் வந்தது. இறைவன் தனது பெருங் கருணையால் ஹஜ்றத் ஜிப்ராயீல் (அலை.) அவர்களை அனுப்பினான். அவர் கைக்குழந்தையாகிய ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களது கால் பட்டுக் கொண்டிருந்த இடத்தை தமது இறக்கைகளால் தோண்டினார். அங்கிருந்து ஜலம் வடிந்தோடத் தொடங்கிற்று. பீபிஹாஜரா (றலி.) அவர்கள் ஜலத்திற்காக அங்குமிங்கும் ஓடினாலும் தமது ஈரல்குலைத் துண்டாகிய ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களையும் ஒரு கண் திரும்பிப் பார்த்துக்கொண்டு மிருந்தார்கள். இறைவனருளால் அற்புதமாகத் தமது மைந்தரின் காலடிபட்ட இடத்திலிருந்து

ஜலம் பொங்கி வருவதைக் கண்டு ஆனந்தங் கொண்டார்கள். ஓடி வந்தார்கள். ஜலம் வரும் ஊற்றைச் சுற்றிலும் அணைபோட்டுத் தேக்கினார்கள். அந்த ஜலமே அவ்விருவருக்கும் உணவாகவும் தாக சாந்தியாகவும் ஆயிற்று. இன்றும்கூட அந்த ஜலம் உணவாகவும் தாகசாந்தியாகவும் இருந்து வருகிறது. அங்கு ஜலவசதி யுண்டாகவே ஜர்ஹம் கூட்டத்தாரும் குடியேறினார்கள். என்றாலும், ஜம்ஜம் கிணற்று பாத்தியதையை பீபிஹாஜரா (றலி.) அவர்கள் அக்கூட்டத்தாருக்கு விட்டுக்கொடுக்கவில்லை. இவ்வாறு அற்புதமாக, தெய்வகடாக்ஷமாகத் தோன்றிய அக் கிணறானது இறுதியாகத் தூர்ந்து போய்விட்டது. அது இருந்த இடத்தையும்கூட ஜனங்கள் மறந்தனர். கடைசியாக நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது தந்தையைப் பெற்றெடுத்த பாட்டனாராகிய ஹஜ்றத் அப்துல் முத்தலிபவர்கள் ஷை கிணற்றைத் திரும்பவும் தோண்டி உற்பத்திசெய்வது போல் சொற்பனம் கண்டு, அதனை இறைவனது கட்டளை என மதித்து அதனைத் திரும்பவும் தோண்டினார்கள். அக்கிணறு இருந்த இடமும்கூடச் சொற்பனத்தில் காண்பித்துக் கொடுக்கப்பட்டதாக ரிவாயத்துகள் வந்திருக்கின்றன. இச் சொற்பனப்படி ஷை கிணற்றைத் தோண்ட வாரம்பித்தபோது ஏனைய குறைஷிகள் இதனை ஆக்ஷேபித்து எதிர்த்தனர். அதுபோழ்து அவர் புத்திரபாக்கிய முள்ளவராக இருந்தாலும் அவர்கள் உபயோகப் படக்கூடிய நிலைமையிலிருக்கவில்லை. ஒரே ஒரு புதல்வர் மட்டிலுமே தமக்கு உதவக்கூடியவராக இருந்தார். ஆகவே, தந்தையும் தனையனுமாக இருவர் மட்டிலும் அவ்வறபிக் குறைஷியரை எதிர்த்து வாகை மாலை சூடினர். இறுதியாக ஷை கிணறு மறுபடியும் புதுப்பிக்கப்பட்டது. அக்கிணறுதான் இன்றுவரை "ஜம் ஜம்" என்ற பெயரால் உலகில் கீர்த்திபெற்றிருக்கிறது. இந்த ஜலத்தின் மகிமையைப்பற்றி ஹதீது ஷரீபில் அநேகம் விபரங்கள் வந்திருக்கின்றன. "இந்த ஜலம் உணவாகவும் பானமாகவும் உபயோகப்படும்" என்பதாகவும், "நோய்களைக் குணப்படுத்துமெ" ன்பதாகவும், எந்த எண்ணத்தின்பேரில் அந்த ஜலம் அருந்தப்படுகிறதோ அந்த எண்ணத்திற்குரிய பயனை அது அளிக்கிறதென்பதாகவும் ஹஜ்றத் இப்னு அப்பாஸ் (றலி.), பஜ்ஜாஜ் (றஹ்.) முதலியவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். இந்த ஜலத்தை அருந்தும்போது "நாயனே! உன்னிடம் பிரயோஜனமுள்ள கல்வியையும், ஏராளமான உணவையும், சகல நோய்களைவிட்டும் சுவாத்தியமடைவதையும் கேட்கிறோம்" என்பதாக துஆச் செய்யவேண்டும் என்பதாகவும் ஹஜ்றத் அப்துல்லாஹிப்னு அப்பாஸ் (றலி.) அவர்கள் கூறி இருக்கிறார்கள். இந்த ஜலத்தை அன்று அன்னை ஹஜ்றத் ஹாஜரா (றலி.) அவர்கள் தேக்கி வைக்காமல் வழிந்தோடும்படிவிட்டிருந்தால் உலகிலுள்ள யாவருக்கும் அந்த ஊற்றின் ஜலம் மட்டிலுமே போதுமானதாக இருந்திருக்கும்" என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

ஹஜ்றுல் அஸ்வத்

இது கஃபா ஷரீபின் தென்கிழக்கு மூலையில் கஃபா ஷரீபின் வாசற்படிக்குத் தென்புறத்தில் தரைமட்டத்திற்குமேல் 5 அடி உயரத்தில் வெள்ளிப் பட்டைக்குள் புதைத்து சுவற்றில் வைத்துக் கட்டப்பட்டிருக்கிறது. கஃபாவைத் தவாப் செய்வோர்கள் அந்தக்கல் இருக்குமிடத்திற்கு நேரிலிருந்து தவாபை ஆரம்பித்து, தலைவாயல் இருக்கிற சுவரின் பக்கல் வடக்குப் பக்கல்நோக்கி கஃபாவைச் சுற்றி வரவேண்டும். இந்தக் கல் கருப்பு நிறமாக இருப்பதால் இதற்கு ஹஜ்றுல் அஸ்வது என்று பெயர். தவாபு செய்பவர்கள் முதலில் அந்த வெள்ளிப் பட்டையின்மீது தங்கள் இரு கரங்களையும் வைத்துத் தங்களிரு சென்னிகளையும் அந்த கல்லின்மீது படும்படிச் செய்து முத்தமிடுவர்.

இக்கல்லை முத்தமிடுவதைப் பிற மத வாதிகள் தப்பருத்தம் செய்துகொண்டு முஸ்லிம்கள் ஹஜ்ஜுக்குச்சென்று கஃபாவில் கல்லை வணங்குகிறார்கள் என்று கூறுகிறார்கள். முத்தமிடுவதற்கும் வணங்குவதற்கும் வித்தியாசம் அதிகமுண்டு. இதனைப்பற்றிச் சிறிது விளக்குவாம்.

கஃபாஷரீபு கட்டப்பட்ட இடத்தில் ஆதியில் வானுலகிலிருந்து கொணர்ந்து வைக்கப்பட்டிருந்த 'பைத்துல் மஃமூர்' என்ற பள்ளியானது ஹஜ்றத் நூஹு (அலை.) அவர்கள் காலத்தில் உயர்த்தப்பட்டபோது அல்லாஹுதஆலாவின் கட்டளைப்படி ஹஜ்றத் ஜிப்ராயீல் (அலை.) அவர்கள் அதிலிருந்த இக்கல்லை அபூகுபைஸ் என்ற மலையில் மறைத்துவைத்தார்கள். பின்னர், இறை

தமிழ்நாட் ... 218942

வனின் கட்டளைப்படி ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் தமது குமாரர் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களது உதவியுடன் கஃபா ஷரீபைக் கட்டியகால் ஜனங்கள் தவாபுசெய்வதற்கு ஆரம்பிக்க வேண்டிய இடத்திற்கு அடையாளமிட விரும்பியபோது இந்தக் கல்லை அடையாளமாக வைக்கும்படி ஹஜ்றத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் காண்பித்தார்கள் என்பதாக தப்ஸீர்ஸாவீ முதலிய வேத வியாக்யான உரைகளிற் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இக்கல்லானது, ஆதியில் ஹஜ்றத் ஆதம் (அலை.) அவர்களால் வணங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த பைத்துல் மஃமூரிலிருந்த கல். பைத்துல் மஃமூர் இந்த இடத்திற்கு எப்பொழுது வந்தது என்ற விவரம் கஃபாவின் சரித்திரத்திற் கூறப்பட்டிருக்கிறது.

இக்கல் அக்காலத்தில் தவாபு செய்வதை ஆரம்பிக்கவேண்டிய இடத்தை அறிவிப்பதற்கு அடையாளமாக வைக்கப்பட்டதேயன்றி வணங்குவதற்காக வைக்கப்படவில்லை. ஆனால், இக்கல்லை ஒருவரும் வணங்கியதில்லை. என்றாலும், அக்காலத்திலும் அறபியர்கள் அதனைக் கௌரவமாகவே மதித்துவந்தனர். இதற்குக்காரணம் பலஉள. அவைகளிற்சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறோம். ஆதியில் ஆதம் (அலை.) அவர்களால் கட்டப்பட்ட வணக்க ஸ்தலத்திலிருந்த கற்களில் இந்த ஒருகல்தான் எஞ்சியதாகும். இந்தக் கல்லை ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் எடுத்துக் கொண்டு வந்தார்கள். ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் அதனை சுவற்றில் வைத்தார்கள், என்று ஒரு ரிவாயத்து வருகிறது. இதன்படி இக்கல் மூன்று நபிமார்களது கைகளால் வணக்க ஸ்தலத்தில் வைக்கப்பட்டதென்பது வெளியாகிறது. அதிலும், தற்போது அரேபியாவிலுள்ள பெரும்பாலான ஜனங்களுக்குத் தந்தையாக இருந்த ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.)அவர்களாலும், அவர்களது தந்தையான ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களாலும், வைக்கப்பட்ட ஒரு கல்லை, அவர்கள் பால் பற்றுள்ள அவர்களது சந்ததியினர் கௌரவிப்பது நியாயமல்லவென்று எவரும் கூறமுடியாது. அல்லாமலும், இது ஷெ ரிவாயத்துப்படி ஹஜ்றத் ஆதம் (அலை.) அவர்களால் முதல் முதலாக கட்டப்பட்ட அல்லாஹ்வின் வீட்டில் வைக்கப்பட்ட கல்லாக இருப்பதால், அவர்களது சந்ததியினராகிய உலகமக்கள் அனைவரும் அதனைக் கௌரவிக்க வேண்டியது அவசியமாகும். இம்முறையில் தான் ஷெ கல்லை நபிகள் நாயகமும் (ஸல்.) அவர்களும் கூட முத்தமிட்டிருக்கிறார்கள். இதர மதஸ்திகள் இது சம்மந்தமாகச் செய்யும் ஆக்ஷேபனைகள் கொஞ்சமும் பொருந்தாது. ஒருமுறை ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் ஹஜ்ஜின் போழ்து இந்தக் கல்லை முத்தமிட்ட சமயம் அக்கல்லை நோக்கி "நீ ஒரு சாமான்யமான கல்லென்பதை நானறிவேன். ஆனால், எம்பிரான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் உன்னை முத்தமிட்டார்கள் என்பதற்காகவே யான் உன்னை முத்தமிடுகிறேன்" என்று கூறி இருக்கிறார்கள். முஸ்லிம்களுக்கு கலீபாவான ஹஜ்றத் உமர்பாறூக் (றலி) அவர்கள் கூறிய இவ்வார்த்தைகள் இக்கல்லைக் குறித்து முஸ்லிம்களது அபிப்பிராயம் யாதாகுமென்பதைத் தெள்ளத் தெளிய அறிவித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, பிற மதமாதிகளின் ஆக்ஷேபனைக்கு இதுவே சரியான பதில் என்று நம்புகிறோம்.

இக்கல்லுக்கு இத்துணை பெருமை இருந்ததனால்தான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் மூன்றாவது முறையாக கஃபா ஷரீபைப் புதுப்பித்துக் கட்டியபோது, இக்கல்லை அது இருக்கவேண்டிய ஸ்தானத்தில் வைக்கும் கௌரவம் தங்களுக்கே கிடைக்க வேண்டும் என குறைஷித்தலைவர்கள் ஒவ்வொருவரும் விரும்பினர். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அத்தலைவர்களின் பிரதிநிதியாக இருந்து அதனை அதற்குரிய இடத்தில் வைத்தார்கள். ஆகவே, இக்கல் முன்னம் மூன்று நபிமார்களது கைப்பட வைக்கப்பட்டதாக இருப்பதுடன் நில்லாமல் நான்காவதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முபாரக்கான திருகரங்களாலும் எடுத்து வைக்கப்பட்டதாக இருக்கிறது. எனவே, நபிகள் நாயகம் (ஸல்.)அவர்களைத் தங்களது உயிர், பொருள், மாதா பிதா மற்றெல்லாச் சம்பத்துகளைக் காட்டினும் அதிகப்பிரியமாக மதித்துக் கொண்டிருக்கிற முஸ்லிம்கள் தங்களது குருநாதர் அவர்கள் பாலுள்ள அன்பைக் காண்பிப்பதற்கறிகுறியாக அக்கல்லைத் தங்களது சென்னியில் படவைத்து முத்தங் கொடுப்பதானது தவறான காரியமென நினைப்பதற்கில்லை.

கஃபாவின் போர்வை

ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் கஃபாவைக் கட்டியபோது அதற்குத் திரையோ

அல்லது போர்வையோ போடவில்லை யென்பதையும், மிகவும் சாமான்யமாகவே அது இருந்து வந்தது என்பதையும் உணர்ந்திருப்பீர்கள். ஆனால், யமன் தேசத்திலிருந்து 'ஹுமைரீ' வம்சத்து அரசரான 'அஸ்அதுதுப்பஉ' என்பவர் முதல் முதலாவதாக கஃபாவிற்கு போர்வைகொண்டு வந்தார். யமன் தேசத்தில் ஒரு விதமான சிறந்த போர்வைகள் நெய்யப்படுகின்றன. அவைகளுக்கு "புர்தே யமானீ" என்று பெயர். எனவே, கஃபா ஷரீபிற்கு அவ்வரசரால் அளிக்கப்பட்ட திரையானது இதே போர்வைகளால் தயார் செய்யப்பட்டு வந்தன. பின்னர், 'குஸ்ஸிய்யுப்னு கிலாப்' என்பவர் கஃபா ஷரீபிற்கு தர்ம கர்த்தாவாக வந்ததிலிருந்து இப்போர்வையின் செலவிற்கென அறபிக் கோத்திரங்களிடமிருந்து வரிவசூல் செய்யப்பட்டு வந்தது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் யமன் தேசத்துத் திரையை கஃபா ஷரீபிற்கு அணிவித்ததாக அல்லாமா அஜ்றக்கி (றஹ்.) கூறி இருக்கிறார். பின்னர் ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் தங்கள் காலத்தில் "கிபாத்தி" என்ற ஒருவகைப் போர்வையை அணிவித்தார்கள். இது எகிப்து தேசத்தில் தயார் செய்யப்பட்டு வந்தது. இதற்குப் பிறகு ஒவ்வொரு கலீபாவும் தமது காலத்தில் கஃபா ஷரீபுக்குப் போர்வை அணிவித்து வந்தனர்.

ஆகவே, பனூஉமய்யா வம்சத்து கலீபாக்கள் "தேபா" என்ற ஒருவகைப் பட்டினால் தயார் செய்த போர்வையை அணிவித்துக் கொண்டிருந்தனர். அப்பாஸிய்யா வம்ஸத்து கலீபாக்களில் ஒருவரான மாமூனுர் ரஷீத் என்பவர் வருஷத்தில் மூன்று முறை அதாவது ஹஜ்ஜுடைய காலத்தில் சிவப்புப் பட்டினாலும், ரஜப் மாதத்தில் கிபாத்தி பட்டினாலும் ஈதுல்பித்ர் பெருநாளன்று வெண்பட்டினாலும் தயார் செய்த திரைகளை அணிவித்தார். எகிப்து தேசத்தில் சுல்தான் ஸாலிஹுப்னு சுல்தான் கலாவன் என்பவர் பட்டத்திற்கு வந்தபோது கஃபாவின் போர்வைச் செலவிற்கென எகிப்து தேசத்திலுள்ள இரண்டு கிராமங்களை வக்புச் செய்தார். பின்னர், துருக்கி அரசர்கள் கான்ஸ்தாந்தி நோபிளில் கிலாபத் பதவியை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னர் சுல்தான் சுலைமான் கான் என்பவர் இப்போர்வைக்காக இன்னும் சில எகிப்திய கிராமங்களை வக்புச் செய்தார். இக்கிராமங்களிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து தான் எகிப்து கவர்ன்மெண்ட் அரச மரியாதையுடன் கஃபாவின் போர்வையை வருடந்தோறும் ஹஜ்ஜுடைய காலத்தில் கொண்டு வந்து கஃபாவிற்கு அணிவித்துக் கொண்டிருந்தது.

சிலகாலமாக ஸுஊதி கவர்ன்மெண்டாருக்கும் மிஸ்ர் கவர்ன்மெண்டாருக்குமிடையே ஏற்பட்டிருந்த அபிப்பிராய பேதத்தால் மிஸ்ரிலிருந்து போர்வை வராது நின்றிருந்ததென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். இவ்வருடம் இவ்விரு கவர்ன்மெண்டுகளுக் கிடையே நேச உடன்படிக்கை ஏற்பட்டுவிட்டதால் மிஸ்ரிலிருந்து மிஹ்மலுடன் போர்வையும் இவ்வருடம் அனுப்பப்பட்டிருந்தது. மிஹ்மலென்பது ஒட்டகைப் படையுடன் ஆடைகள் தரித்த சோல்ஜர்களும் சேர்ந்ததாகும். அத்துடன் இரு ஹறம்களுக்கும் தேவையான நன்கொடைகளு மிருக்கும். அவ்வழக்கப்படியே இவ்வருடமும் வந்தது. இது சம்பந்தமாய் இரு கவர்ன்மெண்டுகளுக்கிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெற்று கடைசியாக சோல்ஜர்கள் ராணுவ உடையன்றி சாதாரண உடையில் மக்கா வந்து கஃபத்துல்லாவுக்கு போர்வை போடுவதென்று முடிவாகி அதன்படியே போர்வை முற்கூட்டியே மக்காமுஅல்லமாவுக்கு கொண்டுவரப்பட்டு கஃபாவின் பாதுகாவலாளர்களான அஹ்லஷைபியாக்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. வழமைப் பிரகாரம் பத்தாம் தினத்தன்று அரசர் இப்னுஸுஊது மந்திரிப் பிரதானிகளுடன் ஹரம் ஷரீப்புக்கு வந்து பரிசுத்த கஃபாவுக்கு போர்வையை போர்த்தினார்கள். வழக்கம்போல் போர்வை கருப்புப் பட்டில் கலிமாக்கள் நெய்யப்பட்டிருக்கின்றன. ஒரு முழ அகலத்திற்கு தங்கக்கம்பியால் கலிமாக்களும் ஆயத்துகளும் பின்னப்பட்டபட்டி ஒன்று சுற்றிலும்வைத்து தைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாயத்துகளில் ஹஜ்ரத் இப்றாஹீம் (அலை.) ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) இவர்கள் கஃபத்துல்லாவை நிர்மாணித்த விபரமும் ஜனங்களை ஹஜ்ஜுக்கு அழைக்கும்படி உத்திரவிடப்பட்ட விஷயமும், ஹஜ்ஜு பர்லாக்கப்பட்ட சமாசாரங்களும் அடங்கியுள்ளன. வாயல்மீது தொங்கவிடப்பட்டிருக்கும் பாகம் பற்பல ஆயத்துகளைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. சிலகாலமாக ஸுஊதி கவர்ன்மெண்டார் தாங்களே போர்வை தயாரித்து போர்த்தி வந்ததற்கேற்ப, இவ்வருடத்திலும்

தயார் செய்துவிட்டார்களாயினும், இரு கவர்ன்மெண்டுகளுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் காரணமாக இப் போர்வை போர்த்தப் படாது நிறுத்திவைக்கப்பட்டது.

மத்ரஸாக்கள்

ஹறம் ஷரீபைச் சுற்றியிலும் பல மத்ரஸாக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அஃது பெரும்பாலும் மகாஜனங்களின் பொருளுதவியைக் கொண்டே நடைபெறுகின்றன. இந்த ஹஜ்ஜுடைய காலங்களில் ஒவ்வொரு மத்ரஸாவிலும் ஜல்ஸாக்கள்கூட்டி ஹஜ்ஜுக்கு வருபவர்களில் முக்கியஸ்தர்களை அழைத்து மத்ரஸாவின் விருத்தாந்தங்களை சொல்லிக் காண்பித்து, ஏற்கனவே பரீக்ஷையில் தேறியவர்களுக்கு இனுமும் சர்ட்டிபிகேட்டும் அளித்து மத்ரஸாவின் அபிவிர்த்திக்கு நன்கொடை கோருவது வழக்கம். அத்தன்மைபோல் இவ்வாண்டிலும் சில மத்ரஸாக்களின் ஜல்ஸாக்களுக்கு நாங்களும் அழைக்கப்பட்டு அங்கு சென்றிருந்தோம்.

கவர்ன்மெண்டு "மத்ரஸத்துல் பலாஹ்" வருஷாந்திர விழா

கவர்ன்மெண்ட் ஆதரணையில் நடைபெறும் "மத்ரஸத்துல் பலாஹ்" என்னும் கல்விச்சாலையின் வருஷாந்திர விழா 13-ம் தேதி நடைபெற்றது. அதற்கு யாங்கள் அழைக்கப்பட்டிருந்தோம். அந்த ஜல்ஸாவுக்கு டவுனிலுள்ள முக்கியஸ்தர்களும் உத்தியோகஸ்தர்களும் இந்தியா மிஸ்ர் முதலிய பற்பல தேசத்து ஹாஜிகளும் சமூகமளித்திருந்தனர். நமது ஷெய்குல் காபிலா அல்லாமா ஷாஹ் முகம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீகி அவர்கள் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். மாணவர்கள் இனிய குரலில் திருகுர்ஆன் ஷரீப் ஓதினார்கள்.

பின்னர் அழகிய நடையில் சம்பாஷணைகளும் பிரசங்கமும் புரிந்தனர். பின்னர் பரீக்ஷையில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு இனுமும் சர்ட்டிபிகேட்டும் கொடுத்தார்கள். மௌலானா ஸித்தீகி அவர்கள் மாணவர்களின் திறமையை போற்றிப் புகழ்ந்து கல்வியின் மேன்மையை விளக்கிப் பேசினார்கள். பின்னர் நன்கொடை அளிக்குமாறு கோரப்பட்டது. பலரும் நன்கொடை அளித்தனர். எங்கள் காபிலா தலைவர் ஹாஜி ஜ. மு. முஹம்மது இஸ்மாயில் ரூவுத்தர் அவர்களும் பணவுதவி செய்தார்கள்.

மத்ரஸத்துல் பக்ரிய்யா

இதன் வருட விழா 15-ம்தேதி நடைபெற்றது. அதற்கும் எங்கள் ஷெய்குல் காபிலா தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். வழக்கம்போல் மாணவர்கள் கிராஅத் சம்பாஷணை பிரசங்கம் புரிந்தனர். மௌலானா அவர்கள் தங்கள் முடிவுரை பிரசங்கத்தில் மத்ரஸாவுக்கு உதவிபுரியுமாறு கேட்டுக்கொண்டதற் கிணங்க பலரும் நன்கொடை யளித்தனர். எங்கள் காபிலா தலைவர் அவர்களும் நன்கொடை அளித்தார்கள்.

"தாருல் எத்தாம்" விஜயம்

மக்கமா நகரில் 6 மாதத்திற்குமுன் கவர்ன்மெண்டு ஆதரணையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "தாருல் எத்தாம்" என்னும் அனாதைச் சாலையை வந்து பார்வையிடுமாறு அதன் ஸ்தாபகரும், மக்காவின் போலீஸ் கமிஷனருமான ஜனாப் மஹ்திபேக் அவர்கள் அழைப்பு அனுப்பி யிருந்ததற்கேற்ப ஷெய்குல் காபிலா, ஸர்தார் காபிலா சகிதம் எல்லோரும் சென்றிருந்தோம். தலைவர் எங்களை வரவேற்று உபசரித்தார். ஒரு மாணவர் அந்த அனாதைச் சாலையின் வரலாற்றை விளக்கிக் காட்டினார். அது சமயம் மேன்மை தங்கிய ஹைதராபாத் காபிலாவின் ஸாலாரும், மதீனா முனவ்வரா அனாதைச் சாலையின் ஸ்தாபகரும் போஷகருமான ஸேட் அப்துல்கனி தாதா அவர்களும் விஜயஞ் செய்திருந்தனர். மௌலானா ஸித்தீகி சாஹிப் அவர்கள் அனாதைச் சாலையின் அவசியத்தையும் கனம் மஹ்திபேக் அவர்களின் சேவையையும் பாராட்டி புகழ்ந்து பேசினார்கள்.

பிறகு ஹைதராபாத் காபிலா ஸாலார் காதிர் முகையித்தின் சாஹிப், எங்கள் காபிலா தலைவர் ஹாஜி ஜ. மு. முகம்மது இஸ்மாயில் ரூவுத்தர், சேட் அப்துல்கனி தாதா மற்றும் சிலரும் நன்கொடை அளித்ததுடன் அனாதைகளுக்கு பழங்கள் வாங்கிக் கொடுப்பதற்காக எங்கள் ஷெய்குல் காபிலாவும், அமீறுல் காபிலாவும் பிரத்தியேக இனாமளித்தார்கள்.

தாருல் கிஸ்வா

17-ந் தேதி கஃபாஷரீபின் போர்வை நெய்யுமிடமாகிய தாருல் கிஸ்வாவைப் போய்ப் பார்த்தோம். தக்க நெசவாளர்களைக்கொண்டு தக்க முறையில் வேலை நடைபெறுகின்றது. இவ்வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட போர்வை அப்

படியே கட்டிவைக்கப்பட் டிருக்கிறது. அதனை அங்குள்ள நண்பர் பிரித்துக் காண்பித்தார். வெகு நேர்த்தியாக யிருக்கிறது.

முஸ்தஷ்பா

அதற்குப் பின் ஜனரல் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். அது விஸ்தீரணமான கட்டிடமாகவும் மரஞ் செடிகள் வைக்கப்பட்டதாயுமிருக்கிறது. அங்கு புதிதாக இன்னும் சில கட்டிடங்களும் கட்டப்படுகிறது.

அவ்விடத்திலுள்ள டாக்டர்கள் பிரெஞ்சுப் பாஷை தெரிந்த ஷாம் தேச வாசிகளாயிருந்தனர். எங்கள் காபிலா தலைவர் ஹாஜி ஜ. மு. மு. அவர்கள் அந்த டாக்டர்களிடம் பிரெஞ்சுப் பாஷையில் சம்பாஷிக்க ஆரம்பிக்கவே, அவர்கள் ஹாஸ்பிடலின் விர்த்தாந்தங்களையும் மற்றும் முக்கிய விஷயங்களையும் எடுத்துக் கூறி பல முக்கியமான இடங்களுக்கு அழைத்துச் சென்று நோயாளிகளுக்கு சிகிட்சை செய்துவருவதை விபரித்தார்கள். பிறகு விடைபெற்று வந்துவிட்டோம்.

இரண்டு தினங்களுக்குப்பின் நம்தேச ஹாஜிகளிலொருவருக்கு சற்று சுகக் குறைவேற்பட்டபோது ஜனாப் ஹாஜி ஜ. மு. மு. அவர்கள் அந் நோயாளியை அழைத்து அங்கு சென்றபோது அந்த டாக்டர் அன்புடன் வரவேற்று நீர் பரீக்ஷை முதலியன செய்து தக்க ஔஷதமும் கொடுத்தனுப்பினர்.

மக்காவில் விடுதி

மிஸர், ஜாவா, பர்மா, ஹைதராபாத் இன்னும் ஹிந்துஸ்தானின் இதர பாகங்களிலிருந்து வரும் ஹாஜிகள் தங்குவதற்காக வெல்லாம் தனித்தனியே விடுதிகள் ஏற்பாடு செய்துவைக்கப்பட்டிருக்கின்றன. நம் சென்னை மாகாணம் தமிழ்நாட்டிலிருந்து செல்லும் ஹாஜிகளுக்கு மட்டில் பொது விடுதி யாதொன்றும் அங்கு கிடையாது. மக்காவில் எல்லோரும் ஒரே காலத்தில் வந்து தங்கவேண்டியதாக விருப்பதால் இக்காலத்தில் வீடுகள் வாடகைக்குக் கிடைப்பதும் கஷ்டமாக விருக்கிறது. மக்கா வாசிகள் தாங்கள் குடியிருக்கும் வீட்டின் ஒரு பாகத்தில் தாங்கள் இருந்துகொண்டு மீதமுள்ள இடங்களை இக்காலத்தில் வாடகைக்கு விட்டு விடுகின்றனர். ஹறம் ஷரீபுக்குச் சமீபத்திலுள்ள மத்ரஸாக்களுக்கும் இந்த ஹஜ்ஜுடைய காலங்களில் விடுமுறை அளித்துவிட்டு அந்த இடங்களையும் வாடகைக்கு விடுகின்றனர். 10 பேர் தங்கியிருக்கக்கூடிய இடத்திற்கு ஹறமுக்குச் சமீபமாய் 10 பவுன் வாடகையும், சற்று தூரமான இடங்களுக்கு 3, 4, 5 பவுன் வீதமும் வாடகை வாங்கப்படுகிறது. இதர தேசங்களிலிருந்து வரும் ஹாஜிகளில் சாமான்யர்கள் அந்தந்த தேசத்தாருக்காக ஏற்பட்டிருக்கும்பொது விடுதிகளில் தங்கிக் கொள்கின்றனர். ஆனால் நம் தமிழ்நாட்டிலிருந்து செல்லும் சாமான்யர் முதல் தனவந்தர் வரை யாவரும் வாடகை வீட்டிலேயே வசிக்கவேண்டும். இதனால் சாமான்யர்களுக்கும் தனியாகச் செல்பவர்களுக்கும் பெரும் கஷ்டமேற்படுகிறது. இதனை நிவர்த்திக்க நம் நாட்டுத் தலைவர்கள் பன்முறை முயன்றும் யாதொரு பிரயோசனமுமேற்படவில்லை.

எங்கள் காபிலா தலைவர் அல்ஹாஜ் ஜ. மு. முகம்மது இஸ்மாயீல் ருவுத்தர் அவர்கள் இங்கிருந்து செல்லும்போதே இவ்விஷயத்தை கவனித்து ஒரு ஏற்பாடு செய்துவரவேண்டும் என்னும் கருத்துடையவராக விருந்தார்கள். அங்கு சென்றவுடன் இதற்காக பல முக்கியஸ்தர்களையும் கண்டு பேசியதுடன் பற்பல இடங்களையும் பார்வையிட்டார்கள்.

மக்கமாநகரிலுள்ள அநேக காலி இடங்களும், கட்டிடங்களும் அநேகமாய் வக்பு சொத்துக்களாகவே யிருக்கின்றன. பல இடங்களையும் சுற்றிப் பார்த்து ஒரு இடத்தையோ, கட்டிடத்தையோ தெரிந்து நெருங்கிப் பேசினால் அது இரண்டு மூன்று தலைமுறைக்குமுன் வக்புடைய சொத்தாகவே புலப்படுகிறது. அதிலும் இதர தேசவாசிகள் பெயருக்கு எந்த சொத்தும் விற்பனைசெய்யக்கூடாதென ஸுஊதி கவர்ன்மெண்டார் சட்டம் இயற்றியிருப்பதால் நம் பெயருக்கு நேரடியாக எந்த சொத்தையும் வாங்கமுடியாது. நம்பிக்கையுடன் நாம் பணம் கொடுத்து அங்குள்ள ஓர் அறபி பெயருக்கு சொத்தை வாங்கி அவர்மூலம் வக்பு செய்யவேண்டும். இதற்கும் எங்கள் காபிலா தலைவர் அல்ஹாஜ் ஜ. மு. முகம்மது இஸ்மாயில் ருவுத்தர் அவர்கள் உடன்பட்டு பற்பல காலி இடங்களையும், பழைய கட்டிடங்களையும் விலைக்குப் பேசினார்கள். கிரயம் ஒத்துவராததால் கைவிடப்பட்டது. கடைசியாக நல்லகட்டிடமாக பார்த்து வாங்கிவிடலாமென முயற்சி செய்து நான்கு அடுக்கு மெத்தையுடைய ஒரு வீட்டைத் தெரிந்து விலை பேசியதில் முடிவாக 1,500 பவுன் கிரயம்சொன்னார்கள். 1,000 பவுன் வரை கேழ்க்கப்பட்டது.

கொடுக்க முடியாதென்று தெரிவித்துவிட்டார்கள். இந்த ஹஜ்ஜுடைய காலங்களில் வாடகை பவுன் கணக்கில் அதிகமாகக் கிடைப்பதால் இதுபொழுது கிரயம் படியாது; சாதாரண காலத்தில் தான் வந்து பார்க்கவேண்டுமென அங்குள்ள முக்கியஸ்தர்கள் கூறியதால் அத்துடன் அந்த யோசனை நிறுத்திக் கொள்ளப்பட்டது. இந்தக் கஷ்டத்தை அல்லாஹ்த ஆலா கூடிய சீக்கிரம் நிவர்த்தியாக்கி வைப்பானாக.

ஹஜ்ஜு

ஹஜ்ஜில் பர்லு மூன்று (1) இஹ்ராம் கட்டுவது (2) அறபா மைதானத்தில் தரிபடுதல் (3) கஃபத்துல்லாஹ்வை தவாப் செய்வது. இவைகளில் ஏதாகிலும் தவறி விடுமாயின் ஹஜ்ஜு நிறைவேறாது போய்விடும். இதுவன்றி 'சபாமர்வா' ஓடுவது, முஜ்தலிபாவில் தரிபடுவது, கல் எறிவது, தலைக்ஷவரம் செய்துகொள்வது, குர்பானீ அறுப்பது ஆகியவைகளெல்லாம் வாஜிபாகும்.

இப்ராத், தமத்துஉ, கிரான் ஆகிய மூன்று வகைகள் ஹஜ்ஜிலேற்பட்டிருக்கின்றன. உம்ரா இல்லாமல் ஹஜ்ஜு மட்டில் செய்வதற்கு 'இப்ராத்' என்றும், முதலில் இஹ்ராம்கட்டி உம்ரா செய்துவிட்டு இஹ்ராமைவிட்டு நீங்கி, மறுமுறை துல்ஹஜ்ஜு 7, 8-ல் இஹ்ராம்கட்டி ஹஜ்ஜு செய்வதற்கு 'தமத்துஉ' என்றும், ஒரே இஹ்ராமில் உம்ராவையும் ஹஜ்ஜையும் நிறைவேற்றுவதற்கு 'கிரான்' என்றும் சொல்லப்படும்.

நாங்கள் உம்ராவுக்கு மட்டில் இஹ்ராம் கட்டி அவ்வேலையை முடித்துக்கொண்டு இஹ்ராமை விட்டு நீங்கிவிட்டதால் முபாரக்கான துல்ஹஜ்ஜு பிறை எழு 18-2-37 வியாழக்கிழமை மாலையில் மஸ்ஜிதுல் ஹறமில் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டிக்கொண்டு கஃபாஷரீபை தவாபு செய்தோம். 10-ம் நாள் மினாவிலிருந்து கஃபாவை 'தபாபுஜ்ஜியாரா' செய்ய வரும்போது நெறுக்கடி அதிகமாக இருக்குமென்பதை யுத்தேசித்து அதுபொழுதே 'ஸபா, மர்வா'வுக்கிடையே 'சயீ' செய்துகொண்டோம். (இவ்வாறு செய்துகொள்ளலாமென பிக்ஹு சட்டம் அறிவிக்கிறது). அன்றிரவு மக்காவில் தங்கியிருந்து மறுநாள் பிறை 8 வெள்ளிக்கிழமை காலை 9-மணி சுமாருக்கு பஸ்ஸில் மினாவை நோக்கிப் பிரயாணமானோம். மக்காவிலிருந்து சற்றேறக்குறைய 4 மைல் தூரத்தில் மினா யிருக்கிறது. இங்கு செல்வதற்கு இரு பாதைகளிருக்கின்றது. ஒன்று மணல் அதிகமாயும் மற்றொன்று சாதாரண பாதையாயுமிருக்கிறது. நாங்கள் 10-மணிக்கு மினாவை அடைந்தோம்.

மினா

இங்கு பல திறப்பான வெளிகளிருக்கின்றன. சில உயர்ந்த மெத்தை வீடுகளுமிருக்கின்றது. இங்கு குடியிருப்புக் கிடையாது. வருடத்தில் ஹஜ்ஜுடைய காலத்தில்தான் ஜனக் கூட்டம், கடைத்தெருவு முதலியன ஏற்படுகின்றன. ஒரேகாலத்தில் லக்ஷக்கணக்கான மக்கள்கூட வேண்டியதாகயிருப்பதால், பெரும்பட்டணம் போல் தோன்றுகிறது. ஒரு மைல் தூரம் வரை பற்பல கடைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஸுஊதி கவர்ன்மெண்ட் முக்கியஸ்தர்கள் தங்குவதற்காக ஒரு மாளிகையும் அமைத்திருக்கின்றனர். இங்கு மஸ்ஜிதுல்கைப், மஸ்ஜிதுல் கவ்தர், மஸ்ஜிதுல்கப்ஷ், 'மஸ்ஜிதுல்பைஆ, முதலிய பல பள்ளிவாசல்களிருக்கின்றன. சற்றேறக்குறைய ஒவ்வொரு பர்லாங் தூரத்தில் சிறிய சிறிய மூன்று தூண்கள் மூன்று இடங்களில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதற்கு 'ஜிமார்' என்று பெயர். மக்காவிலிருந்து செல்லும் பாதையிலேயே வரிசையாக இம்மூன்று தூண்களுமிருக்கின்றன. இதுவன்றி 'முதவ்விப்'கள் நெடுகிலும் கூடாரங்கள் அடித்து வைத்திருக்கின்றனர். நாங்கள் எற்கெனவே பிறை 3-ல் மினாவுக்குவந்து பல இடங்களிலும் வீடு பார்த்து 'ஜம்ரத்துல் ஊலா'வுக்கு முன்பாகவுள்ள வீட்டை 12 பவுன் வாடகைக்குப் பேசியிருந்ததால் அந்த வீட்டில் வந்து தங்கினோம். சற்று களைப்பாறி ஜும்ஆ தொழுகைக்காக 'மஸ்ஜிதுல்கைப்'க்குச்சென்று தொழுகையை நிறைவேற்றி வந்தோம். அன்றிரவு அங்கு தங்கி இரவில் ஓர் ஆடு வாங்கி அறுத்து மறுநாள் அறபாவுக்காக தயார் செய்து வைத்துக் கொண்டோம். பின்னர்பிறை 9, (20-2-37) சனிக்கிழமை காலை 8 மணி சுமாருக்கு அங்கிருந்து புறப்பட்டு முஜ்தலிபா வழியாய் 10 மணிக்கு "அறபாத்"மைதானம் போய் சேர்ந்தோம். மினாவிலிருந்து இந்த இடம் சுமார் 5 மைல் தூறமிருக்கும்.

அறபா மைதானம்

இது ஹறமுக்கு வெளியிலிருக்கிறது. இந்த மணற்பாங்கான மைதானத்தின் மூன்று பக்

கங்களிலும் உயர்ந்த மலைத் தொடர்களிருக்கின்றன. ஒரு பக்கல் சிறியமலை யொன்றிருக்கிறது. இதற்கு "ஜபலுற்றஹ்மத்" என்று பெயர். இதில்தான் எம்பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் நின்று கொண்டு 'குத்பா' ஓதினுர்கள். இந்த மைதானத்தின் ஆரம்பத்தில் 'மஸ்ஜித நமிரா" அல்லது "மஸ்ஜித இப்ருஹீம்" என்னும் பெயருள்ள ஒரு பள்ளிவாசலிருக்கிறது. இம்மைதானத்தின் அநேக இடங்களில் ஜுபைதா கால்வாய் ஓடிக்கொண்டிருப்பதுடன் ஆங்காங்கு ஹவுலுகள் போல் கட்டப்பட்டு அவைகளில் தண்ணீர் வந்து நிற்கிறது. இந்த மைதானத்தின் பற்பல இடங்களிலும் 'முதவ்விப்'கள் கூடாரங்கள் அடித்து இந்த முத்தவ்விபின் கூடாரங்கள் என்று தெரிந்து கொள்வதற்கு அடையாளமாக பற்பல வர்ணங்களை யுடைய கொடிகளை பறக்கவிட்டிருக்கிருர்கள். பொதுவாகப் பார்த்தால் அந்த மைதானம் முழுதும் கூடார மயமாகவே யிருக்கிறது.

இந்த மாண்பு மிக்க முபாரக்கான "அறபா" மைதானம் நபிமார்களும் அதிலும் குறிப்பாய் சர்க்காரெ மதீனு நம்பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களும் மற்றும் பெரியார்களும் வந்து நின்ற இடமாகையால் நாங்கள் யாவரும் அங்கு வந்துசேர்ந்ததைப்பற்றி ஆனந்தக் கண்ணீர் ததும்ப அல்லாஹுத ஆலாவுக்கு நன்றி செலுத்தினேம். பின்னர் 'ஜபலுர் ரஹ்மா' வுக்கு சமீபத்தில் 'ஜுபைதா' தண்ணீர் தங்கியிருக்கும் ஹவ்ஜில் ஸ்நானம் செய்தோம். அந்த ஹவ்ஜில் தண்ணீர் ஏராளமாக தங்கியிருந்தது. இதுபோல் அறபாத் மைதானத்தின் நானுபாங்களிலும் தண்ணீர் தேக்கங்கள் இருப்பதால் ஹாஜிகளுக்கு தண்ணீர்ச் சௌகரியம் அதிகம் கிடைத்தது. கூலிக்காரர்கள் காலையில் 2 டின் 3 "கர்ஷ்" விதமும், மாலையில் 2 "கர்ஷ்" விதமும் தண்ணீர் ஏராளமாக சப்ளை செய்தனர். (நமது இந்திய ரூபாய் ஒன்றுக்கு 18½ கர்ஷ்) லுஹர் தொழுகைக்கு முன்பே சாப்பாட்டு வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு அறபாவிற்குரிய நேரமான லுஹர் தொழுகை நேரத்தில் நாங்களெல்லோரும் ஒரு கூடாரத்தில் கூடிவிட்டோம். ஷெய்குல் காபிலா அல்லாமா ஷாஹ் ஸித்தீக்கி அவர்கள் அறபாவின் மகிமையை விளக்கி ஓர் அரிய பிரசங்கம் புரிந்தார்கள்.

பிரசங்க சுருக்கம்

எனதருமை சோதரீர்!

இந்த முபாரக்கான இடத்தில் முபாரக்கான நேரத்தில் நம் யாவரையும் ஒருங்கே கொண்டு வந்து சேர்த்த வல்லோன் அல்லாஹுத ஆலாவுக்கு ஆயிர ஆயிரம் தடவை நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். ஹஸ்ரத் ஆதம் (அலை.) அவர்கள் சுவர்க்க லோகத்திலிருந்து இப்பூவுலகத்தில் இறக்கப்பட்டபோது தங்கள் பத்தினி ஹஸ்ரத் ஹவ்வா (அலை.) அவர்களைக் காணுமற் தேடித் திரிந்து கடைசியாக இந்த மைதானத்தில் தான் கண்டு முலாகாத்துச்செய்தார்கள். "ஹஸ்ரத் ஆதம் (அலை.) தங்கள் மஹ்பூபாவைக் கண்டு ஆனந்தம் கொண்ட இடத்தில் உம்முடைய மஹ்பூபான என்னைத்தேடி ஆனந்தம் கொள்வீராக" வென ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.)அவர்களுக்கு அல்லாஹுத் ஆலா கட்டளையிட்டான். எனவே இது அவர்களும் அவர்களைப் பின்பற்றி மற்ற நபிமார்களும் அல்லாஹுத ஆலாவின் அருளைத் தேடி நின்ற இடமாகும்.

ஹஜ்ஜினுடைய கிரியைகள் எப்பொழுது ஆரம்பமாயிற்றென்பதில் இமாம்கள் அபிப்பிராயப் பேதப்பட்டிருக்கின்றனர். சிலர் ஹஜ்ரத் ஆதம் (அலை.) காலம் முதற்கொண்டே ஹஜ்ஜு நிறைவேற்றப்பட்டு வருகின்றதென்று கூறுகின்றனர். சிலர் ஹஜ்றத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் காலந்தொட்டு நடைபெற்று வருகின்றது என்கின்றனர். எவ்வாருயினும் இஃது வெகு நாளாய் நடந்தேறிவரும் பிரதானக் கிரியை என்பதிற் சந்தேகமில்லை.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு முன் மக்காவில் வாசஞ் செய்து வந்த குப்பார்கள், தாங்கள் இப்ருஹீம் (அலை.) அவர்களது மார்க்கத்தினர் என்று கூறிக்கொண்டு அநேக மாருன செய்கைகளை அநுஷ்டித்து வந்தனர். கஃபத்துல்லாவைச் சுற்றிலும் பெரும் பெரும் விக்கிரகங்களை நிர்மாணித்து பூஜித்து வந்தனர். அறபாவுக்கும் அன்னேர் விஜயஞ் செய்வர், என்ருலும் குறைஷி வம்சத்தைச் சேர்ந்தவர்கள் ஹறம் ஷரீபினுடைய எல்லையை விட்டு வெளியேருமல் "முஜ்தலிபா" என்னும் இடத்தில் தங்கிக்கொண்டு ஏழைகளையும் 'பத்வி'களான காட்டு அரபிகளையும் அறபாத் மைதானத்தில் தரிபடும்படி செய்வார்கள். அன்னேர் "முஜ்தலிபா" முதலிய இடங்களில் கூடிக்கொண்டு

தங்கள் இறைவனை தியானஞ் செய்வதற்கு பதிலாக தங்கள் பெருமைகளையும் கியாதிகளையும் புகழ்ந்து கவிபாடிக் கொண்டும் எதிரிகளை இகழ்ந்து கொண்டும் ஆட்டம் பாட்ட ஷோக்குகளில் பராக்காய் இருந்துகொண்டு மிருப்பார்கள். பொதுவாகக் கூறுமிடத்து இந்த முபாரக்கான நேரங்களை வீண் விளையாட்டில் கழிப்பார்கள். பிரக்யாதி பெற்ற இந்த ஹஜ்ஜினுடைய கிரியைகளை அன்னோர் இவ்வாறு வீண் விளையாட்டாக ஆக்கி வைத்திருந்தனர் பாருங்கள்!

எம்பெருமானார் சர்க்காரெ மதீனா நபி முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் தோன்றி (மில்லத்த இப்ராஹீம்) ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்களுடைய ஹஜ்ஜின்விதம் இன்னதென்பதை உலகத்தவருக்கு விளக்கினார்கள். எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்து 8-வது வருடத்தில் மக்கமா நகரை ஜெயித்தார்கள். அதுபொழுது கஃபாவிலும் அதனைச் சுற்றியிலும் நாட்டப்பட்டிருந்த விக்கிரகங்களை நோக்கி, எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் "சத்தியம் வந்துவிட்டது. அசத்தியம் வீழ்ச்சி யடைந்து விட்டது" என்னும் திரு வசனத்தைக்கூறி கவிமா விரலால் சமிக்ஞை செய்தார்கள். அந்த விக்கிரகங்கள் யாவும் குப்புற அடித்து விழுந்து விட்டன. அவைகளை யெல்லாம் அப்புறப்படுத்தி கஃபாவை பரிசுத்தப்படுத்தி வைத்தார்கள்.

தங்கள் மருகர் ஹஸ்ரத்அலீ (றலி.) அவர்களை தங்கள் தோள்மீது ஏற்றி கஃபாவின் உட்புறத்தில் எழுதப்பட்டிருந்த சொரூபங்களை அழித்து சுத்தி செய்யுமாறு செய்தார்கள். இவ்வாறு கஃபத்துல்லாவை சுத்தி செய்து ஏக தெய்வ வணக்க ஸ்தலமாக மாற்றிவிட்டார்கள்.

ஹிஜ்ரத்து ஒன்பதாம் ஆண்டில் பெருமானார் (ஸல்.) அவர்கள் ஹஜ்ஜு செய்வதற்காக முடிவு செய்துகொண்டார்கள். இச்செய்தி எல்லா ஸஹாபாக்களுக்கும்அறிவிக்கப்பட்டது. அந்த ஹஜ்ஜில் ஒரு லக்ஷத்து இருபத்து நான்கு ஆயிரம் ஸஹாபாக்கள் (றலியல்லாஹு அன்ஹும்) கலந்துகொண்டார்கள். அவர்களெல்லோரும் துல்ஹஜ்ஜு மாதம் 9-ம் தேதி இம்மைதானத்தில் தரிப்பட்டார்கள். இதோ நம் முன்னுவிருக்கும் 'ஜபலுர்றஹ்மத்'தின் அடிவாரத்தில் நம்பெருமானார் (ஸல்.) அவர்கள் நின்று "குத்பா" ஓதினார்கள். அதில் அநேக அரும்பெரும் விஷயங்களை கற்பித்தார்கள். அதுபொழுது ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) தோன்றி அடியில் கண்ட "வஹீ"யைத் தெரிவித்தார்கள். "இன்றைய தினத்தில் உங்களுடைய சன்மார்க்கத்தைப் பூர்த்தி செய்துவிட்டேன். என்னுடைய அருட்கொடையை உங்கள்மீது சம்பூர்ணமாக்கி விட்டேன். உங்களுக்கு இஸ்லாம் மார்க்கத்தை சன்மார்க்கமாகப் பொருந்திக்கொண்டேன்."

ஒரு மனிதன் தன் இருப்பிடத்திலிருந்தே தொழுகையை நிறைவேற்றலாம், நோன்பு நோற்கலாம், ஜகாத் கொடுக்கலாம், ஆனால் இப் பரிசுத்த ஹஜ்ஜுக்கடமையை நிறைவேற்றுவதற்கு இடம் காலம் பொருள் முதலியன வேண்டும். ஒரு முஸ்லிம் இந்த ஹஜ்ஜுக்கடமையை நிறைவேற்றிவிடின் அவனுடைய ஐந்தாவது பர்ளு நிறைவேறி விடுகிறது. இதைத்தான் அல்லாஹுதஆலா "சன்மார்க்கத்தின் பூர்த்தி" என்று அறிவிக்கின்றான். ஒரு முஸ்லிம் இன்றைய தினம் இந்த இடத்தில் தரிபடுவானாயின், அவன் மீது அல்லாஹுத ஆலாவின் அருட் கொடை சம்பூர்ணமாகி விடுகிறது. இதைத்தான் 2-வது வசனத்திற் குறிப்பிடுகிறான்: "இந்த அறபாவுடைய நேரத்தில் ஒரு விநாடி உளது; அதில் தரிபட்டு இறைவனிடத்தில் மக்கள் பிரார்த்தனை புரிவார்களாயின் அவர்களுடைய பாவங்களெல்லாம் பொறுக்கப்பட்டு அன்று பிறந்த பாலகன் போலாகி விடுகின்றனர்" என நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள். இவ்வாறான மகத்துவந் தங்கிய பரிசுத்த இடத்தில் நாம் இதுபொழுது வந்து தரிபட்டுளோம். நம்முடைய ஹாஜத்து (தேவை) களையெல்லாம் கேட்டு அடைவோமாக! இந்த இடத்தில் மக்கள் கேட்கும் எந்த துஆவும் ஒப்புக்கொள்ளப்பட்டுப் போகுமென்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை.

ஆனால் சிலருக்கு இங்கொரு சந்தேகம் ஜெனிக்கலாம். அதாவது ஒருவர் ஏதாகிலுமொரு வஸ்த்துவை இந்த இடத்தில் கேட்டு அந்தவஸ்த்து அதுபொழுது கைகூடா திருப்பது கொண்டு தன்னுடைய இந்த துஆ கபூலாகவில்லையென கருதிவிடக்கூடாது. அல்லாஹுதஆலா சகல விஷயங்களையும் தெரிந்தவனாகையால் அந்த மனிதனுக்கு அவன் கேட்கும் வஸ்த்துவை எந்த நேரத்தில் அளிக்க வேண்டும் என்பதைத் தெரிந்து சமய சந்தர்ப்

பத்தில் அந்த வஸ்துவை அவனுக்கு அளிப்பான். அம்மனிதன் அல்லாஹத் ஆலா யிடத்தில் கேட்ட அந்த நேரத்திலேயே அவ்வஸ்த்து கைகூடி வாராததால் தன்னுடைய பிரார்த்தனை ஒப்புக்கொள்ளப்படவில்லை என்று கருதிவிடலாகாது. ஹஸ்ரத் நூஹ் (அலை.) அவர்களுடைய கூட்டத்தினர் ஹஸ்ரத் அவர்களது கட்டளைக்கு மாறுசெய்ததால் அக்கூட்டத்தினரை அழித்து விடும்படி ஹஸ்ரத், அல்லாஹ்தஆலாவிடம் பிரார்த்தனை புரிந்தார்கள். அந்த துஆவின் விஷயம் 30 வருஷங்களுக்குப்பின் ஏற்பட்டது. ஹஸ்ரத் அவர்கள் கேட்ட அதே நேரத்தில் அதுவிஷயம் நடைபெறாத்ததால் அவர்களுடைய துஆ ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று கருதிவிடலாகாது. அதுபோல் உங்களில் யாரும் இந்த இடத்தில் தனக்கு ஒரு குழந்தை பிறக்கவேண்டுமென அல்லாஹ்தஆலா இடம் கேட்டு அவ்வாறு குழந்தை பிறக்கவில்லையானால் தனது துஆ கபூலாகவில்லை என்று கருதிவிடலாகாது. அவர் கேழ்க்கும் அந்தக் குழந்தையை இவ்வுலகில் இதுபொழுது கொடுப்பதைப் பார்க்கினும் மறுமையில் கொடுப்பது பதின்மடங்கு மேலாகுமென அல்லாஹ்தஆலா நாடினால் அந்தக் குழந்தையை அவ்விடம் கொடுப்பான். இதனால் இவனுடைய துஆ ஒப்புக் கொள்ளப்படவில்லை எனக் கருதிவிடலாகாது. அவ்வாறு மறுமையில் இவனுக்குக் கொடுப்பது கொண்டு உலகில் இதுபொழுது கொடுக்கப்பட்டவர்களெல்லோரும் தங்களுக்கும் அவ்வஸ்த்து மறுமையில் கிடைத்திருந்தால் நலமாகயிருந்திருக்கும் என கூறிக்கொள்வர். ஆகவே இந்த இடத்தில் மக்கள்புரியும் சகல பிரார்த்தனைகளும் அல்லாஹ்தஆலாவிடம் ஒப்புக்கொள்ளப்பட்டுப் போகிறது.

நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இந்த அறபா மைதானத்தில் வந்து தரிபட்டபோது அவர்களுடன் வந்த ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி.) கண்ணீர் வடித்தார்கள். அதுபொழுது சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் இவ்விஷயமாக நாயகி அவர்களை வினவியபோது, "பெண்களுக்கு ஏற்படும் விஷயம் என்னைத் தொட்டிருக்கிறது" என நாயகி (ரலி.) அறிவித்தார்கள். (அதாவது தனக்கு மாதவிடாய் ஏற்பட்டிருப்பதாகக்கூறினார்கள். அதுபொழுது சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் அருமைப் பத்தினியாரை நோக்கி பயப்படவேண்டாம்; ஹஜ்ஜுடைய கிரிகைகளை அப்படியே நடத்திக்கொண்டு செல்லுங்கள், ஆனால் பைத்துல்லாஹ்வை மட்டில் தவாப் செய்யவேண்டாம்; துப்பரவு ஏற்பட்டபின் செய்து கொள்ளலாமென அறிவித்தார்கள்.

(பெண்கள் இஹ்ராம் கட்டியிருக்கும்போது மாதவிடாய் ஏற்பட்டுவிடுமாயின் உடனே குளித்து மறுபடியும் 'இஹ்ராம்' கட்டிக்கொண்டு ஹஜ்ஜுடைய இதர காரியங்களைச் செய்துகொண்டு போகவேண்டும். ஆனால் கஃபத்துல்லாஹ்வை தவாப் மட்டும் செய்யலாகாது. மாதவிடாய் தீர்ந்துபோனபின் இவ்வேலையைச் செய்யவேண்டும். ஹஜ்ஜுடைய இதர காரியங்களை அறபா மைதானத்தில் நடத்தவேண்டி யிருப்பதால் அது ஒரு வனாந்தரமாக யிருப்பதுகொண்டு அவ்விடத்தில் நிறைவேற்றலாம். 'தவாப்' செய்வது மட்டும் ஹறம் ஷரீபில் ஏற்படுவதால் மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள் ஹறம் ஷரீபில் பிரவேசிக்கலாகாது.)

ஆகவே ஒவ்வொருவரும் தனித்தனியே இருந்து குர்ஆன் ஷரீப் ஓதிக்கொண்டும், தஸ்பீஹ், தஹ்லீல் செய்துகொண்டும், இஸ்திக்பார் செய்துகொண்டும், இதர தேவைகளை இறைவனிடம் கேட்டுக்கொண்டும் இருக்கவேண்டும். எல்லா துஆக்களிலும் அல்லாஹ்வின் 'ரிலா' என்னும் பொருத்தத்தைத் தேடுவது மிக அவசியமானதாகும். இதைத் தான் மூன்றுவது திரு வசனத்தில் அல்லாஹு சமிக்ஞை செய்கின்றான்." எனக் கூறி முடித்தார்கள்.

பின்னர் லுஹருக்கு பாங்கு சொல்லப்பட்டு ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டு இஸ்திக்பார், தக்பீர், தல்பியா, சலவாத், குர்ஆன் ஷரீப் ஓதுவதில் ஈடுபட்டிருந்தோம்.

பின்னர் அஸருக்கு பாங்கு சொல்லப்பட்டு அத்தொழுகையையும் முடித்துக் கொண்டு பொழுது அடையும்வரை மறுபடியும் அவைகளிலீடுபட்டிருந்து பொழுது அடைந்தவுடன் அவ்விடமிருந்து பஸ்ஸில் பிரயாணமானோம்.

முஜ்தலிபா

எங்களுடைய பஸ்கள் முஜ்தலிபா மைதானத்தின் மஷ்அருல் ஹறுமுக்கு எதிரே வந்து நின்றது. அவ்விடத்தில் டேறு அடித்துக் கொண்டு மக்ரிப் இஷாவின் தொழுகைகளை 'ஜம்உ' சேர்த்து தொழுதுகொண்டு இரவு தரிபட்டோம். அன்றிரவு காற்று அதிகமாக அடித்ததால் குளிர்காணப்பட்டது. அதிகாலையிலேயே பஜர் தொழுகைக்கு பாங்கு சொல்லி

ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டு முஜ்தலிபாவின் சட்டப்படி காலையில் நின்றுகொண்டு 'உகூப்' செய்தோம்.

மௌலானா ஸித்தீக்கி அவர்கள் 'துஆ' ஓதினார்கள். எல்லோரும் நின்று கண்ணீர்வடித்து ஆமீன் கூறினோம். சூரியன் உதயமான பின் 'குஜஹ்' மலையில் ஏறி கற்களைப் பொருக்கிக் கொண்டு மினாவை நோக்கி புறப்பட்டு அவ்விடம் வந்து சேர்ந்தோம்.

மினாவில் சாமான்களை வீட்டில் வைத்து விட்டு கடைசி ஜம்ராவுக்குச் சென்று ஏழு கற்களை அடித்துவிட்டு 'மன்ஹர்' என்னும் குர்பானீ செய்யுமிடத்திற்குச் சென்று ஹஜ்ஜுக்காகக் கொடுக்கவேண்டிய குர்பானியை நிறைவேற்றி தங்களுக்காக "உல்ஹிய்யா" கொடுத்ததோடு தங்கள் இன பந்துக்களுக்காகவும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்காகவும் உல்ஹிய்யா கொடுத்தோம்.

குர்பானீ

ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களை அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா பலவிதத்திலும் சோதனை செய்தான். அவனது ஏகதெய்வத்தன்மையைப் பிரசாரம் செய்ததன் நிமித்தமாக நம்றூத் அரசனாலும் அவனது ஜனங்களாலும், ஹஸ்ரத் அவர்கள் அநேகம் கஷ்டங்களை அடைந்தார்கள். பின்னர், பிறந்த நாட்டை இறைவனின் கட்டளைப்படி ஹிஜ்றத்துச் செய்து எகிப்து, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் குடியேறினார்கள். பின்னர், அவனது கட்டளைப்படி தங்கள் அருமைப் புதல்வரான ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களையும், அவரது மாதாவாகிய தமது அன்பிற்குரிய வாழ்க்கைத் துணைவி பீபிஹாஜரா (றலி.) அவர்களையும் பாரான் வனத்தில் கொண்டுவந்து விடவும் வேண்டியதாக இருந்தது. பிறகு, தங்கள் அருமைப் புதல்வரான ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களை அறுத்து அல்லாஹுத ஆலாவிற்காகக் குர்பானீ செய்வதுபோல் சொற்பனங் கண்டார்கள். நபிமார்களுக்கு இறைவனாலருளப்படும் வஹியானது பலவிதமாக இருக்கிறது. சொற்பனத்திலறிவிப்பது அவ்வினங்களிலொன்று. இச் சொற்பனம் இரண்டு வகை. ஒன்று "ஜலீ" அதாவது சொற்பனத்தில் எவ்வாறு காண்பிக்கப்படுகிறதோ அவ்வாறு நிகழ்வது, மற்றொன்று "தம்தீலி" அதாவது சொற்பனத்தில் கண்டபடி நடவாமல் அதற்குரிய பயன் நிகழுவது. எனவே, ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் கண்ட கனவை "ஜலீ" என்பதாகத் தீர்மானித்துத் தங்களது புதல்வரைக் குர்பானீ செய்வதற்காக அழைத்துச் சென்று புதல்வரிடம் தாங்கள் கண்ட கனவைக் கூறி அருமைப் புதல்வரின் இஷ்டத்தை வினவினார்கள். ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் அக்காலத்தில் பதினான்கு பதினைந்து வயதுள்ளவராக இருந்தாலும் தெய்வ பக்தி நிரம்பியவராகவிருந்ததால் தமது தந்தையிடம் "அருமைத் தந்தாய்! தாங்கள் கட்டளையிடப்பட்டதைச் செய்துகொள்ளுங்கள். அல்லாஹ் நாடினால் என்னைப் பொறுமையாளரில் ஒருவராகத் தாங்கள் கண்டு கொள்வீர்கள்" என்று கூறினார்கள். மனத்திற்கேற்றமைந்தவராக இருப்பதையறிந்த ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களுக்குத் தங்கள் புதல்வரைப் பற்றி அதுபோழ்து எத்துணை பாசமும் நேசமும் ஏற்பட்டிருக்கும் என்பதை வாசக நேயர்களுக்குநாம் சொல்லத் தேவையில்லை. அத்துடன் ஏறக்குறைய 100 வயதினை அடைந்த ஒரு தந்தை சுமார் 86 வயது வரை புத்திரப்பேறில்லாமலிருந்து அநேகம் அரும்பெரும் பிரார்த்தனைகளுக்குப் பின்னர் பெற்றெடுத்த மைந்தரைத் தங்களது கையாலேயே அறுத்து குர்பானீ செய்யத் துணிவதும், பதினான்கு பதினைந்து வயதினையுடைய இளவல், உலகத்தின் இன்ப துன்பங்களை யுணராமலும், மாதாபிதாக்களின் கோபத்திற் காளாகாமலுமிருக்கிற காலத்தில் தமது தந்தையின் கையாலேயே அறுக்கப்பட்டு இறைவனுக்காகத் தமது இன்னுயிரையும் தியாகம்செய்யத் தயாராகுவதும் எத்தகைய காக்ஷியாக இருந்திருக்கும்? தெய்வ பக்தி என்றால், தெய்வக் கட்டளைக்குக் கீழ்ப்படிவதென்றால் இவ்விருவர்களது பக்தியும் கீழ்ப்படிதலுமல்லவா உண்மைப்பக்தியும் கீழ்ப்படிதலுமாகும். ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் தங்களது மைந்தரைக் குப்புறக் கிடத்தி தங்கள் கூரிய வாளாயுதத்தால் அறுக்கத் தொடங்கினார்கள். ஆனால், எல்லாம்வல்ல இறைவனுக்கு மக்கள் தனக்காக நரபலியிடப்படுவது விரும்பத் தகாததாக இருந்தது. இவ்வித நிலைமையில் உலகோத்தமரான உத்தமத் திருநபியவர்களை உதிக்கச் செய்ய வெண்ணங் கொண்டுள்ள இறைவன் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் பலியாகி விடுவதை விரும்பவில்லை. கூரிய வாளாயுதமானது இறைவன் கட்

டளைப்படி அறுத்தற்ருெழிலைச் செய்யச் சக்தி யற்றதாகிவிட்டது. ஆகவே, ஹஜ்ரத் இப்ரா ஹீம் (அலை.) அவர்கள் எவ்வளவோ முயன்றும் அறுக்க முடியாத தங்களது கூறிய வாளாயுதத் தைப் பக்கத்திலிருந்த பாறையின்மீது ஓங்கிப் பலமாக அடித்தார்கள். இவ்வடியினுல் அக் கற் பாறையும் பிளந்தது. ஆனுல், ஹஜ்ரத் இஸ் மாயீல் (அலை.) அவர்கள் மட்டிலும் அறுபட வில்லை. இறைவனது அருள் சுரந்தது. ஹஜ் ரத் இப்ராஹீம் (அலை.) அவர்களை இறைவன் அழைத்து, "ஏ! இப்ராஹீமே! உமது சொற் பனத்தை மெய்யாக்கினீர்....நிச்சயமாக நாம் இப்படித் தான் நல்லோர்களுக்குக் கூலிகொடுக் கிருேம்" என்பதாக வஹியறிவித்தான். ஹஜ் ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் தும்பையாட் டைக் கொண்டுவந்து குர்பானீ செய்யுமாறு அறிவித்தார்கள். அன்றுமுதல் ஹஜ்ரத் இப் ராஹீம் (அலை.), ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) ஆகிய இரு நபிமார்களின் தெய்வபக்தி, உறுதி, பொறுமை, கீழ்ப்படிதல் ஆகியவை களின் ஞாபகார்த்தமாக உலகில் நரபலி நிறுத் தப்பட்டது.உலகம் முடியுமட்டும் ஜனங்களுக்கு இது எடுத்துக் காட்டாகவும் முன்மாதிரியாக வும் இருக்கும் பொருட்டு குர்பானீ செய்யும் வழக்கம் ஏற்பட்டது. ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்களது கூரியவாளால் அடிக்கப் பட்டுப் பிளந்த கற்பாறையும், ஹஜ்ரத் இஸ்மா யீல் (அலை.) அவர்கள் அறுக்கப்படுவதற்காகக் கிடத்தப்பட்ட இடமும் இன்றுங்கூட லக்ஷக் கணக்கான ஹாஜிகளால் வருடந்தோறும் திரு மக்காவை யடுத்த மீனுவில் தரிசிக்கப்பட்டு வருகின்றன. தவிரவும் ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்களால் கட்டப்பட்ட கஃபாவிற்கு ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் ஊழியம் செய்வதற்காக நியமிக்கப் பட்டார்கள். ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களும் திருமக்காவி லேயே இருந்து கஃபாவிற்கு ஊழியஞ் செய்து கொண்டிருந்தார்கள்.

வேதக்காரர்களுக்கு ஒரு வார்த்தை

யூதர்கள் ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர் களைக் குர்பானீ கொடுக்கப்பட்டவர்கள்என்பதா கக்கூருது ஹஜ்ரத் இஸ்ஹாக் (அலை.) அவர்கள் தாம் குர்பானீ கொடுக்கப்பட்டவர்கள் என்ப தாகக் கூறுகின்றனர். தங்களிடமுள்ள வேதாக மத்திலும் இதனை ஆதரித்த வாக்கியங்களையே எழுதி வைத்திருக்கின்றனர். என்ருலும், உண் மை அவ்வேதாகமத்திலும் இல்லாமலில்லை. ஹஜ்ரத் இஸ்ஹாக் (அலை.) அவர்கள் தாம் அறுக்கப்பட்டவர்கள் என்று பைபிளில் தெளி வாக எழுதப்பட்டிருந்தாலும், அவர் அறுக்கப் படவில்லை என்பதற்குரிய ஆதாரங்களும் அவ் வேதத்திலேயே இருக்கின்றன. அவை வரு மாறு:—

1. "ஆபேலும் தன்மந்தையின் தலையீற்றுகளி லும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சில வற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார்" என்பதாக ஆதியாகமம், அதிகாரம் 4, வசனம் 4-ல் கூறப்பட்டிருக்கிறது.

2. இஸ்ரவேல் புத்திரரில் மனிதரிலும் மிருக ஜீவன்களிலும் முதற் பேருனதெல்லாம் என்னு டையது; நான் எகிப்து தேசத்திலே முதற்பே ருன யாவையும் சங்கரித்த நாளிலே அவைகளை எனக்கென்று பரிசுத்தப்படுத்தி......
என்பதாக எண்ணுகமம், அதிகாரம் 8, வசனம் 17-லும் கூறப்பட்டிருக்கிறது.

3. இரண்டு மனைவிகளையுடைய ஒருவன் ஒருத்தி யின்மேல் விருப்பாயும் மற்றவள்மேல் வெறுப்பா யும் இருக்க, இருவரும் அவனுக்குப் பிள்ளைகளைப் பெற்ருர்களேயாகில், முதற் பிறந்தவன் வெறுக் கப்பட்டவளின் புத்திரனுனுலும்,

தகப்பன் தனக்கு உண்டான ஆஸ்தியை தன் பிள்ளைகளுக்குப் பங்கிடும் நாளில், வெறுக்கப் பட்டவளிடத்தில் பிறந்த முதற்பேருன வனுக் குச் சேஷ்டபுத்திர சுதந்தரத்தைக் கொடுக்க வேண்டுமே யல்லாமல், விரும்பப் பட்டவளிடத் தில் பிறந்தவனுக்குக் கொடுக்கலாகாது.

வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்தவனைச் சேஷ்ட புத்திரனுக அங்கீகரித்து, தனக்கு உண் டான ஆஸ்திகளிலெல்லாம் இரண்டு பங்கை அவ னுக்குக் கொடுக்க வேண்டும்; அவன் தன் தகப் பனுடைய முதற்பலன், சேஷ்டபுத்திர சுதந்தரம் அவனுக்கே உரியது.

என்பதாக உபாகமம் அதிகாரம் 21-ல் 15, 16, 17-வது வசனங்களில் கூறப்பட்டிருக் கிறது.

4. "அக்காலத்திலே கர்த்தருடைய உடன் படிக்கைப் பெட்டியைச் சுமப்பதற்கும், இந்நாள் வரைக்கும் நடந்து வருகிறதுபோல,கர்த்தருடைய சந்நிதியிலே நின்று அவருக்கு ஆராதனை செய்வ தற்கும் அவர் நாமத்தைக் கொண்டு ஆசீர்வதிப்ப தற்கும் கர்த்தர் லேவியின் கோத்திரத்தைப் பிரித்தெடுத்தார்.

ஆகையால், லேவிக்கு அவன் சகோதரரோடே பங்கும் சுதந்தரமும் இல்லை. உன்தேவனுகிய கர்த்

தர் அவனுக்குச் சொன்னபடி, கர்த்தரே அவனுக் குச் சொந்தம்.

என்று ஷை உபாகமம் அதிகாரம் 10, வசனம் 8, 9-ல் கூறப்பட்டிருக்கிறது.

பைபிளிலிருந்துமேலே எடுத்துக் காட்டப்பட்ட இந்நான்கு மேற்கோள்களின் மூலமாக, முதற் பேறுனவைகளையே குர்பானீசெய்வது வழக்க மாக இருந்தது என்பதும், முதலில் பிறந்த குழந்தை விருப்பமில்லாத மனைவியின் வயிற்றி லுதித்திருந்தாலும் அக்குழந்தைக்கு சிரேஷ்ட பாத்தியமும் சுதந்திரமும் நீங்காதென்பதும், அல்லாஹு தஆலாவின் பணிவிடைக்கென ஒப்புவிக்கப்படும் குழந்தைகளுக்கு அவர்களது தந்தையின் சொத்துக்களின் வாரிசுரிமை கிடையாதென்பதும் நன்கு விளங்குகிறது.

மேலும் பைபிளிலுள்ள இதர வசனங்களைக் கவனிக்கும்போது அல்லாஹு தஆலாவிற்காக நேர்ந்து விடப்பட்ட குழந்தைகளின் தலைமுடியை சிரைக்காமல் வைத்திருந்து வணக்க ஸ்தலத்திற்குக் கொண்டுபோய் அங்கு மிருகஜீவன்களைப்பலியிட்டு தலைக்ஷவரம் செய்யவேண்டும் என்பதும் தெரியவருகிறது. அன்றியும், குர்பானீசெய்யும்படி இறைவன் ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்குக் கட்டளையிட்டபோது நேசகுமாரன் என்றும், ஏகசுதன் என்றும் வர்ணித்துக்கூறி இருப்பதிலிருந்து ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் தங்களது ஏகபுத்திரரை குர்பானீ கொடுக்கவேண்டும் என்றே கட்டளை யிடப்பட்டார்களெனவும் தெரிகிறது.

எனவே, இந்த அம்சங்களெல்லாம் ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களிடம் பொருந்தி இருக்கின்றனவா? அல்லது ஹஜ்ரத் இஸ்ஹாக் (அலை.) அவர்களிடம் பொருந்தி யிருக்கின்றவா என்பதைக் கவனிப்போம்.

பைபிள் பழைய ஏற்பாடு, ஆதியாகமம், 16-வது அதிகாரம், 16-வது வசனத்தில் ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் பிறக்கும் போது ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்களுக்கு 86-வயது என்றும், ஷை ஆதியாகமம் 17-வது அதிகாரத்தில் ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்களுக்கு 99-வது வயதில் ஹஜ்ரத் இஸ்ஹாக் (அலை.) அவர்கள் பிறக்கப்போவதாக இறைவனால் நற்செய்தி யறிவிக்கப்பட்ட பொழுது ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் "ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் பிழைத்திருக்க வேண்டும்" என்று இறைவனைப் பிரார்த்தித்ததாகவும் சொல்லப் பட்டிருக்கிறது. இதன் பிரகாரம் ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் தாம் இப்ராஹீம் (அலை.) அவர்களுக்கு ஏகப் புதல்வராகச் சுமார் 15 வருஷங்கள் வரை இருந்தார்கள் என்பதும் நேசகுமாரராக எப்பொழுதுமே இருந்தார்கள் என்பதும் தெரிய வருகிறது.

ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் பீபி ஹாஜரா (ரலி) அவர்களுக்கும், ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களுக்கும் சிலரொட்டித் துண்டுகளையும், ஒரு துருத்தி ஜலத்தையும் மட்டிலும் கொடுத்துப் பிரித்து விட்டதாகவும், பாக்கியுள்ள சகல சொத்துக்களையும் ஹஜ்ரத் இஸ்ஹாக் (அலை.) அவர்களுக்குக் கொடுத்தாதகவும் பைபிளில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி அல்லாஹு தஆலாவின் பணிவிடைகளைச் செய்வதற்கென்று ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களைத்தான் ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் பிரத்தியேகப் படுத்தினர்கள் என்பது தெரியவருகிறது.

ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களது வம்சத்தில் பிறப்பவர்கள் பிறந்தது முதல் ஹஜ்ஜுச் செய்யும்வரை தலைக்ஷவரம் செய்து கொள்ளாமலிருந்து ஹஜ்ஜுச் செய்துவிட்டு குர்பானிகளைக் கொடுத்து தலைக்ஷவரம்செய்து கொள்ளும் வழக்கமிருந்து வந்தது.

ஆகவே, ஹஜ்ரத் இஸ்ஹாக் (அலை.) அவர்கள் தாம் குர்பானீ கொடுக்கப்பட்டவர்கள் என்று வேதக்காரர் கூறுவதை அவர்களிடமுள்ள பழைய வேதாகமங்கள் மறுப்பதுடன் ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்கள் தாம் குர்பானிக்காக அறுக்கப்பட்டவர்கள் என்பதை ஊர்ஜிதம் செய்கின்றன. இவ்விஷயத்தையே திருகுர்ஆனும் தெளிவாகக் கூறுகிறது. ஆகவே, ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களைத்தான் ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் குர்பானீ செய்ய முயன்று பின்னர் கஃபாவின் ஊழியராக நியமித்தார்கள் என்பது மெய்யேயாகும்.

ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களுக்குப் பகரமாய் குர்பானீ அறுக்கப்பட்ட மன்ஹரின் தோற்றம் மிக ஆச்சரியத்தைத் தரத்தக்கதா யிருந்தது. பல்லாயிரக் கணக்கான ஹாஜிகள் இஹ்ராம் உடையோடு ஒருங்கே காணப்பட்டனர். ஆடு, மாடு, ஒட்டகம் கும்பல் கும்பலாகக் காணப்பட்டு குர்பானீ அறுக்கப்பட்டு வந்தது.

ஹஜ்ரத் இஸ்மாயில் (அலை.) அவர்களை குர்பானீ கொடுக்க முடிவு செய்யப்பட்டபோது அல்லாஹுதஆலா அதற்குப் பகரமாக "வலுப்பமான குர்பானியை அளித்துவிட்டோம்" எனச் சொல்லியிருந்தான். அந்த வலுப்பத்தினுடைய தாத்பரியம் இவ்விடம் தத்ரூபமாய்க் காணப்பட்டது. மகாத்மியம் பொருந்திய இந்த தோற்றங்களையெல்லாம் கண்ணுற்று மன மகிழ்ச்சியுடன் வீடு திரும்பி தலை க்ஷவரம் செய்துகொண்டு இஹ்ராமை அவிழ்த்துக் கொண்டோம். லுஹர் தொழுது சாப்பாட்டிற்குப் பின் பஸ்ஸில் பிரயாணமாகி மக்கமாநகரை அடைந்து கஃபத்துல்லாவை "தபாபுஜ்ஜியாரத்" செய்தோம். பிறை ஏழில் (18-2-37-ல்) இஹ்ராம் கட்டிக்கொண்டு தவாப் செய்து ஸபா மர்வா, ஓடிவிட்டபடியால் இன்று ஸபா, மர்வா ஓடவில்லை. திரும்ப மினா வந்துவிட்டோம். இன்றிரவு சற்று மழையும் குளிருமிருந்தது. பிறை 11, 12-ல் முறையே மூன்று ஜம்ராக்களுக்கும் கற்களை எறிந்துவந்தோம்.

மஸ்ஜிதுல்கப்ஷ்

மினாவில் தங்கியிருக்கும் காலை "மஸ்ஜிதுல் கப்ஷ்" அதாவது ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களை குர்பானிக்காக கிடத்தப்பட்ட இடத்தில் கட்டப்பட்டிருந்த மஸ்ஜித். அஃது இதுபொழுது உடைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தை ஜியாரத்துச் செய்தோம். அவ்விடம் ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) தங்கள் குமாரரை குர்பானீ செய்ய முற்பட்டபோது கத்தி அறுக்கவில்லை. பலமுறை ஹஸ்ரத் அவர்கள் முயன்றும் கத்தி அறுக்காததினால் கோபம் மேலிட்டவர்களாய் அந்தக் கத்தியை பாராங் கல்லில் அடித்தபோது அக்கல் இரு பிளவாகப் பிளந்ததாய்ச் சரித்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லைக் கண்ணுற்றோம். இஃது மினாவிலிருந்து மக்காவுக்கு வரும் வழியில் வலதுபாகமாய் கடைசி ஜம்ராவுக்குச் சமீபமாக சற்று உயரத்தில் மலைமீதிருக்கிறது.

"மஸ்ஜிதுல் பைஆ"வின் சிறப்பு

இதன்பின் மக்கா வரும் வழியிலுள்ள "மஸ்ஜிதுல் பைஆ" அதாவது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் மக்காமுஅல்லமாவில் பிரசாரஞ் செய்து குப்பார்களால் இம்சிக்கப்பட்டிருந்தபோது அன்ஸாரிகளில் முக்கியஸ்தர்கள் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களைக்கண்டு மதீனா முனவ்வராவுக்கு வரும்படி அழைத்து உடன்படிக்கை செய்திருந்தார்களல்லவா? அவ்விடத்தில் ஓர் மஸ்ஜிது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அம்மஸ்ஜித் ரஸ்தாவிலிருந்து சற்று ஒதுக்கமாயிருக்கிறது. அவ்விடம் சென்று அதனையும் கண்டு தரிசித்தோம்.

மஸ்ஜிதுல் கைப், மஸ்ஜிதுல் கவ்தர்

இதுவன்றி மினாவிலுள்ள மஸ்ஜிதுல் கைப், மஸ்ஜிதுல் கவ்தர் இவைகளெல்லாம் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் தொழுகையை நிறைவேற்றிய மஸ்ஜிதுகளாகையால் அவ்விடங்களுக்கும் சென்று தொழுகையை நிறைவேற்றி வந்தோம். அறபா தினத்தன்று காலையில் சற்று குளிர் இருந்தது. அதன்பின் வெய்யில் காட்டிற்று. பிறகு மாலை வரை மப்பாகவே யிருந்தது. சுருங்கக் கூறுமிடத்து அன்று தினம் ஹாஜிகளுக்கு பெருத்த சௌகரியமாகவேயிருந்தது.

மத்ராஸி முதவ்விப் அஜாக்கிரதைக்கு தாக்கீது.

நம் தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த ஹாஜிகளில் சிலர் 'முதவ்விப்கள், நடக்கும் அஜாக்கிரதை, அவர்களால் ஏற்படும் தொந்திரவு முதலிய விஷயங்களை எங்கள் காபிலா ஸாலார் அல் ஹாஜ் ஜே.எம். முஹம்மது இஸ்மாயீல் ருவுத்தர் அவர்களிடம் தெரிவித்துக் கொண்டார்கள். உடனே ஸாலார் அவர்கள் காபிலாவின் உலமாக்களுடன் மத்ராஸிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதிக்குச் சென்றார்கள். அந்த இடம் நான்குபுறங்களிலும் சுவர் வைக்கப்பட்டு ஹாஜிகளுக்காக டேராக்கள் அடிக்கப்பட்டிருக்கிறது. முதவ்விப் அதன்மத்தியில் டேரா அடித்துக்கொண்டிருக்கிறார். அவ்விடம் ஸாலார் அவர்கள் ஹாஜிகளையும் முதவ்விபையும் விசாரித்து அதுவரை நடைபெற்ற குறைகளைத் தெரிந்து முக்கியமில்லாத விஷயங்களை யெல்லாம் தள்ளிவிட்டு முக்கியாம்சங்களில் குறைவு ஏற்படாதவாறு நடந்துவரும்படி முதவ்விபுக்கு எச்சரிக்கை செய்தார்கள்.

மினாவில் தங்கயிருக்கும்போது முதல் நாள் கடைசி ஜம்ராவுக்கு நடுநிசிக்குமுன் கல் எறிய வேண்டும். இரண்டாம் நாளும் மூன்றும் நாளும் நடு நசிக்குப்பின் ஒவ்வொரு ஜம்ருவுக்கும் கல் எறியவேண்டும். கல் ஒரு மொச்சக்கொட்டைப் பிரமாண மிருக்கவேண்டும். ஜம்ராவுக்கு 4, 5 அடி தூரத்தில் நின்றுகொண்டு அங்கு நடப்பட்டிருக்கும் தூணை அடிக்காமல் அதற்குச்

சூழால் கட்டப்பட்டிருக்கும் சுவற்றிற்குள் ஏழுகல்லே போட்டுவிடவேண்டும்.

நாங்கள் இந்த முறையில் மூன்றும் நாள் கல்லெறிந்துவிட்டு பகல் சாப்பாட்டிற்குப்பின் மக்கமா நகரை நோக்கிப் புறப்பட்டோம். ஏற்கனவே நாங்கள் மினுவுக்கு பிரயாணித்து வந்த பஸ் எங்களுடனேயேயிருந்தது. மாலை 5-மணிக்கு மக்கா முஅல்லமா வந்தடைந்தோம்.

அப்துல்லா ஷைபியின் தாவத்து

மக்காவில் தங்கியிருந்த தினங்களில் நமது காபிலாவினர் அஹ்லஷைபியாக்களின் அனுமதி பெற்று கஃபத்துல்லாவினினுட்சென்று தொழுகையை நிறைவேற்றி பிரார்த்தனையும் புரிந்தார்கள். கஃபத்துல்லாஹ்வின் சாவி வைத்திருக்கும் ஸையித் அப்துல்லா ஷைபி அவர்கள் நம் காபிலா ஸாலார் சாஹிப் அவர்களுக்கும் நம் காபிலாவின் சிலருக்கும் ஓர் தாஃவத்து நடத்தினார்கள். விருந்தருந்தியபின் ஸாலார் சாஹிப் அவர்களால் ஷைபி அவர்களுக்கு சன்மானமளிக்கப்பட்டது.

ஹஜ்ஜுக்குப்பின் மக்கா முஅல்லமாவில் தங்கியிருந்த 12-நாட்களிலும் ஒவ்வொருவருக்கும் சாவகாசமிருக்குந்தோறெல்லாம்ஹறமுக்கு வெளியிலுள்ள தன்ஈமுக்கு வாகனங்களில் சென்று மஸ்ஜிதெ ஆயிஷா வில் இஹ்றாம் கட்டிவந்து உம்ருவை நிறைவேற்றி வந்தோம்; இராக்காலங்களில் அநேக முறை கஃபாஷரீபைச் தவாப்செய்து வந்தோம். இவ்வாறு மக்காவில் தங்கியிருந்த தினங்களை சந்தோஷகரமாக கழித்துக் கொண்டிருந்தோம்.

ஜுபைதா கால்வாய்

கலீபா ஹாரூன்றஷீத் அவர்களது இல்லாள் ஜுபைதா காத்தூன் என்னும்மாது பல்லாயிரக்கணக்கான பவுன்களைச் செலவிட்டு மக்காவிற்கருகாமையில் ஓர் கால்வாய் தயாரித்திருக்கிறார். அது இன்றைவரை நல்லவிதமாகவே யிருக்கிறது. அதன் அமைப்பு சிலாக்கிக்கத்தக்க விதமாக யிருக்கிறது. 'ஹுனைன்' பக்கலிலிருந்து வருகிறது. அறபா மைதானம், மினு, மக்கா முல்லமா இந்த இடங்களுக்குத் தேவையான தண்ணீர் அதிலிருந்து கிடைக்கிறது. சில கால் இடையில் கோளாறு ஏற்படின் தண்ணீர் கம்மியாய்விடுகிறது. உடனே பழுதுபார்க்கப்படின் சரிப்பட்டுப்போகிறது. அடிக்கடி அதன்பூமி கட்டிடம் இவைகள் பழுதுபார்க்கப்பட்டே வருகிறது. அந்த இடங்களில் சிணறுகள் அறிதாகவிருப்பதால் இந்த கால்வாய்மூலம் பெரும் பிரயோசன மேற்படுகிறது. பல நூற்றுண்டுகளாய் லக்ஷக்கணக்கான ஹாஜிகள் அத்தண்ணீரை உபயோகித்து வருகின்றனர். இந்த''ஹஸனுத்துல் ஜாரியா''வென்னும் தர்மத்தால் அம்மாதுக்கு என்ன புண்ணியம் கிடைக்குமென யூகித்துப் பாருங்கள். எத்தனையோ அல்லாஹ்வின்நல்லடியார்கள் அம்மாதுசிரோன்மணியின் ஹக்கில்துஆச் செய்கிறார்கள். இன்றுகூட பக்தாத்ஷரீபில் அம்மாதின் கபரண்டை பல்லோர் கூடியிருந்து அன்போடு பாத்திஹா ஓதிச் செல்கின்றனர். மக்காவின் நானுபாகங்களிலுமுள்ள கிணறுகளில் அத்தண்ணீர் வந்து நிற்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கூலிக்காரர்கள் இறைத்துவந்து ஹஜ்ஜுடைய காலங்களில் இரண்டு டின் ஒருஅணு வீதம் கொடுக்கின்றனர். சற்று பள்ளமாக யிருக்கு மிடங்களிலெல்லாம் பைப் வைக்கப்பட்டு எல்லோரும் சாதாரணமாக அதிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்கின்றனர். மலையிலிருந்து ஊற்றுக்கண் மூலம் வரும் தண்ணீராகையால் இன்பமாகவே யிருக்கிறது. மக்கள் அந்தண்ணீரை வாங்கி நல்ல விதமாய் உபயோகித்துக் கொள்கின்றனர்.

ஹஜ்ஜின் கிரியைகளைப்பற்றிய சில விஷயங்கள்

ஹஜ்ஜில் நிறைவேற்றப்படும் சில கிரியைகள் இதுபொழுது இதர மதவாதிகளிற் சிலர் தங்கள் ஆலயங்களில் செய்யும் சில கிரியைகளுக்கு ஒத்தனவேபோல் தோன்றுவதால் முஸ்லிம்கள் அப்பிரமதத்திலிருந்து தங்கள் கிரியைகளைக் காப்பியடித்துக் கொண்டனரென்று இஸ்லாத்தின் விரோதிகள் கூறுவதாகத் தெரிகிறது. அவர்களுடைய கூற்று தவறு என்பது அடியிற்கண்ட விவரங்களிலிருந்து நன்கு தெரியவரும்.

இஸ்லாம் மதம் விக்கிரகத் தொழும்பர்களது கிரியைகளையோ வேறு மதத்தவர்களது கிரியைகளையோ காப்பி யடிக்கவில்லை. ஒரு சமயம் விக்கிரத்தொழும்பர்கள் இஸ்லாம் மதத்தின் கிரியைகளைத் காப்பியடித்து தங்கள் விக்கிரகங்களுக்கு அவைகளை வணக்கமாக ஏற்படுத்தி இருத்தல் கூடும். ஏனெனில் இந்த ஹஜ்ஜானது இன்று நேற்று ஏற்பட்டதன்று. கஃபா

என்ற ஆலயம் ஏற்பட்டகாலம் முதல் இது நிகழ்ந்து வருகிறது. ஹஜ்றத் ஆதம் (அலை.) அவர்கள் 40 முறை இந்தியாவிலிருந்து நடந்து சென்று ஹஜ்ஜுச் செய்திருப்பதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. எனவே, இக்கிரியைகள், உலகிற்றோன்றியமுதல் மனிதரும் முதல் நபியுமாகிய ஹஜ்றத் ஆதம் (அலை.) அவர்களுக்கு இறைவனால் கற்பிக்கப்பட்டிருப்பதால் இக்கிரியைகைகள் ஆரம்பத்திலேயே ஏற்பட்டதென்பது நன்கு தெரிகிறது.

தவிரவும், கஃபா ஷரீபைத் திரும்பவும் அதன் அஸ்திவாரத்திருந்து ஹஜ்றத் இப்ராஹீம், இஸ்மாயீல் அலைஹி மஸ்ஸலாம் ஆகிய இரு நபிமார்களும் எடுத்துக் கட்டி முடித்த போது "எங்களது றப்பே! எங்களது மனாஸிக்கு (நாங்கள் ஹஜ்ஜை நிறைவேற்றும் முறை)களை எங்களுக்குக் காண்பித்துக் கொடுப்பாயாக" என்பதாகப் பிரார்த்தித்த விபரமும் ஜனங்களை ஹஜ்ஜுக்கு அழைக்கும்படியாக ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களுக்கு இறைவன் கட்டளையிட்ட விபரமும் திருகுர்ஆனில் வருகிறது. ஆகவே, ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் தங்களுக்கு இறைவன் அறிவித்துக்கொடுத்த பிரகாரமே ஜனங்களுக்கு ஹஜ்ஜுக் கிரியைகளைச்செய்து காண்பித்திருக்கிறார்கள். பின்னர், இடைக்காலத்தில் தவறான மதக்காரர்களது தலையீட்டால் அக்கிரியைகளில் மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. அதனை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திரும்பவும் அதன் அசல் முறையில் இறைவன் கட்டளைப்படி ஏற்படுத்தினார்கள். ஆதலின் விக்கிரகத்தொழும்பர்களையோ பிறரையோ பார்த்து நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஜ்ஜுக் கிரியைகளை ஏற்படுத்தவில்லை என்பதும், எல்லாம்வல்ல இறைவன் கட்டளைப்படி இவைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன வென்பதும் சந்தேகத்திற்குங்கூட இடமில்லாதவாறு தெளிவான விஷயம். இறைவனிட்ட கட்டளையை ஆக்ஷேபிக்கவோ, அவ்வாக்ஷேபனைக்கு த்க்க சமாதானம் கூறவோ மனிதர்அருகதையற்றவர். அல்லாமலும் அல்லாஹுதஆலா அடியார்களுக்கு ஏவும் கட்டளைகளுக்கு அவன் காரணம் கூறிக்கொண்டிருக்கக் கடமைப்பட்டவனுமல்லன். என்றாலும் ஒரு சிறு விஷயத்தை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.

'லைலாமஜ்னூன்' என்ற இருவரைப்பற்றிய கதையைக் கீழ் நாட்டிலுள்ளவர்கள் அறியாமலிருக்க மாட்டார்கள். மஜ்னூன் என்பவன் லைலாவின்மீது கொண்டுள்ள அன்பினாலும் காதலினாலும் அவளது நாயையும்கூட முத்தமிட்டான் என்பதாகவும், அவள் வசித்துவந்த இல்லத்தின் சுவர்களையும்கூட முத்தமிட்டுக் கொண்டு அலைந்தான் என்பதாகவும், அவன் அந்தச் சுவர்களின்பாலுள்ள சந்தோஷத்திற்காகவோ அன்பிற்காகவோ அவைகளை முத்தமிடவில்லை; அவ்வீட்டில் வசித்துவந்த ஒருத்தியின்மீதுள்ள காதலுக்காகவே அவைகளை முத்தமிட்டான் என்றும் சொல்லப்படுகிறது. அல்லாமலும், இவ்விதமாகச் செய்வது லைலாமஜ்னூன் கதையில் மட்டுமல்ல, உலகின் பல பாகங்களிலும் காதலர்கள் தங்களது காதலைப் பலவிதமாக வெளியிட்டு வருவதும் உலகிற்குத் தெரியாத விஷயமன்று.

நமது நபிகள் நாதர் (ஸல்.) அவர்களது பாட்டனாரான ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் "கலீலுல்லாஹ்" என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்கள். அல்லாஹுதஆலாவினது திருப்தியை அடையும்பொருட்டு பிறந்த நாட்டையும், உற்றார் உறவினரையும்விட்டு வெளியேறியவர்கள். தங்களுடைய பிரிய மனைவியையும், நேச குமாரரையும் விவசாயத்திற்குத் தகுதியில்லாத வரண்ட வனாந்தரத்தில் விட்டவர்கள், இறுதியாக ஏகப் புதல்வராக இருந்த தங்களது அருமைக் குழந்தை ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களையும் தங்களது கரங்களால் அறுத்துக் குர்பானீ செய்ய முற்பட்டவர்கள். இவ்விதமாக இறைவன்பால் குன்றாத காதல் கொண்ட ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் அவனது கட்டளைப்படி கஃபாவைக் கட்டி முடித்தபோது அவனது கட்டளையை நிறைவேற்றிவிட்டோம் என்ற சந்தோஷத்தால் ஆனந்தங்கொண்டு அவனது பெயரால் "தேவாலயம்" என்றழைக்கப்படுகிற அவ் வாலயத்தைச் சுற்றி வந்திருக்கவும், அதிலுள்ள ஹஜ்றுல் அஸ்வதை முத்திசெய்திருக்கவும், முல்தஜமைத் தொட்டுப் பார்த்திருக்கவும் கூடும். தன்பால் காதல்கொண்ட தனது தூதர்செய்த இக் காரியங்கள் ஆண்டவனுக்கும் திருப்தியளித்து "எங்களது மனாஸிக்குகளை எங்களுக்குக் காண்பித்துக் கொடுப்பாயாக" என்று தன்னிடம் அவர் பிரார்த்தனை செய்தபோது அவர் செய்த காரியங்களையே இறைவன் ஊர்ஜிதம்செய்து அவைகளை மனாஸிக்குகளாக ஏற்படுத்தி இருக்கவும் கூடும்.

பேரின்பத்துறையிலீடுபட்ட ஞானவான்கள் பேரின்ப சம்பந்தமான செய்யுள்களை மிகவும் அழகிய முறையில் நல்ல சாரீரத்துடன் பாடக் கேட்கும்போது மெய்மறந்து தலையை ஆட்டுவதையும், குதிப்பதையும், கூத்தாடுவதையும், சட்டைகளைக் கிழித்துக் கொள்வதையும், ஸ்மரணையற்றுப் போவதையும் நம்மவர் நேரில் பார்ப்பது அருமையாக இருந்தாலும் கேள்விப் பட்டேனுமிருப்பர். சாமான்ய மனிதர்களது நிலைமை இவ்வாறிருக்கும்போது நபியாகத் தோன்றி "கலீல்" என்ற பட்டத்தையும் பெற்ற மெஞ்ஞானியாம் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் அவ்வல்லோனை வணங்குவதற்கெனக் கட்டப்பட்ட தேவாலயத்தை வலம் வருவதும், அவர்கள் செய்த அக்காரியம் உலகிற்கு நாகரீகமற்ற காரியமாகத் தோன்றுதிருப்பதும் ஆச்சரியமாகுமோ?

அல்லாஹு தஆலாவை ஈமான் கொள்வதானது இருதய சம்பந்தமுள்ளது. அதனைப் புறக்கண்களால் பார்க்க முடியாது. ஆனால், வெளியில் அதனை நாவாலுரைக்கும்போது மற்றவர்கள் உணர்ந்துகொள்வதுபோல அல்லாஹு தஆலாவின்பால் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் கொண்டுள்ள அன்பானது தவாபின்மூலமாக வெளியில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பைத்துல்லாவை முஸ்லிம்கள் தவாபுசெய்வதானது பைத்துல்லாவை வணங்கவேண்டும் என்பதையோ அல்லது அதற்கு மரியாதை செய்ய வேண்டுமென்பதையோ அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. ஆனால், விக்கிரகத் தொழும்பர்கள் தங்களது சில கோவில்களை அல்லது விக்கிரகங்களைச் சுற்றிலும் வலம்வருவதானது அவைகளை வணங்குவதையும் மரியாதை செய்வதையும், அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. ஆதலின், முஸ்லிம்கள் கஃபத்துல்லாவை தவாபு செய்வதும், விக்கிரகத் தொழும்பர்கள் விக்கிரகங்களை அல்லது கோவில்களை வலம் வருவதும் ஒன்றாக மாட்டாது. இவ்விதமாகவே ஹஜ்ஜு சம்பந்தமான இதர கிரியைகளுமிருப்பதால் பிரமதத்ததாரின் செய்கைகளைப் பின்பற்றி ஹஜ்ஜுடைய கிரியைகள் நடைபெற்று வருவதாக நினைப்பதும் கூறுவதும் சுத்தத் தவறாகும்.

மதீனா முனவ்வரா பிரயாணம்

கஃபத்துல்லாஹ் ஷரீபை கடைசியாக "தவாப்விதாஉ" செய்துகொண்டு எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மும்தாஜ் லாரியில் 5-3-37 வெள்ளிக்கிழமை அசர் தொழுகைக்குப்பின் பிரயாணமானோம். இரவு 8 மணிக்கு ஜித்தாவந்துசேர்ந்து வக்கில் பஸூனி வீட்டில் அவ்விரவு தங்கி மதீனாவிற்கு தேவையான சாமான்களை மட்டும் எடுத்துக்கொண்டு பாக்கி சாமான்களையெல்லாம் இவ்விடம் வைத்துவிட்டு 6ந் தேதி காலை 9 மணிக்கு மதீனா பிரயாணமானோம். 11 மணிக்கு "தஹ்பான்" மன்ஜிலை அடைந்து சற்று களைப்பாறினோம். அங்கு ருசிகரமான குமுட்டிப் பழங்கள் கிடைத்தன. அங்கிருந்து பிரயாணமாகி $2\frac{1}{2}$ மணிக்கு "ராபக்" மன்ஜிலை அடைந்தோம். அங்கு நல்ல மீன்கள் கிடைத்தன. வாங்கி சாப்பாடு தயாரித்து பசியாறி களைப்பாறினோம். அவ்விடத்திலேயே ளுஹர், அஸர், மக்ரிப் தொழுகைகளை நிறைவேற்றிக் கொண்டு $6\frac{1}{2}$ மணிக்கு அவ்விட மிருந்து பிரயாணமாகி இரவு 11 மணிக்கு "அப்யார் பின்ஹஸ்லான்" மன்ஜிலை அடைந்தோம். இரவில் அவ்விடம் துயில் புரிந்துவிட்டு 7ந்தேதி பஜர் தொழுகைக்குப்பின் அவ்விடமிருந்து பிரயாணமாகி $8\frac{1}{2}$ மணிக்கு "மஸைஜிதி" என்ற மன்ஜிலை அடைந்து காலை போஜனமருந்தி சற்று களைப்பாறிவிட்டு 11 மணிக்கு அவ்விடமிருந்து பிரயாணமானோம். 7-ந்தேதி பகல் 1 மணிக்கு மதீனா முனவ்வராவிலுள்ள 'ரவ்லா ஷரீபின்' சின்னங்கள் தோன்றின.

மதீனாவின் தோற்றம்

இம்மாண்பு மிக்க பட்டணம் உலக தயாளர் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் வாழ்க்கை புரிந்ததுவும் செங்கோல் அரசு செலுத்தியவும் இன்னும் 'ஹயாத்துன்நபி' அவர்கள் துயில் புரியும்படியுமான மகா பரிசுத்த இடமாகும். இப்பட்டணத்தின் சின்னங்கள் தென்பட்டவுடன் எங்களுக்கேற்பட்ட நிலையை இவ்வெழுதுகோலினால் எல்லையிட்டு விட முடியாது. எல்லோரும் நபி பெருமானார் (ஸல்.) அவர்களுடைய ஸீறையும் சிறப்பையும் மகாத்மியத்தையும் நினைத்து நினைத்து ஆனந்தக் கண்ணீர் வடித்தோம். ஸலாத்தையும் ஸலாமையும் ஓதினோம். புகழ்பாக்களையும் பாடினோம். திருநபி (ஸல்.) அவர்கள் அவதரிக்காவிடின் வானுமில்லை, பூமியுமில்லை, மனுவுமில்லை, ஜின்னுமில்லை, நேர் வழியும் இன்னதென்று துலக்கப்படப்போவதில்லை, நபி பெருமானார் (ஸல்.) அவர்

கள் தான் கஃபத்துல்லாவை ஹஜ்ஜுச் செய்வதற்கு லாயக்கானதாக ஆக்கினார்கள். அவர்கள் மூலமாகத் தான் நமக்கு இந்த ஹஜ்ஜின் பாக்கியம் கிடைத்தது. இம்முறையில் நபி பெருமானார் (ஸல்.) அவர்கட்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். இவைகளை யெல்லாம் யுன்னி யுன்னி எங்களது ஹிருதயங்களில் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் அன்பு ததும்ப மதீனா முனவ்வரா பட்டணத்தினுள் “பாபுல் அம்பரியா” வழியாக பிரவேசித்தோம். இது துருக்கியர்கள் ஏற்படுத்திய ஹிஜாஸ் ரைல்வே ஸ்டேஷனுக்கு சமீபத்திலிருக்கிறது. இவ்விடத்தில் முஅல்லிம்களின் ஏஜண்டுகள் நிற்கின்றார்கள். நாங்கள் ஏறிச் சென்ற லாரிகள் மதீனாவின் முஅல்லிம் சையித் அப்துல்லாஹ் பாபகீஹ் அவர்களது வீட்டுக்குச் சமீபம் சென்றன. சாமான்களை யெல்லாம் அங்கு இறக்கி வைத்து நாங்களும் குளித்து லுஹர் தொழுகையை நிறைவேற்றிவிட்டு உணவருந்தினோம். பின்னர் ரவ்லா ஷரீபை நோக்கிப் புறப்பட்டோம்.

“ரவ்லா ஷரீப்” தரிசனம்

முதவ்விபின் வீட்டிலிருந்து புறப்பட்டு “பாபுஸ் ஸலாம்” வழியாக மஸ்ஜித் நபவிய்யில் பிரவேசித்தோம். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் “என் வீட்டிற்கும் எனது மிம்பருக்கும் மத்தியில் சுவர்க்கத்தின் பூங்காவனத்தின் ஒரு துண்டுள்ளது” என அருள் செய்திருக்கிறார்கள். அவ்விடத்திற்குச் சென்று மஸ்ஜிதின் காணிக்கையான “தஹிய்யத்துல் மஸ்ஜித்” இரண்டு ரக்கஅத்து தொழுகையை நிறைவேற்றிக்கொண்டு அஸர் தொழுகைக்குப் பின்னால் எம்பெருமானார் சத்திய தூதர் (ஸல்.) அவர்கள் துயில் புரியும் ஆனந்த மாளிகைமுன் சென்று ஸலாம் ஸலவாத்துக் காணிக்கைகளைச் சமர்ப்பித்தோம்.

குலபாக்கள் ஜியாரத்து

அதன்பின் ஸித்தீக அக்பர், உமர்பாரூக் (ரலி.) இவர்கள்மீதும் ஸலாத்தை எத்திவைத்து கிப்லாவை முன்னோக்கி பிரார்த்தனை புரிந்துகொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தவர்களாய் கிடைப்பதற்கரிய இம்மாபெரும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்ததை யுன்னி அல்லாஹ்வுக்கும் அவனது ரசூலுக்கும் ஷுக்ரிய்யா வென்னும் நன்றியறிதலை சமர்ப்பித்தவர்களாய் ரௌலாவிலமர்ந்து மக்ரிப் தொழுகையை நிறைவேற்றினோம்.

மறுபடியும் ஜியாரத்துச் செய்துகொண்டு முதவ்விப் வீடு திரும்பிவந்து இரவு போஜனமருந்திவிட்டு இஷா தொழுகைக்குப்பின் துயில் புரிந்தோம்.

மறுநாள் 8-ந் தேதி காலையில் தங்குவதற்காக இடவசதிகளை கவனித்து ரௌலாவுக்குச் சமீபமாய் “பாபுல் மஜீதி” பக்கல் அப்துல்லா பஸ்ராவீ என்பவருடைய வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அங்கு தங்கினோம். அவ்வீடு வசதியானதாயும் பின்புறம் புளக்கத்துக்கு சௌகரியமானதாயு மிருந்தது. ஒவ்வொரு நேரங்களிலும் தொழுகைக்குச் சென்று தொழுகை முடிந்தவுடன் ஜியாரத்துச் செய்துகொண்டு வந்தோம்.

மஸ்ஜிதுந்நபவீ

மஸ்ஜிதுந்நபவீயின் தற்போதைய நிலைமையைக் கூறுமுன் அது எப்பொழுது யாரால் கட்டப்பட்டது, பின்னர் அதில் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டன என்ற விபரத்தைச் சுருக்கமாகக் கூறுவது அவசியமாகும். சரித்திரப் புத்தகங்களில் இதனைப்பற்றி மிக விரிவாக எழுதப்பட்டிருப்பதால் அவைகளை எல்லாம் ஒன்று திரட்டிக் கூறுவதாயின் அதுவே தனிப் புத்தகமாகிவிடும். ஆதலின், சில முக்கியமான மாறுதல்களைப்பற்றி மட்டிலும் இங்கு கூறப்படுகிறது.

எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்.)அவர்கள் மக்காவை ஹிஜ்றத்துச் செய்து மதீனாமுனவ்வராவிற் பிரவேசித்தபோது ஆங்குள்ள முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் விருந்தினராகத் தங்கள் இல்லங்களில் தங்கவேண்டுமென்று விரும்பினர். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களது ஒட்டகை எந்த இடத்தில் நிற்கின்றதோ அங்கு இறங்குவதாய்க் கூறிவிட்டார்கள். இதுபொழுது மஸ்ஜிது நபவி இருக்குமிடம் அக்காலத்தில் மைதானமாக இருந்தது. அந்த இடத்தில் அவ்வொட்டகை வந்ததும் தானாகப் படுத்துக்கொண்டது. ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்மதீனா முனவ்வராவில் முதல் முதலாக அந்த இடத்தில்தான் அடி வைத்தார்கள். அந்த இடத்திற்குப் பக்கத்தில் மிகவும் சமீபத்திலிருந்த ஹஜ்றத் அபூஅய்யூப் அன்ஸாரீ (ரலி.) அவர்களது கிரகத்தில் தங்கிக்கொண்டு அந்தக் காலி

மனையைக் கிரயத்திற்கு வாங்கி அதில் மஸ்ஜிது கட்டினார்கள். அந்த மஸ்ஜிதுதான் இன்று "மஸ்ஜிதுந்நபவீ" என்ற பெயரால் பிரசித்தி பெற்றிருக்கிறது. இந்த நிலத்தின் கிரயத் தொகையை ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்கள் கொடுத்தார்கள். இங்கு மஸ்ஜிதும், நாயகம் (ஸல்.) அவர்களுக்கு விடுதிகளும் மிகச் சீக்கிரத்தில் தயாராயின. நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்விடுதிகளில் நிரந்தரமாக வசிக்க வாரம்பித்தார்கள். பின்னர், சஹாக்களின் எண்ணிக்கை அதிகமாய் விட்டதால் மஸ்ஜிதை விசாலப்படுத்த வேண்டிய அவசியமேற்பட்டது. அதுபோழ்து ஹஜ்றத் உதுமான் (றலி.) அவர்கள் 10 ஆயிரம் தங்க நாணயங்கள் கொடுத்து அக்கம்பக்கத்திலுள்ள மனைகளை விலைக்கு வாங்கிக் கொடுத்தார்கள். பின்னர், கைபர் யுத்தத்திற்குப்பின் ஷெ மஸ்ஜிதின் மேற்குப் பக்கம் இன்னும் அதிகமாக விஸ்தரிக்கப்பட்டது. பின்னர், ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) உதுமான் கனீ (றலி.) ஆகியவர்கள் தங்களது கிலாபத் ஆட்சி காலத்தில் மஸ்ஜிதை இன்னும் அதிகமாக விசாலமாக்கினார்கள். பிறகு ஹஜ்றத் அப்பாஸ் (றலி.) அவர்கள் தங்களது வாசஸ்தலத்தை மஸ்ஜிதுக்கு இனாமாக அளித்தார்கள். ஹஜ்றத் ஜஃபரதையார் (றலி.) அவர்களது வீடு கிரயத்திற்கு வாங்கப்பட்டது. இவ் விரண்டு மனை இடங்களும் மஸ்ஜிதின் ஹறமுக்குள் அக்காலத்திலேயே சேர்க்கப்பட்டன. பின்னர் அவ்வக்காலத்தில் மஸ்ஜிதுந்நபவீ புதுப்பித்துக் கட்டப்பட்டு இறுதியாக துருக்கி சுல்த்தான் அப்துல்மஜீதுகான் காலத்தில் ஹிஜ்ரீ 1277-ம் வருஷத்தில் தற்போதிருக்கிற மஸ்ஜிது கட்டி முடிக்கப்பட்டது.

தற்போதிருக்கிற மஸ்ஜிதுந்நபவீ மிகவும் விசாலமான நல்ல வேலைப்பாடமைந்த அழகிய கட்டிடம். இதில் கிட்டத்தட்ட முக்கால் பாகம் கட்டிடமாகவும் கால்பாகம் முகடில்லாத திறந்த வெளியாகவு மிருக்கிறது. ஸஹனின் மூன்று பக்கங்களிலும் மேல்தளம்போட்டு வேலைப்பாடுடையதாக விருக்கிறது. மஸ்ஜிது நபவிக்குள் செல்வதற்கு 5 தலை வாசல்களிருக்கின்றன. மேற்குப் பக்கத்தில் "பாபுஸ் ஸலாம்" "பாபுர் ரஹ்மத்" என்ற இரண்டு தலை வாசல்களும், கிழக்குப் பக்கத்தில் "பாபுஜிப்ரயீல்," "பாபுன்னிஸா" என்ற இரண்டு தலை வாசல்களும், வடக்குப் பக்கத்தில் "பாபுல் மஜீதி" யும் இருக்கிறது. தெற்குப் பக்கம் கிப்லா யிருக்கிறது. இதன் எல்லைக்குள் சுற்றிலும் உயரமான ஐந்து மினாராக்களிருக்கின்றன. மஸ்ஜிதுக்குள் உள்ள தூண்களிலும், மிஹ்ராபுகளிலும், தலைவாசல்களிலும், சுவர்களிலும் தங்கப்பூவேலைகள் செய்யப்பட்டுத் தங்க நீராலேயே அல்லாஹ்வின் திருநாமங்கள், ரஸூலுல்லாஹ் உடைய திருநாமங்கள், திரு குர்ஆன் ஆயத்துகள், பைத்துகள் அழகாக நிகரற்ற வண்ணமாய் எழுதப்பட்டிருக்கின்றன.

மஸ்ஜிதுக்குள் கிழக்குப் பக்கத்தில் தென்பாரிசம் கொஞ்சம் விலகி "ரௌலாஷரீபு" இருக்கிறது. இதற்குள் தெற்குபாகத்தில் ஹுஜூர் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களது மஜார் மேற்கில் தலைமாடும், கிழக்கில் கால்மாடுமாக, முகம் தெற்கே திரும்பி கஃபாவை முன்னோக்கியு மிருக்கிறது. இதனை யடுத்து பின்பக்கமாக ஹஜ்றத் அபூபக்பர் ஸித்தீக் (றலி.) அவர்களும், அதனை யடுத்து ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்களும் அடக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது தோள் புஜத்திற்கு நேராக ஹஜ்ரத் ஸித்திகே அக்பர் (றலி.) அவர்களது தலையும், ஹஜ்றத் ஸித்தீக்கே அக்பர் (றலி.) அவர்களது தோள்புஜத்திற்கு நேராக ஹஜ்றத் பாறூக்கே அஃஜம் (றலி.) அவர்களது தலையும் இருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் துயில்புரியும்படியான முபாரக்கான ஹுஜ்ராவானது ஆரம்பத்தில் சுடாத செங்கல்லினால் கட்டப்பட்டிருந்தது. பின்னர் ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் தங்களது கிலாபத் ஆட்சி காலத்தில் புதிதாகச் சுவர்களெழுப்பிக் கெட்டிக் கட்டிடமாக்கினார்கள். பின்னர் இது பழுதாகி விட்டபோது உமறுப்னு அப்துல் அஜீஸ் (றஹ்.) அவர்கள் கலீபாவாக இருந்தபோது வெட்டுக் கற்களால் பலமான சுவர்கள் எழுப்பினார்கள். அதுபொழுது இந்த ஹுஜ்ராவின் அகலம் குறைவாகவும் நீளம் அதிகமாகவு மிருந்ததால் கிழக்குப் பக்கத்தில் அகலத்தை அதிகப்படுத்தி சதுரமாக ஆக்கப்பட்டது. இதன் நான்கு மூலைகளிலும் நான்கு தூண்களிருக்கின்றன. அதற்கு தலைவாய் கிடையாது. மேல் முகடு மட்டிலும் இரண்டொருமுறை திருத்தி அமைக்கப்பட்டது.

முபாரக்கான ஹுஜ்ராவின் நான்கு பக்கங்களிலும் நன்கு ஆழமாகத் தோண்டப்பட்டு ஈயத்தைக் காய்ச்சி நிறப்பப்பட்டிருக்கிறது. இதனை ஹுஜ்ரா ஷரீபின் பூமிக்குள் உள்ள

அரண் என்று சொல்லலாம். இதற்கப்பால் கொஞ்சம் இடம்விட்டு நான்கு பக்கங்களிலும் உயரமான கெட்டிச்சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. இந்தச் சுவர்கள் நாயகம் (ஸல்.) அவர்களும் இருதோழர்களும் துயில்புரியும் முபாரக்கான ஹுஜ்ராவை முற்றிலும் மறைத்து விடுகிறது. உள்ளேயுள்ள எந்த வஸ்துவும் வெளியில் தெரியாது. இந்தச் சுவர்களிலும்கூட தலை வாசல்களில்லை. வடக்குப் பக்கத்திலுள்ள சுவர் மூன்று மூலைகளாக ஆக்கப்பட்டிருப்பதால் ரௌலா ஷரீபின் நான்கு சுவர்களும் ஐந்து மூலைகளுள்ளனவா யிருக்கின்றன. இந்தச் சுவர்களின் மேலிலிருந்து கீழ்வரைக்கும் பச்சைப் பட்டினால் பர்தா போடப்பட்டிருக்கிறது. இந்த பர்தா முழுவதிலும் ஒவ்வொரு சதுர அடியிலும் கலிமாஷரீபுள்ள எழுத்துக்களும் ஸலவாத்தும் பின்னப்பட்டிருக்கின்றன. துருக்கி சுல்த்தான்கள் ஒவ்வொருவரும் பட்டத்திற்கு வரும்போது இதற்குப் புதிதாக 'கிலாப்' (போர்வை) அணிவிப்பது வழக்கம். இப்பொழுதிருக்கிற கிலாபானது துருக்கியின் கடைசி சுல்தானால் அணிவிக்கப்பட்டதேயாகும்.

இதனைச் சேர்ந்தாற்போல் வடக்குப் பக்கத்தில் ஸெய்யிதத் துன்னிஸா பாத்திமத்துஜ் ஜஹ்ரா (ரலி.) அவர்களது "ஹுஜ்ரு" இருந்தது. இப்பொழுது அது சமதளமாக இருந்து வருகிறது. இப்பொழுது இதில் இரண்டு அடையாளங்கள் மட்டிலு மிருக்கின்றன. 1. ஸெய்யிதத் துன்னிஸா (ரலி.) அவர்கள் தொழுத இடத்தில் மிஹ்றாபு இருக்கிறது. அதற்குமுன்னால் சுத்தமான சலவைக் கற்கள் அணியணியாகப் பதிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு ஹுஜ்ராக்களுக்கு மிடையில் ஒரு கிராதி அடைக்கப்பட்டு போக்குவரவிற்காகத் தலைவாசல் வைக்கப்பட்டிருக்கின்றது. இப்பகுதிகளின் நான்கு புறங்களிலும் சிவப்புக் கல்லினால் மிகவும் பலமான உயர்ந்த தூண்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குமேலில் மிகவும் கம்பீரமான வளைவுகளிருக்கின்றன. இவைகள் எல்லாவற்றிற்கும்மேலில் தான் வளைவான முகடுள்ள பச்சைகுப்பா இருக்கிறது. தூண்களிலுள்ள வளைவுகளின்மீது வெளிப் பக்கத்தில் பசும்பட்டு பர்தாக்கள் போடப்பட்டிருக்கின்றன. தூண்களுக்கிடையில் வடக்கு கிழக்கு மேற்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் இரும்புக் கிராதி போடப்பட்டிருக்கிறது. தெற்குப் பக்கத்தில் அதாவது எதிரிலுள்ள பக்கத்தில் பித்தளைக் கிராதி மிக அழகாகப் போடப்பட்டிருக்கிறது. இந்தக் கிராதியில் செடி கொடிகளும் கலிமாவும் செதுக்கப்பட்டு தகதகவென இலங்கிக்கொண் டிருக்கின்றன. தெற்குப் பக்கத்திலுள்ள நான்கு தூண்களுக்குமிடையில் மூன்று கிராதிகளிருக்கின்றன. ஒவ்வொரு கிராதியும் இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நடுவிலுள்ள கிராதியில் மேற்குப் பகுதியின் கிழக்கு பக்கமாக ஒரு துவாரம் போடப்பட்டிருக்கிறது. இதனைச் சுற்றிலும் பிறைவடிவம் போல் செய்யப்பட்டிருக்கிறது. இதற்குமுன்னால் நின்றால் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது திருமுகத்திற்கு நேராக நிற்க முடியும். இதற்கு "முவாஜிஹ் ஷரீப்" என்று பெயர். இதற்குக் கிழக்கில் ஒவ்வொரு அடி தள்ளி இரு துவாரங்களிருக்கின்றன. இவைகளில் ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.), உமர்பாரூக் (ரலி.) ஆகியவர்களை ஜியாரத்துச் செய்வதற்குள்ள "முவாஜிஹ் ஷரீபுக"ளிருக்கின்றன. தெற்குப் பக்கத்தில் நடுவில் போடப்பட்டிருக்கும் கிராதியின் மத்தியில் ஒரு சிறு தலைவாசலிருக்கிறது. விசேஷ சந்தர்ப்பங்களில் இத்தலைவாசல் திறக்கப்படுகிறது; இதனை யல்லாமல் கிழக்கிலும் வடக்கிலுமுள்ள கிராதிகளிலும் தலைவாசல்களிருக்கின்றன. கிழக்குப் பக்கத்து கிராதியில் வைக்கப்பட்டிருக்கும் தலைவாசல் வழியாக ரௌலா ஷரீபின் ஊழியர்கள் கிராதிக்குள் காலையிலும் மாலையிலும் செல்கின்றனர். ரௌலா ஷரீபின் நான்குபுறத்துச் சுவர்களுக்கும் இந்தக் கிராதிகளுக்குமிடையில் நான்கு பக்கங்களிலும் போக்குவரத்திற்குத் தக்கவாறு வழி விடப்பட்டிருக்கிறது. இவ்வழியின் தரையில் சலவைக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கிறது. சில கால் மாலைவேளையில் வழக்கமாகப் பன்னீரினால் இத்தரை கழுவப்படுகிறது. சுவரில் போடப்பட்டிருக்கும் பசும்பட்டுத்திரைகளுக்கு அத்தர் தெளிக்கப்படுகிறது.

எனவே ஹாஜிகள் ஐந்துநேரமும் தொழுகை நிறைவேற்றப்பட்டதும் இவ்விடம் வந்து ஹயாத்துந்நபீ (ஸல்.) அவர்களுக்குச் சலாம் சொல்லிவிட்டு ஒரு அடி கிழக்கே தள்ளி ஸித்தீகே அக்பர் (ரலி.) அவர்களுக்குச் சலாம் சொல்கின்றனர். பின்னர் ஒரு அடி கிழக்கே சென்று உமரபாரூக் (ரலி.) அவர்களுக்குச் சலாம் சொல்லிவிட்டு கிப்லாவை நோக்கி அல்லாஹ் தஆலாயிடம் பிரார்த்தனை புரிகின்றனர்.

கிராதிகளுடன் சேர்ந்தாற்போல் வடக்குப் பக்கத்தில் சிறிய நீண்ட திண்ணை ஒன்று சலவைக் கல்லினால் செய்யப்பட்டு அதற்குள் யாரும் செல்லாது தடைச் சங்கிலியும் போடப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் சில சமயங்களில் "தஹஜ்ஜுத்" தொழுகையைநிறைவேற்றி இருக்கிறார்கள். இதற்கு நேர் எதிரில் அதே வடக்குப் பக்கத்தில் ஒரு சதுரமான திண்ணை இருக்கிறது. அதுதான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது காலத்தில் "அஸ்ஹாபுஸ்ஸுப்பா"க்களிருந்த இடம். ஹுஜ்ராவுக்கு மேற்குப் பக்கத்திலுள்ள மஸ்ஜித நபிவியில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது மிஹ்ராபும் மின்பர் ஷரீபுமிருக்கின்றன. இந்த இடத்தைக் குறித்துத் தான் ஹதீதுஷரீபில் "என் வீட்டுக்கும் மின்பருக்குமிடையில் சுவர்க்கத்துப்பூங்காவனங்களில் ஒரு துண்டு இருக்கிறது. என்பதாக நாயகம் (ஸல்.) அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகவே, இதனை ஜனங்கள் தெரிந்து கொள்வதற்காக இதிலுள்ள தூண்களில் வெண் சலவைக் கற்கள் செதுக்கப்பட்டு தங்கத் தண்ணீரால் எழுதப்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள தூண்களெல்லாம் அழகான பித்தளை வட்டத்தின்மீது சிகப்பு வர்ணம் பூசப்பட்ட கருங்கல்லால் அமைக்கப்பட்டிருக்கிறது. இதனையல்லாமல் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்திலிருந்த மஸ்ஜிதின் முற்றத்தை அறிவிப்பதற்கடையாளமாக சிவப்பு வர்ணம் பூசப்பட்ட தூண்களின் தலையில் தங்கப்பூ வேலைகள்செய்து அடையாளமிடப்பட் டிருக்கிறது. கூட்டம் மிகுதமாகயிருக்கும் காலங்களில் ஹாஜிகள் பல மணி நேரங்களுக்குமுன்னதாகவே "ரௌலத்துல் ஜன்னத்"தாகிய மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்குவந்து உட்கார்ந்து குர்ஆன் ஷரீப் ஓதிக்கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவரும் இந்த இடத்தில் தொழவேண்டுமென்று ஆவல் கொள்கின்றனர். அல்லாமலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் வழக்கமாகத் தொழுகையில் இமாமத்துச் செய்த இடமாகிய மிஹ்ராபில் எந்த நேரத்திலும் ஜனங்கள் தொழுது கொண்டேயிருக்கின்றனர். அதற்குச் சமீபத்தில் கூட்டம் அதிகமாக நின்றுகொண்டேயிருக்கிறது.

ஹுஜூரை அக்றம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப்பின் ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்கள் அங்கு ஒரு தடை ஏற்படுத்தி நாயகம் (ஸல்.) அவர்கள் ஸஜ்தாச் செய்த இடத்தை அந்தத் தடைக்குள் மறைத்து விட்டார்கள். எனவே அக்காலத்தில் நாயகம் (ஸல்.) அவர்களது பாதாரவிந்தங்கள் பட்ட இடம் தான் இப்பொழுது ஜனங்களால் ஸஜ்தாச் செய்யும் இடமாக இருந்து வருகிறது. பின்னர் அங்கு மிஹ்ராபு கட்டப்பட்டது. இப்பொழுது அங்கு தொழும்போது தொழுகையாளிகளது நெற்றிகளானவை ஹுஜூர் (ஸல்.) அவர்களது திருப்பாதம் பட்ட இடத்தில் வைக்கப்படுகின்றன.

அந்த மிஹ்ராபு ஷரீபானது வெண்சலவைக் கற்களால் செய்யப்பட்டு தங்க கிலிட்டுகளால் நன்கு பூ வேலைப்பாடுகளுடன் 'நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்மீது சலவாத்துச் சொல்லும்படி இறைவன் கட்டளையிட்டுள்ள திரு குர்ஆன் ஆயத்து தங்க கிலிட்டினால் பொறிக்கப்பட்டிருக்கிறது. மஸ்ஜிதை அலங்கரிக்க வேண்டுமென்ற எண்ணத்தால் அதற்கு நேராக அடுத்த பக்கத்தில் அதாவது நாயகம் (ஸல்.) அவர்களது 'மின்பரு'க்கப்பால் மற்றொரு மிஹ்ராபு வெண்சலவைக் கல்லினால் அதே நமூனவில் மிக அலங்காரமாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு "மிஹ்ராபே சுலைமானீ" என்று பெயர். தவிர, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் மின்பர் ஏற்படுவதற்குமுன் நாயகம் (ஸல்.) அவர்கள் சாய்ந்து நின்று குத்பா ஓதிக்கொண்டிருந்த ஈச்சங்கட்டையானது இவ்விரண்டு மிஹ்ராபுகளுக்குமிடையில் இருக்கிற நாயகம் (ஸல்.) அவர்களது மின்பரின் ஓரத்தில் புதைக்கப்பட்டு, அதற்கு அடையாளமுமிடப்பட்டிருக்கிறது. இந்த மரக்கட்டையைப்பற்றி ஹதீது ஷரீபுகளில் அதிகம் சொல்லப்பட்டிருக்கிறது.

தவிர, மஸ்ஜிதிலுள்ள "ரௌலத்துல் ஜன்னத்" என்ற பகுதிக்குள் சரித்திர சம்மந்தமான சில தூண்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பாய் விரித்துப் படுத்துகொண்டிருந்த இடத்தில் ஒரு தூண் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு "உஸ்துவானயே ஸரீர்" என்று பெயர். தூதுவக் கூட்டத்தினருக்கு நாயகம் (ஸல்.) அவர்கள் பேட்டியளித்துப் பேசிக்கொண்டிருந்த இடத்தில் ஒரு தூண் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு "உஸ்துவானயே வுபூத்" என்று பெயர். இராக்காலங்களில் நாயகம் (ஸல்.) அவர்களது இல்லத்திற்குப்

பக்கத்தில் ஸஹாபிகள் பிரசன்னமாக இருந்த இடத்தில் ஒரு தூண் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு "உஸ்துவானயேஹிராஸ்" என்று பெயர். ஹஜ்றத் அபூலுபாஹ (றலி.) அவர்கள் ஜிஹாதுக்கு வராமற்றங்கிவிட்ட குற்றத்தை மன்னிக்கும்படி இறைவனை வேண்டிக்கொண்டு தம்மை ஒரு தூணில் தாமாகவே கட்டிக் கொண்டிருந்த விபரம் சரித்திரங்களிற் கூறப் பட்டிருக்கிறது. அந்தத் தூணிருந்த இடத்தி லும் ஒரு தூண் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு "உஸ் துவானயே அபூலுபாஹ" என்று பெயர். "உஸ்துவானயே ஸெய்யிதா ஆயிஷா" என்று மற்ருெரு தூண் இருக்கிறது. இந்த தூண்களிலெல்லாம் அந்தந்த தூண்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுளது.

"அஸ்ஹாபுஸ்ஸுப்பா"க்கள் இருந்த இடத் திற்கு வடக்கிலும் "புஸ்தானே பாத்திமா" என்று அழைக்கப்பட்ட மைதானத்திற்கு கிழக் கிலும் பெண்கள் தொழுகை நிறைவேற்றுவதற் காகவென்று தனி இடம் 'பாபுல் மஜீதி' வரை பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 'பாபுன் னிஸா' வழியாகவும், 'பாபுல்மஜீதி' வழியாகவும் இதனுள் செல்லலாம். இந்த விசாலமான இடம் அழகான கிராதி அடைக்கப்பட்டு நேர் த்தியான ஜாலர் வேலைப்பாடுடையதாக யிருக் கிறது. இதற்கு மேல்புறத்தில்தான் மஸ்ஜிதின் திறந்த வெளி முத்தமிருக்கிறது. அத்திறப் புக்கு மேற்கில் நீளமான 'சஹன்' இருக்கிறது.

ஹஜ்றத் உமரபாறூக் (றலி.), உதுமானகனீ (றலி.) இவர்கள் காலத்தில் மஸ்ஜிதுநபவிய்யின் தெற்குப் பக்கமும் விஸ்தரிக்கப்பட்டது. இப் பொழுது இருக்கிற மஸ்ஜிது நபவியின் தெற் குச் சுவரின் மத்தியில் ஹஜ்றத் உதுமான் (றலி.) அவர்கள் காலத்திலேயே மிஹ்ருபு கட்டப்பட்டுளது. இப்பொழுது ஹஜ்ஜு டைய காலத்தில் ஜியாரத்திற்கு வருபவர் களது கூட்டம் அதிகமாக இருப்பதால் இந்த மிஹ்ருபில்தான் இமாம் நின்று தொழு கைகளை நிறைவேற்றுகிருர். ஆனுல், 'ரௌலத் துல் ஜன்னு'விலுள்ள மின்பரில் தான் குத்பா ஓதப்படுகிறது. காமத்துச் சொல்வதற்கு இந்த மின்பருக்குமுன்னுல் சலவைக் கல்வி ஞல் நான்கு தூண்கள் நிறுத்தி ஒரு ஆள் மட்டத்திற்குமேல் ஒரு தளம் போடப்பட்டி ருக்கிறது. அத் தளத்தில்தான் நின்று காமத் துச் சொல்லுகின்றனர். அதிலும் பத்துப் பேர் வரை நின்று தொழலாம். அதன் மேல் செல்வ தற்கு அழகிய பித்தளைப் படிகள் வைக்கப்பட் டிருக்கிறது.

இந்தச் சுவற்றில் அதாவது தற்போதுள்ள மஸ்ஜிது நபவிய்யின் தெற்குச் சுவரில் மஸ்ஜி துக்குள் சலவைக் கற்களில் அல்லாஹுதஆலா வின் திருநாமங்களும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது திருநாமங்கள், திரு குர்ஆன் ஆயத்துகளும் செதுக்கப்பட்டு தங்கத்தால் கிலிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மஸ்ஜி தின் மண்டபங்களின்மேல் வளைவுகளில் புறுதா பைத்துள், யாஸீன் ஸூறத்து முதலியவைக ளும் மிக நேர்த்தியாகப் பொறிக்கப்பட்டிருக் கின்றன.

அங்கு அமைக்கப்பட்டுள்ள சிவப்பு வர்ண முடைய தூண்களுக்கடியில் பித்தளைப் பட்டை பிடித்திருப்பது கண்களைக் கவரத் தக்கதாக விருக்கிறது. பூமிக்கு அழகான வெள்ளை சல வைக் கற்கள் தளவரிசை யிடப்பட்டு பார்ப்ப தற்கு வெகு நேர்த்தியாகயிருக்கிறது. அதன் மீது விலையுயர்ந்த இரத்தனக் கம்பளங்கள் விறிக்கப்பட்டிருக்கின்றன. இரவு மூன்று மணி தொடுத்து மறுநாள் இரவு 9-மணி வரை மக்கள் ஜியாரத்துச் செய்வதும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்மீது அன்புடன் சலாமை எத்தி வைப்பதும், குர்ஆன் ஷரீபு ஓதுவதும் பெரும் ஆனந்தத்தை அளித்து வருகிறது.

'பாபுல் மஜீதி' பக்கல் 'பவர் ஹவுஸ்' ஏற்படு த்தி அதன்மூலம் மின்சாரம் கொண்டுவரப் பட்டு மஸ்ஜிதுக்குள் மின்சார விளக்குகளும் விசிறிகளும் போடப்பட்டிருக்கின்றன. மஸ் ஜிதநபவிக்குள் சென்று ரௌலா ஷரீப் சமீபம் போனவுடனே ஹயாத்துந்நபீ அவர்கள் தர் பார் நடத்திக்கொண்டிருப்பதுபோல் தோன்றி மனதில் ஓர் பரவசமேற்படுகிறது. நாம் எத் தனையோ அரசமாளிகைகளைப் பார்த்திருக் கிருேம். ஆனுல் இந்த மாளிகைக்கு முன் எந்த மாளிகையும் நெகிராகத் தோன்ருது. அதுபொ ழுது இதன் தெரிசனையைத் தந்தருளிய அல் லாஹ்தஆலாவைப் புகழுவதிலீடுபடும்படியான சந்தர்ப்பமேற்பட்டு விடுகிறது; ஆனந்தக் கண் ணீர் வடிய ஆரம்பிக்கிறது. சரியாய் இரவு 10-மணிக்கு "மஸ்ஜிதநபவி" பூட்டப்பட்டு விடி யற்காலை 3-மணிக்கு 'தஹஜ்ஜுத்' தொழுகைக் காக பாங்கு சொல்லும்போது திறக்கப்படுகின் றது. தஹஜ்ஜுத்தொழுகைக்காக பாங்குசொல் லும் வழக்கம் திரு மதீனவில் மட்டுமில்லாமல் மக்கா ஷரீபிலுமிருந்து வருகிறது.

நபிகள் திலகம் (ஸஎ.) அவர்கள் விடுதிகளில், உம்முல் மூமினீன் ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீகா (ரலி.) அவர்கள் வசித்து வந்த இல்லத்தில் ரௌலாஷரீப்'' இருப்பதால் அது மாத்திரம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. அதனை யடுத்துள்ள ஹஜ்றத் பத்திமத்துஜ் ஜஹ்றா (ரலி.) அவர்கள் இல்லமிருந்த இடமும் இதுபொழுது அடையாள மிடப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. மற்றைய "உம்ம ஹாதுல் மூமினீன்"களான நம்பிராட்டிமார்கள் தங்கியிருந்த இல்லங்களெல்லாம் கலீபாக்களின் ஆக்ஷிகாலங்களிலே மஸ்ஜித நபவிய்யின் ஹறம்ஷரீபில் சேர்க்கப்பட்டுப் போயிற்று.

மஸ்ஜித நபவிய்யின் மேற்கு புறத்தில் ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி.) அவர்களது ஹுஜ்ராவிற் நேரே ஹஜ்ரத் ஸித்தீக அக்பர் (ரலி.) அவர்களது வீடுயிருந்த தென குறிப்பிட்டு ஒரு கல்லின்மீது எழுதப் பட்டிருக்கிறது. இது வன்றி மஸ்ஜிதின் தென் கிழக்கில் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரீ (ரலி.) அவர்கள் வீடும், ஹஜ்ரத் உதுமான் (ரலி.) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட இடமுமிருக்கிறது. மஸ்ஜிதுக்கு தென்புறத்தில் நபிகள் நாயகம் (ஸல்,) அவர்கள் சஹாபாக்களுடன் சேர்ந்து ஆலோசனை புரிந்த இடமாகிய "தாருஷ்ஷுரா" இருக்கிறது. இதற்குப் பக்கத்தில் துருக்கியரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள புத்தகசாலை என்னும் பெரிய "குத்புகானு" ஒன்றிருக்கிறது.

"ஜன்னத்துல் பகீஉ"க்கு விஜயம்

9-3-37 மாலை 4-மணிக்கு "ஜன்னத்துல் பகீஉ" சென்று குறிப்பாய் ஹஸ்ரத் உதுமான் (ரலி.), அபூ ஸயீதுல் குக்ரீ (ரலி.), ஹலீமத்துஸ்ஸ அதிய்யா, பெருமானர் (ஸல்.) அவர்கள் புதல்வர் ஹஜ்ரத் இப்ருஹீம். ஹஸ்ரத் இமாம் மாலிக், ஹஸ்ரத் நாபிஉ, பெருமானர் (ஸல்.) அவர்களது நம்பிராட்டிமார்கள், ஹஸ்றத் பாத்திமா நாயகி உள்பட இதர புத்திரிகள், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.), ஹஸ்ரத் ஹஸன் (ரலி.) வகைரா, நாயகம் (ஸல்.) அவர்கள் மாமிமார்கள், பொதுவாய் அங்கு அடக்கமாயிருக்கும் இதர ஸஹாபாக்களின் ஜியாரத்தையும் செய்தோம். மறுமுறையும் ஜும் ஆவுக்குப்பின் இங்கு சென்று ஜியாரத்துச் செய்து வந்தோம்.

"எத்தீம்கானு" மீட்டிங்

11-3-37 காலை 9-மணிக்கு மதீனுவிலுள்ள 'எத்தீம்கானு' என்னும் அனுதைச் சாலையின் மீட்டிங் நடைபெற்றது. ஹைதராபாத் காபிலா ஸாலார் மௌலவீ அல்ஹாஜ் காதிர் முஹையித்தீன் சாஹிப் தலைமை வகித்தார். மாணவர்கள் கிரஅத் ஓதி பிரசங்கம் புரிந்தார்கள். எத்தீம் கானுவின் சேவையைப் பற்றியும் அதற்கு உதவி செய்யவேண்டிய அவசியத்தைப்பற்றியும் தலைவர் தக்க சொற் பொழிவாற்றினர். பலரும் நன்கொடை அளித்தார்கள். நமது காபிலா ஸாலார் அல்ஹாஜ் ஜ. மு. முகம்மது இஸ்மாயில் ருவுத்தர் அவர்களும் நன்கொடை அளித்தார்கள்.

"மஸ்ஜிதுல் குபா" விஜயம்

13-3-37 காலை 8-மணிக்கு பிரத்தியேக மும் தாஜ்லாரி ஏற்பாடு செய்துகொண்டு நபிபெருமானுர் (ஸல்.) அவர்கள் மதீனுவுக்கு ஹிஜ்ரத் செய்துவந்தபோது 14-நாட்கள் வரை தங்கியிருந்து முதல் முதலாக கட்டியதும் குர்ஆன் ஷரீபில் பிரஸ்தாபிக்கப்பட்டதுமான "மஸ்ஜிதுல் குபா" என்னும் பள்ளிவாசலை ஜியாரத்துச் செய்து அவ்விடத்தில் தொழுது பிராத்தனையும் புரிந்தோம்.

"பீரகாத்தம்" கிணறு

பின்னர் நாயகம் (ஸல்.) அவர்களும் மற்ற குலபாக்களும் ஒளுச்செய்ததும், ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்களது கைகளிலிருந்த நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களது மோதிரம் தவறி விழுந்துவிட்டதுமான "பீரகாத்தம்" என்னும் கிணற்றை தரிசித்து தண்ணீரருந்தினேம்.

உஹது மலைக்கு விஜயம்

பின்னர் "உஹது" மலைக்குச் சென்று "உஹத்" யுத்தம் நடைபெற்ற சரித்திர சம்பந்தமான ஸ்தலங்களைப் பார்வையிட்டதோடு பொதுவாக அவ்விடம் ஷஹிதானவர்களையும் குறிப்பாய் ஸைய்யிதுஷ் ஷுஹதா ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி.) அவர்களது கப்ரையும் ஜியாரத்து செய்தோம்.

"மஸ்ஜிதே கிப்லதைன்" விஜயம்

அதன்பின், "மஸ்ஜிதே கிப்லதைன்" அதாவது, ஆரம்பத்தில் பைத்துல் முகத்தஸ் கிப்லாவா யிருந்து பின்னர் கஃபத்துல்லா ஷரீப் கிப்லாவாக ஆக்கப்பட்டபோது இந்த பள்ளிவாசலில் பைத்துல் முகத்திசை நோக்கித் தொழுது கொண்டிருந்தவர்கள் கிப்லா மாற்றப்பட்ட விஷயம் தெரிந்து தொழுகையின்

மத்தியிலேயே கஃபாவின் பக்கல் திரும்பிக் கொண்டார்கள். இச்சரித்திர சம்பந்தமான மஸ்ஜிதுக்குச் சென்று அங்கு, தொழுகையை நிறைவேற்றி பிரார்த்தனை புரிந்துகொண்டு "கந்தக்கை" நோக்கி பிரயாணமானோம். அதாவது "உஹத்" யுத்தம் நடைபெற்ற காலே மதீனாவைச் சுற்றிலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் "அகழ்" தோண்டியிருந்தார்களென்பது சரித்திரச் சான்று. அவ்வகழ் அநேகமாய் தூர்ந்துவிட்ட போதிலும் ஞாபகார்த்தமாக அதில் சிறியதோர் இடம் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதனையும் ஜியாரத்துச் செய்துகொண்டு வீடு வந்து சேர்ந்தோம்.

15-3-37 எங்கள் காபிலாஷெய்கு மௌலானா ஷாஹ் அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீகி அவர்கள் எங்கள் காபிலாவின் யாவர்களுக்கும் மற்றும் சில முக்கியஸ்தர்கட்கும் மௌலிது ஷரீப் விருந்தளித்தார்கள். மதீனாவில் தங்கியிருந்த இந்த 10 தினங்களிலும் மஸ்ஜிதெ நபவிய்யில் விசேஷமாகத் தங்கி ஜியாரத்துச் செய்து வந்ததோடு அத்திருக்ஷேத்திரத்தின் மகிமை, அலங்காரம், அழகு இவைகளைக்கண்டு ஆனந்தசாகரத்தில் மூழ்கினவர்களாக யிருந்துவந்தோம்.

மதீனா சென்றபின் இரண்டு மூன்றுநாட்கள் வரை குளிர் இருந்துகொண் டிருந்ததாயினும் நாளுக்குநாள் கம்மியாகிக்கொண்டே வந்தது. மதீனா வாசிகளுக்கு இஃது குளிரின் கடைசி எல்லையாக விருந்தபோதிலும் எங்களுக்கு அதிகமாகவேதான் காணப்பட்டது.

ரவ்வா ஷரீபைவிட்டு பிரியும்போது
ஹாஜிகட்கு ஏற்படும் துக்கம்

16-3-37 பகல் 10 மணிக்கு மஸ்ஜித் நபவிக்குச் சென்று 'தஹிய்யத்துல் மஸ்ஜித்' தொழுகையை நிறைவேற்றி திரு ரௌலாவை ஜியாரத்துச் செய்தோம். நபி பெருமானார் (ஸல்.) அவர்களின் தர்பாரைவிட்டுப் பிரியும் சஞ்சலத்தால் எங்களுக்கேற்பட்ட கவலைக்கு ஓர் எல்லையிட்டுக் கூறமுடியாது. கண்ணீர் வடித்தவர்களாய் மஸ்ஜிதைவிட்டு வெளியாய் 12-மணிக்கு பஸ்ஸில் பிரயாணமானோம். (எங்கள் காபிலா ஷெய்கு அல்லாமா ஸித்தீகி அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் மதீனாவிலேயே தங்கி விட்டார்கள். இன்ஷா அல்லாஹ் ரபீஉல் ஆகிர் மாதத்தில் திரும்புவார்கள்) 3-மணிக்கு "மஸைஜிதி" மன்ஜிலே அடைந்து லுஹர்தொழுகையை நிறைவேற்றி விட்டு பகல் போஜனமருந்தி சற்று களைப்பாறி 4-மணிக்கு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டோம். இடையில் அஸர் மகரிப் தொழுகைகளை நிறைவேற்றிக்கொண்டு இரவு 'மஸ்தூரா' மன்ஜில் வந்தடைந்து இஷா தொழுகைக்குப் பின் இராப் போஜனமருந்தி துயில் புரிந்தோம். பஜர் தொழுகைக்குப் பின் பிரயாணமாகி 8-மணிக்கெல்லாம் "ராபக்" மன்ஜில் வந்து சேர்ந்தோம். அங்கு மீன் வாங்கி சமயல் செய்து 10-மணிக்கெல்லாம் பகல் போஜன மருந்திவிட்டு $11\frac{1}{2}$-மணிக்கு அவ்விடமிருந்து புறப்பட்டு 3-மணிக்கு "தஹ்பான்" மன்ஜில் வந்தடைந்தோம். அவ்விடம் லுஹர் தொழுகையை நிறைவேற்றி சற்று களைப்பாறி அவ்விடமிருந்து புறப்பட்டு மாலே 5-மணிக்கு ஜித்தா வந்து சேர்ந்தோம்.

ஜித்தாவிலிருந்து பிரயாணம்

27-3-37 சனிக்கிழமை ஜித்தாவிலிருந்து S. S. இஸ்லாமி கப்பலில் பிரயாணமாகி 8-4-47 வியாழக்கிழமை காலே பம்பாய் வந்திறங்கி வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப்பின் 3 மணிக்கு எக்ஸ்பிரசில் பம்பாயிலிருந்து புறப்பட்டு சனிக்கிழமை மாலே 5 மணிக்கு மதராஸ் சென்ட்ரல் ஸ்டேஷன் வந்திறங்கி திங்கட்கிழமை இரவு சென்னை எழும்பூர் ஸ்டேஷனிலிருந்து பிரயாணமாகி எங்கள் காபிலாவினர் அவரவர்கள் ஊர் போய்ச்சேர்ந்தார்கள்.

ஹிஜாஸில் போக்குவரத்து

ஹிஜாஸ் மண்டலமானது, இயற்கையில், மலைகளாலும், மணற் காடுகளாலும் சூழப்பட்டும், விளைவுப் பொருள்களின் குறைவோடு, ஜலக்கஷ்டமும் போக்குவரத்திற்குறிய ரோடு வசதிகளும் அறவேயில்லாது, ஒட்டகங்கள் செல்லும் பாலைவனப் பிராந்தியமாக இருந்து வந்தபோது, அத்துடன் கள்வர் அட்டகாசமும் ஏகமாக அந்நாட்டில் வியாபித்திருந்தன. துருக்கிய ஆட்சியில், சிலபகுதியில் ரோடுகள் ஏற்படுத்தி, ரயிலும் போடப்பட்டதை, மலை வாசிகளான "பத்வி"யர்கள், கூடிச்சேர்ந்து அந்த ரோடுகளை சின்னபின்னப்படுத்தி சீர்குலைத்து பழையபடியே அவைகளை வனமாகச் செய்து வைத்து விட்டார்கள்.

இக்கால் 11 வருடங்களுக்குமுன் அதாவது 1926-ம் ஈசவி ஆண்டில் ஹிஜாஸ் பிரதேசமானது நஜ்து நாட்டை ஆட்சிபுரிந்துவந்த சுல்தான் இப்னு ஸுஊத் வசம் வந்தபோது, அந்நாட்டில் வியாபித்திருந்த கள்வர் அட்ட

காசங்கள் அறவே பறக்கடிக்கப்பட்டதோடு போதிய ஜலவசதியையும் ஏற்படுத்தி, முன்னிருந்த ஒட்டக வாகனங்களோடு ஏராளமான மோட்டார் சர்விஸ்களையும் உண்டாக்கி நீண்ட நாட்கள் பிரயாணங்கள் செய்யும் ஸ்தலங்களை சிலமணிகள், சிலநாட்களில் செல்லத் தக்க வசதிகள், செய்து வைத்திருக்கின்றார். இவை மிகமிகப் போற்றத் தக்கதாகும்.

ஹஜ்ஜுப் பிரயாணத்தின் செலவு விபரங்கள்.

		ரூ.	அ.
சென்னை நகர சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து பம்பாய் விக்டோரியா டெர்மினஸுக்கு டிக்கட் சார்ஜ்		14	10
வழிச்செலவுகளும் பம்பாய் ஸ்டேஷன் செலவுகளும்		5	0
பம்பாயில் தங்கி இருக்கும் நாட்களில் உத்தேசமாய் சாப்பாடுச்செலவுடன் இதர சில்லரை செலவுகள்		10	0
பம்பாய் நகரமல்லாத வெளிப் பிரதேச ஆசாமிகளுக்கு பாஸ்போர்ட்டு பதிவதற்காக கொடுக்கவேண்டியது		3	0
பம்பாயிலிருந்து ஜித்தா துறைமுகம் போக வர 3-வது வகுப்பிற்கு கப்பல் கட்டணம் நபர் 1-க்கு		180	4
1-வது வகுப்பின் சார்ஜ் நபர் 1-க்கு	628 4		
2-வது ஷி ஷி	453 4		
(இதில் ஜித்தா துறைமுகம் போகும்வரை கப்பலில் கொடுக்கப்படும் சாப்பாட்டுச் செலவும், ஜித்தா துறைமுகத்தில் சாமான்களையும் ஆள்களையும் ஏற்றிச்செல்லும் படகுச் சார்ஜும் சேர்க்கப்பட்டிருக்கிறது).			
பம்பாய் முஸாபிர் கானுவிலிருந்து சாமான்களை கப்பலில் ஏற்றப்படும்போது கூலி ஆளுக்கு நபர் 1-க்கு		1	0
ஜித்தாத் துறைமுகம் இறங்கி ஸ்டீம் போட்டில் கரையில் கொண்டுசேர்க்க நபர் 1-க்கு சார்ஜ்		1	0
சாமான் கொண்டுபோகும் போட்காரருக்கு இனும் வழக்கமாகக்கொடுக்கப்படுவது நபர் 1-க்கு		0	8
ஜித்தா சேர்ந்தபின் மக்கா ஷரீபின் நமது முஅல்லிம் ஜனுப் செய்யித் ஹாஷிம் ஷில்லி அவ்விடம் வந்து நம்மைச் சந்திப்பார். அவர் வசம் நபர் 1-க்கு ஸுஊதி கவர்ன்மெண்டால் ஏற்படுத்தப்பட்டபடி கொடுக்கவேண்டியது		62	4
(இதில் ஜித்தாவில் சாமான்களை எடுத்துக்கொண்டுவந்து, அவ்விடம் வக்கீல் பஸ்யூனி இல்லத்தில் சேர்க்கப்படும் கூலி, வண்டி சத்தமும், ஜித்தா வக்கீலின் சார்ஜ், ஜித்தா முனிஸிபாலிட்டியின் வரி, மக்கமா நகர் முனிஸிபாலிடியின் வரி, மக்கா ஹஜ்ஜுக் கமிட்டியின் பீஸ், ஜுபைதா அரிவியின் வரி, ஹறம் ஷரீபில் ஜம்ஜம் ஜலசப்ளை செய்யும் காதிமின் கூலி, மினு, அரபாவில் அடிக்கப்படும் கூடாரங்களின் சார்ஜ், மக்கத்து முஅல்லிமின் பீஸ், மதீனுமுனவ்வராவின் ஐனுஜ ஜர்க்கா அரிவியின் வரி, இவைகள் யாவும் சேர்க்கப்பட்டிருக்கிறது.)			
ஜித்தாவிலிருந்து மக்கமாநகர் செல்ல 4 நெ. பஸ் டாப்பில் துணி அடிக்கப்பட்டது நபர் 1-க்கு		19	4
1 நெ. மோட்டார்காரில் மக்காசெல்ல நபர் 1-க்கு....	37 4		
2 நெ. மோட்டார் சார்ஜ் நபர் 1-க்கு	28 4		
3 நெ. மோட்டார் பஸ் மேலே டாப்பில் பலகை அடிக்கப்பட்டது	25 0		
ஒட்டகையில் மக்காநகர் செல்ல நபர் 1-க்கு	13 0		
மக்காவிற்கு ஜித்தாவிலிருந்து சாமான் ஒட்டகையில் கொண்டுபோவதற்கு நபர் 1-க்கு		5	0
மக்காவில் குடியிருக்கும் வீட்டுவாடகை நபர் 1-க்கு (உத்தேசம்)		10	0

ஒரு மாதம் மக்காவில் தங்கி இருந்தால் நாள் 1-க்கு சாப்பாட்டுச் செலவு ஒரு ரூபாயாக 30 0

ஹஜ்ஜுச் செய்வதற்காக ஹஜ்ஜு மாதம் 8-ந் தேதி மினு சென்று, 9-வது நாள் அரபா சென்று, பின்னர், முஸ்தலிபா வந்து, மினுவும் வந்து 10-வது நாள் கஃபத்துல்லா ஷரீப் வந்து தவாப் ஜியாராவும் செய்து மீண்டும் மினு கொண்டு சென்று 12-வது நாள் மக்கமாநகர் கொண்டுவர 4 நெ. மோட்டார் பஸ் சார்ஜ நபர் 1-க்கு 34 0

1 நெ. மோட்டார்கார் நபர் 1-க்கு 90 0
2 நெ. ஷை கார் நபர் 1-க்கு 67 0
3 நெ. மோட்டார் பஸ் மும்தாஜ் நபர் 1-க்கு 45 0
ஒட்டகையில் அரபா செல்ல நபர் 1-க்கு 9 0

மினு, அரபா முதலிய புண்ணிய ஸ்தலங்களில் 8-வது நாள் முதல் 12-வது நாள் வரை சாப்பாட்டுச் செலவு நபர் 1-க்கு 7 8

மினுவில் உல்ஹியா, தம், கொடுப்பதற்காக அறுக்கப்படும் ஆடு 2-க்குக் கிரையம் ... 8 0

(மினுவில் 5 நபர்கள் இருக்கத்தக்க வீடு பிடிப்பதென்ருல் 3 பவுன் 67-8-0 ரூ. ஆகும்.)

மக்காவில் முஅல்லிம், ஷையாரின் காரியஸ்தர்கள் வகையருக்களுக்கு பக்ஷிஸ், இதர செலவுகள் நபர் 1-க்கு 25 0

மக்காவிலிருந்து மதீனுமுனவ்வரா போகவர 4 நெ. மோட்டார் பஸ்ஸில் பவுன் 8-க்கு 180 0

1 நெ. மோட்டார்காரில் நபர் 1-க்கு 15 பவுன் 343 2
2 நெ. மோட்டார்காரில் நபர் 1-க்கு 263 8
3 நெ. மோட்டார் மும்தாஜ் பஸ்ஸில் நபர் 1-க்கு 241 2
ஒட்டகையில் செல்ல மதினுவிற்கு நபர் 1-க்கு 102 10

(மேலே குறிப்பிடப்பட்ட மோட்டார் சார்ஜ மதீனுவில் இறங்கிய தினத்தையும், அவ்விடமிருந்து பிரயாணிக்கும் தினத்தையும் நீக்கி 8 தினங்கள்வரை அவ்விடம் தங்கி இருப்பதற்காக உள்ள சார்ஜாகும். அதற்குமேல் தங்குவதாகயிருந்தால் வாரம் 1-க்கு ஒரு பவுன் பிரகாரம் பிரத்தியேக சார்ஜ் கொடுக்கவேண்டும்.)

மதீனுவில் வீட்டுவாடகை நபர் 1-க்கு 5 0

மதீனு முஅல்லிம் பாபக்கீஹ் சாஹிப் பீஸ் நபர் 1-க்கு 16 0

மதீனுவில் தங்கி இருக்கும் 10 தினங்களில் ஏற்படும் சாப்பாடுச் செலவுகளும், இதரவும் நபர் 1-க்கு 15 0

மதீனுவிற்கு மோட்டாரில் போகும்போதும் வரும்போதும் தங்கி இருக்கும் மன்ஸில்களில் ஏற்படும் சாப்பாட்டுச் செலவுகளும், மன்ஸில்களில் தங்கும் வாடகையும் சேர்த்து நபர் 1-க்கு 5 0

மோட்டார் டிரைவர் பக்ஷிஸ் நபர் 1-க்கு 1 0

சகல காரியங்களேயும் முடித்துக்கொண்டு திரும்ப ஜித்தா வந்து அவ்விடம் 10 தினங்கள்வரை தங்குவதற்கு வீட்டு வாடகை, சாப்பாடுச் செலவும், மற்றதும் 10 0

ஜித்தா துறைமுகத்தில் படகில் ஏறி கப்பலிற்குவர ஸ்டீம்போட் சார்ஜும் படகுக்காரர் பக்ஷிஸும் சேர்த்து 1 8

பம்பாய் சேர்ந்தபின் கூலிக்கு நபர் 1-க்கு 1 0

அவ்விடம் தங்கும் தினங்கள் 4-க்கு நபர் 1-க்கு 5 0

பம்பாயிலிருந்து மெட்ராஸ் வர ரெயில்வே சார்ஜ் 14 10

.... 670 8

2189/62 600 005

(ஷை யாத்திரையில் சாமான்கள் வாங்குவதற்கும், ஜம்ஜம் [illegible] சம்பழம், தஸ்பீஹ் ஷால் வகையருக்கள் வாங்குவதற்கும் இதர செலவுகளுக்கும் பிரத்தியேகமாக ரூ. 100 கட்டாயம் வேண்டும்)

அறிவிப்பு

இவ்வாண்டு மீலாத் ஷரீப் வைபவக் கொண்டாட்ட மகா சபைகளில் வாசித்துக் காட்டி வினியோகிப்பதற்கென்றே நம் சங்கத்தாரால் தயாரிக்கப்பட்டுள்ள மானிட சிரேஷ்டர் என்னும் ஸீரத் பிரசங்க நூல் அழகான முறையில் அமைந்து மக்களுக்குப் பிரயோசனம் தருவதாக விருப்பதால் வழமைபோல் நாம் "நாயக மலர்" வெளியாக்கவில்லை. ஆதலின் அன்பர்கள் மானிட சிரேஷ்டர் என்னும் மகிமை பொருந்திய பிரசங்கத்தை வாங்கிப் படித்து பிரயோசனம் பெறுவார்களாக !

அன்பர்கட்கு !

இவ்வாண்டு நாம் ஹஜ்ஜுக்குச் சென்றுவந்ததின் ஞாபகார்த்தமாக ஹஜ்ஜு, ஜியாரத்தின் முக்கியாம்சங்கள் அமைந்த அரும் நூலொன்று தயாராய் வருகிறது. அதில் புண்ணிய க்ஷேத்திரங்களின் முக்கிய விஷயங்களும், அந்தந்த இடங்களில் புரியவேண்டிய அமல்களின் மஸ்அலாக்களும், முக்கிய ஸ்தலங்களின் போட்டோப்படங்களும் தக்க விதமாய் அமைக்கப்பட்டு வருகிறது. ஹஜ்ஜின் சகல விஷயங்களையும் தெரிந்து கொள்ள நாடும் அன்பர்கள் இந்நூல் வெளிவருவதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களாக.

—ஆசிரியர்.

"யவ்முந்நபி"

திருநபி தினக் கொண்டாட்டம்

சத்தியத்தூதர், உத்தமகுணசீலர் மானிடசிரேஷ்டர், 'முகம்மது நபி (ஸல்.) அவர்கள் உலகின்கண் தோன்றி, முன் மாதிரியாய் விளங்கியதையும் அவர்கள் மானிட வர்க்கத்துக்குச் செய்துள்ள பேருபகாரங்களையும் அவைகளினால் மானிடர் அடைந்துள்ள நன்மைகளையும் நம்மவரும் இதரர்களும் தெரிந்து கொள்ளுவதற்கும், அதனை மக்களிடையே பரத்துவதற்கும் ரபீஉல் அவ்வல் 12-ந் திகதி ஏற்ற தினமாகும். அத்தினம் இவ்வாண்டில் 23-5-37 ஞாயிற்றுக்கிழமை வருகிறது. அன்றைய தினத்தில் ஒவ்வொரு இடங்களிலும் மாபெரும் ம... நாடுகள் கூட்டி, நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கைச் சரிதை, ஹிதோபதேசம் முதலியவைகளை மக்களுக்கு விளக்குவதுடன் உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாரால் ...க்கப்பட்டிருக்கும் "மானிட சிரேஷ்டர்" என்னும் ஸீரத் பிரசங்க நூலை வாசித்துக் காட்டி ஏராளமான பிரதிகளை வினியோகிக்கவேண்டும். பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது மகத்துவம் முன் மாதிரி இவைகள் உலகமெங்கும் மிளிர்ந்திலங்க வேண்டுமென்பதைக் கருதி அகில உலக ஸீரத் கமிட்டியார் அபார முயற்சி செய்துவருகிறார்களென்பது உலகமறிந்த விஷயம். அன்றையதினம் ஒரே பிரசங்கம் உலகமுழுவதிலும் படிக்கப்படவேண்டுமென்பதே அவர்களின் நோக்கமாகும். எனவே, அவர்கள் இவ்வாண்டின் மீலாத்ஷரீப் விழாவிற்கென்றே, தயாரித்துள்ள பிரசங்கத்தை நம் சங்கம் மொழிபெயர்த்து அச்சிட்டிருக்கின்றது. அன்று பிரசங்கிப்பதற்கும், வினியோகிப்பதற்காகவுமென்றே தயாரிக்கப்பட்டிருக்கும் இப்பிரதிகளின் கிரயம் காகிதங்களின் கிரயம் இறட்டிப்பாகயிருக்கும் நிலைமையிலும் மிகச்சொற்பமாகவே வைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், இவைகளை வாங்கி பயன் பெறுவீர்களாக.

100 பிரதிகளுக்கு குறையாது ஆர்டர் செய்பவர்களின் பெயர்களை அத... அட்டையில் பிரசுரித்துக் கொடுக்கப்படும்.

போஸ்டேஜ் அதிகமாவதால் நண்பர்கள் தங்களுக்குத் தேவையுள்ளவைகளின் கிரயத்தை அனுப்பிவைத்து சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டே... தெரிவித்தால் அனுப்பிவைப்பதற்குச் சௌகரியமாகவிருக்கும்.

1000	பிரதிகள்	...	ரூ.	25—0—0
500	ஷை	...	ரூ.	13—0—0
250	ஷை	...	ரூ.	7—0—0
100	ஷை	...	ரூ.	3—0—0

தபால் சார்ஜ் வேறு

218942

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43, போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்.

Printed by V. Sundaram Iyer at the Kesari Printing Works & Edited & Published by Moulv... A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43, Post Office St., G. T., Madras.